878

தமிழ்ப் பெருமாட்டி.

மார்ச்சு, 1934.

JL
1 m211, N34
N34
1932.59

## அத்தியாயம்—4.

## துப்பறியும் சுப்பம்மா—பேயோட்டிப் பண்டாரம்

லப்-ஜட்ஜ் கந்தசாமியும், அவருடைய நண்பர் துரைஸாமியும் இரண்டு சிப்பந்திகளுடன் சென்னையை யடைந்தனர். சிப்பந்திகளில் ஒருவர் சமயல்காரப் பிராம்மணர்; இன்னொருவன் சேவகன். தாம் திருநடன வைபவம் பிள்ளைக்கோ, அவரைச் சேர்ந்தவர்களுக்கோ தெரியாதபடி, அவருடைய பங்களாவிற்கு மிக அருகில் ஏதாவது ஒரு ஜாகையில் சில தினங்கள் வரையில் தங்கியிருந்து, தாம் கோரி வந்த விஷயத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டு போக வேண்டுமென்று ரயிலில் வரும்போதே கந்தசாமியும், துரைஸாமியும் தீர்மானித்திருந்தார்கள்.

ஆகவே. அவர்கள் ரயிலை விட்டிறங்கியவுடன் ஸர் சவலை ராமசாமி முதலியார் சத்திரத்தில் இருந்துகொண்டு, சிப்பந்திகள் இருவரையும் தேனாம்பேட்டைக்கு அனுப்ப, அவர்கள் ஊர் முழுதிலும் சுற்றித் தேடி, தேனாம்பேட்டை வரசித்தி விநாயகர் கோவில் தெருவில் காலியாயிருந்த வசதியான ஒரு மெத்தை வீட்டை வாடகைக்குப் பேசித் தம் வசப்படுத்திக்கொண்டு வந்து சேர, நண்பர்கள் இரு

193259



வர்களும் தமது சாமான்களுடனும் சிப்பந்திகளுடன் உடனே புறப்பட்டு அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர்.

அந்த வீட்டை யடைந்து நாற்புறங்களையும் கவனித்துப் பார்த்த கந்தசாமிக்கு ஒரு விஷயம் மிகுந்த ஸந்தோஷத்தையும் திருப்தியையும் உண்டாக்கியது. அவர்கள் எடுத்துக்கொண்ட வீட்டிற்குப் பின்புறத்தில் ஒரு வெற்றிலைக் கொடிக்காலும், அதற்கப்பால் திருநடன வைபவம் பிள்ளையினுடைய பங்களாவும் அமைந்திருந்தன. ஆகையால், அந்த வீட்டின் இரண்டாவது மாடமாகிய மொட்டை மெத்தையின்மீ திருந்து பார்த்தால், திருநடன வைபவம் பிள்ளையினுடைய வனமாளிகைக்குள்ளிருந்த கட்டிடத்தின் பெரும்பாகமும் நன்றாய்த் தெரிந்தது. ஆனால் அந்த பங்களாவின் முன்வாசல் வேறு ரஸ்தாவில் இருந்ததாகையால், அதற்குப் போகவேண்டுமானால், ஒருவர் சுமார் கால் மயில் தூரம் சுற்றிக்கொண்டு போகவேண்டும்.

ஆனாலும், தாம் இன்னார் என்பது எவருக்கும் தெரியாதபடி அந்த விட்டில் இருந்தவண்ணமே, திருநடன வைபவம் பிள்ளையின் பங்களாக் கட்டிடத்தை கவனித்துக் கொண்டிருந்தால், ஒருகால், அவருடைய பெண்கள் தமது திருஷ்டியில் படலாமென்றும், அவர்கள் அழகு, தோற்றம், நடவடிக்கைகள் முதலியவற்றில் எப்படி இருக்கிறார்கள் என்பதைத் தாம் ஒருவாறு நிச்சயிக்கலாமென்றும் கந்தசாமி உடனே தமக்குள் தீர்மானித்துக் கொண்டாரானாலும், அவர்களுடைய செய்கைகளின் மர்மங்களைத் தாம் சந்தேகமற எப்படித் தெரிந்துகொள்வது என்பதைப்பற்றிப் பற்பல வகையான யுக்திகளைச் சிந்தித்துக்கொண்டிருந்தார். அது போலவே துரைஸாமியும் அதே விஷயத்தில் தமது முழு

031 m 211, N34
N34



கவனத்தையும் செலுத்தியபடி மௌனமாய் இருந்த வண்ணம் மனதிற்குள் பல திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தார்.

அவர்கள் இன்ன கருத்தோடு திடீரென்று புறப்பட்டு சென்னைக்கு வந்திருக்கிறார்கள் என்ற தகவல் சிறிதும் சிப்பந்திகளுக்குத் தெரியாதாகையால், அவர்கள் நிச்சலனமான மனதோடு தமது அலுவல்களை கவனித்து, நண்பர் இருவருக்கும் ஆகவேண்டிய சௌகரியங்களை கவனித்தனர். ஆனால், அயலார் எவரேனும் 'அந்த வீட்டில் இருப்பது யார்?' என்று கேட்கும் பட்சத்தில், இன்னார் வந்திருக்கிறார்கள் என்ற உண்மையை வெளியிட வேண்டாமென்று துரைஸாமி சிப்பந்திகளிடம் கூறி எச்சரித்து வைத்தாராதலால், அவர்கள் இருவரும் அது போலவே மிக ஜாக்கிரதையாக நடந்து, அண்டை வீடுகளிலிருந்த மனிதர்களோடு பேச்சுக் கொடுக்காமலும், எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளாமலும் அடக்கமாகவே இருக்கத் தொடங்கினர்.

ஆனாலும் வீட்டின் தெரு வாசல் பெருக்குதல், பற்றுப்பாத்திரங்களைத் தேய்த்தல் முதலிய அலுவல்களைச் செய்யத் தமக்கு ஒரு வேலைக்காரி தேவையென்பதை அவர்கள் உணர்ந்தார்களானாலும், தம் எஜமானர் அவ்விடத்தில் எவ்வளவு காலம் தங்க உத்தேசிக்கிறாரோ என்பது தெரியாமையால், அவர்கள் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்க அஞ்சி இருந்தனர்.

அவர்கள் அந்த ஊரை யடைந்த தினம், வேலைக்காரன் வெளியில் போய், பால், தயிர், விறகு, காய்கறிகள் முதலிய பல சாமான்களை வாங்கிவர நேர்ந்ததாகையால்,

அவன் சமயல்காரருடைய விருப்பத்திற்கிணங்க, அடிக்கடி வெளியில் போவதும் வருவதுமாயிருந்தான். சமயல்காரர் இரண்டாவது கட்டிலிருந்த சமயலறையில் தமது உத்தியோக அலுவல்களைச் செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

முன்கட்டுக் கூடத்தில் இரண்டு ஸித்தான் நாற்காலிகளில் கந்தசாமியும், துரைஸாமியும் உட்கார்ந்து, தாம் கருதி வந்த விஷயத்தைப்பற்றி நிரம்பவும் கவலையோடு சம்பாஷித்திருந்தனர்.

துரைஸாமி :—இந்த வீடு நமக்குக் கிடைத்தது ஒரு நல்ல அறிகுறி. இன்னார் வந்திருக்கிறார்கள் என்பதை எவரும் தெரிந்துகொண்டு போய் அவர்களிடம் சொல்ல மாட்டார்கள். நாம் பக்கத்திலிருந்தபடியே, இரகஸியங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

கந்தசாமி:—(சந்தோஷ முகமலர்ச்சியோடு) மொட்டை மெத்தையில் இருந்துகொண்டு பார்த்தால், அவர்களுடைய கட்டிடத்தின் தாழ்வாரம், கூடம் எல்லாம் தெரிகின்றன. மனிதர் போவது வருவதுகூட நன்றாய்த் தெரிகிறது.

துரைஸாமி :—ஆம். அதை நானும் கவனித்தேன். மாலை வேளையில் நீ அங்கே போய் இருந்து பார்த்தால், ஒருவேளை உன் எஜமானியம்மாள்கூட உனக்குக் காட்சி கொடுத்தாலும் கொடுக்கலாம். நீ இன்னம் அவர்கள் யாரையும் பார்த்ததில்லையே?

கந்தசாமி :—(சிரித்துக்கொண்டு) நான் அவரை மாத்திரந்தான் பார்த்திருக்கிறேன்.

துரைஸாமி :—எப்போது பார்த்தாய்?

கந்தசாமி :—அவர் மந்திரி உத்தியோகம் பெற்றவுடன் தஞ்சாவூருக்கு வந்தாரல்லவா. அப்போது, ஜில்லா ஜட்ஜி, நான், இன்னம் மற்ற உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் போய் அவரைப் பார்த்தோம்.



துரைஸாமி :—அப்போது நான் எங்கே போயிருந்தேன்?

கந்தசாமி :—அப்போது நீ ஏதோ அவசர காரியமாய் உன் மாமனாருடைய ஊருக்குப் போயிருந்தாய்.

துரைஸாமி :—ஓகோ! அப்போதா வந்தார்! சரிதான். அப்போது இவருடைய சம்சாரம் முதலியவர்களும் கூட வரவில்லையோ? இது துரைமார்கள் வகிக்கக்கூடிய பெரிய உத்தியோகமல்லவா? வெள்ளைக்காரர்கள் செய்வது போல் சம்சாரம் முதலியோரைத் தம்மோடு கூடவே பகிரங்கமாய் அழைத்துக் கொண்டுபோய், எல்லோருக்கும் அவர்களை அறிமுகப்படுத்தி வைக்காவிட்டால், இந்தக் காலத்திற்கு அது அவ்வளவு கௌரதைப் படாதே!

கந்தசாமி :—அது மாத்திரம் போதாது; வருகிறவர்கள் எல்லோரும் இவருக்கு மாலை போடுவதற்கு முன், இவருடைய சம்சாரம், பெண்கள் முதலியோருக்கு மாலையிட்டு அதற்குப் பிறகே இவருக்கு மாலையிட வேண்டும்! முதலில் அவர்களுடைய கையைத் தொட்டுக் குலுக்க வேண்டும். இவருடைய மனைவியை மிஸஸ் கிருஷ்ண வைபவம் பிள்ளையென்றும், பெண்ணை மிஸ் கிருஷ்ண வைபவம் பிள்ளையென்றும் குறிக்கவேண்டும். இவருக்கு எவரேனும் விருந்தளித்தால், விருந்துண்ணும்போது விருந்தளிப்போரும், விருந்தாளியும் தம் தம் சம்சாரத்தை இரவல் கொடுத்துக் கொள்ள வேண்டும். இது வெள்ளைக்காரரால் பிரத்தியேகமான ஒரு கௌரதையாய்க் கருதப்படுகிறது. அப்போது தான் அந்த போஜனத்திற்கே ஒரு தனியான புதிய ருசி ஏற்கிறது.

துரைஸாமி :—சாப்பிடும்போது மாத்திரமா அது நடக்கிறது. சாப்பிட்ட பிறகு போட்டோப்படம் பிடிக்கிறபோதுதான் அந்தமாதிரி சம்சாரங்களை இரவல் கொடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அந்தக் காட்சி நிரந்தரமாயிருக்கும். அதைப் பார்க்கும்போதெல்லாம், அந்த ஸ்திரீ தம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த நினைவுண்டாகும்; பரஸ்பர அன்பும், மன இளக்கமும் எப்போதும் நீடித்திருக்கும். இதெல்லாம் சுலபமான லௌகிக யுக்திகள். இவைகளால் ஏற்படும் அநுகூலங்கள் அநந்தமானவை.

கந்தசாமி :—இதற்கு முன் நம் நாட்டில், அரசர்கள் ஆண்ட காலத்தில், மந்திரிகள் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் இல்லையா! புருஷர் புருஷரோடு பழகுவார்கள்; ஸ்திரீகள் ஸ்திரீகளோடு பழகுவார்கள். மந்திரியினுடைய சம்சாரத்தோடும் பெண்களோடும் அரசனும், அரசனுடைய சம்சாரத்தோடும் பெண்களோடும் மந்திரியும் தாராளமாய்ப் பழகுவதை அவர்கள் ஒரு பெருமையாய் மதித்ததாக யாரும் சொல்லவில்லை; புத்திசாலித்தனத்தினாலோ, மூடத்தனத்தினாலோ அந்த ஒரு பெருமையை மாத்திரம் நம்மவர் எந்தக் காலத்திலும் நாடினதில்லை. இந்தத் திருநடன வைபவம் பிள்ளையும் அந்தப் பழைய கர்னாடகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்தான்போலிருக்கிறது. இவர் வந்தபோது, இவருடைய சம்சாரம் முதலியோர் எவரும் கூட வரவில்லை. இவர் மாத்திரம் தனியாகவே வந்தார்.

துரைஸாமி :—அப்படியானால் இவருடைய சம்சாரமும், பெண்களும் கருப்போ, சிவப்போ, அழகாயிருப்பார்களோ, விகாரமாயிருப்பார்களோ என்பதுகூட உனக்குத் தெரியாது; கண்ணப்பா தானே வந்து இந்த சம்பந்தத்தை நிச்சயப்படுத்தியது. அவராவது உள்ளே இருக்கும் ஸ்திரீ



களைப் பார்த்தாரோ இல்லையோ என்பதுகூட நமக்குத் தெரியவில்லை.

கந்தசாமி :—அவரும் ஸ்திரீ ஜனங்களைப் பார்த்திருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன். என்னைவிட அவருக்கு இந்த விஷயத்தில் கூச்சம் அதிகம். ஸ்திரீகள் யாராயிருந்தாலும், என் அண்ணன் நிமிர்ந்து, அவர்களுடைய முகத்தையோ, உடம்பையோ பார்க்க மாட்டார்.

துரைஸாமி :—பெண்களுடைய போட்டோப் படத்தையாவது தருவித்துப் பார்க்க வேண்டாமா?

கந்தசாமி:—அதை யாரிடத்தில் எப்படிக் கேட்கிறது? அப்படியெல்லாம் கேட்டால், பெண்ணைப்பற்றி சந்தேகிப்பதுபோலவும், அவர்களை நம்பாமல் அகௌரவப்படுத்துவதுபோலவும் அவர்களுக்கு மனதில் பட்டுவிடுமோ என்ற அச்சத்தினால் என் அண்ணன் அப்படியெல்லாம் கேட்க மாட்டார். இதிலெல்லாம் நம்பிக்கைதான் பிரதானம். இவ்வளவு மேலான இடத்துப் பெண்ணாகையால், அது எல்லாவிதங்களிலும் நம் யோக்கியதைக்குத் தகுந்ததாகவே இருக்கும் என்னும் நம்பிக்கையினால்தான், இப்படியெல்லாம் துணிந்து இறங்குகிறது.

துரைஸாமி :—உன் அண்ணனோடு, உங்கள் தாயார், அல்லது, உன் அண்ணி முதலியவர்கள் யாராவது வந்திருந்தாலும், அவர்கள் ஸ்திரீ ஜனங்களோடு பழகி, பெண் நம் யோக்கியதைக்குத் தக்கபடி இருக்கிறதா என்பதை சுலபத்தில் தெரிந்துகொண்டிருப்பார்கள்.

கந்தசாமி :—என் அண்ணனோடு பெண்பிள்ளை யாராவது வந்திருப்பார்களென்றே நினைக்கிறேன். இல்லாவிட்

டால், அவர்கள் எனக்கு அவ்வளவு உறுதியாய் எழுதி இருக்கமாட்டார்கள்.

துரைஸாமி :—ஆயிரந்தான் மற்றவர் பார்த்திருந்தாலும், உனக்கு மனைவி ஆகப்போகிற பெண் எப்படி இருக்கிறதென்று பார்க்க வேண்டுமென்ற ஓர் ஆவல் உன் மனதில் ஏற்படவில்லையா ?

கந்தசாமி :—அது ஏற்படாமல் இருக்குமென்று சொன்னால், யாராவது என் சொல்லை நம்புவார்களா? பெண்ணைப் பார்க்க வேண்டுமென்று என் மனதில் ஒரு துடிப்பு இருந்துகொண்டுதானிருக்கிறது. வெட்கம் வந்து போராடுகிறது. எந்த விதமாய் நாம் அவர்கள் இருக்குமிடத்திற்குப் போய் அவர்களைப் பார்க்கிறது? அல்லது, அவர்களுடைய போட்டோப் படமிருந்தால் கொடுங்களென்று யாரிடத்தில் கேட்கிறது? அவர்களை நேரில் பார்க்க வேண்டுமானால், அதைத் திருட்டுத்தனமாகச் செய்யவேண்டும். அவர்களுடைய போட்டோப் படத்தைப் பெறவேண்டுமானால், பிறர் எவர் மூலமாகவாகிலும் அதை அபகரிக்க வேண்டும். இரண்டும் நம் கண்ணியத்திற்குத் தக்க காரியங்களன்று.

துரைஸாமி :—நீ ஒரு காரியம் செய். காலை மாலைகளில் இந்த வீட்டின் மொட்டை மெத்தையில் போய் இருந்து, அவர்களுடைய பங்களாப் பக்கம் உன் பார்வையைச் செலுத்தியபடி கவனி. அவருடைய மனைவியோ, அல்லது, பெண்களோ ஒருகால் உன் திருஷ்டியில் பட்டாலும் படலாம். மூவரில் ஒருவரைப் பார்த்தாலும், மற்றவரும் அநேகமாய் அப்படியேதான் இருப்பார்களென்று நீ நிச்சயித்துக் கொள்ளலாம்.

கந்தசாமி :—(வேடிக்கையாக நகைத்து) அவர்களுடைய வீட்டிற்கு அன்னியர்களோ அல்லது விருந்தாளி



களோ வந்திருந்து, அவர்கள் என் திருஷ்டியில் பட்டால், நான் கொள்ளும் அபிப்பிராயம் தவறாய் அல்லவா முடியும்.

துரைஸாமி :—அப்படி நாலைந்து தினங்கள் பார்த்துக் கொண்டே இருந்தால், வெவ்வேறு மனிதர்கள் வருவது தெரியும். அதிலிருந்து நாம் ஒருவாறு யூகித்துக் கொள்ளலாம்.

—என்று அவர்கள் தமக்குள் சம்பாஷித்திருந்த காலத்தில், யாரோ நடைப்பக்கத்தில் நின்று மெல்லக் கனைத்த ஓசையுண்டாயிற்று. நண்பர்கள் இருவர்களுடைய கவனமும் உடனே அதில் சென்றது. அவர்கள் தங்களது சம்பாஷணையை நிறுத்திவிட்டு நடைப்பக்கம் பார்த்தனர். யாரோ ஒரு ஸ்திரீ தனது முகத்தை உள்பக்கம் நீட்டுவதும், நாணிக் கீழே குனிந்து கொள்வதுமாய், மிகுந்த அச்சமும், கிலேசமும் கொண்டவள்போல் பேச மாட்டாமல் தவிக்க, அவளைக் கண்ட நண்பர்கள் இருவரும் விஷயம் இன்னதென்பதை யூகித்தறிந்துகொள்ள மாட்டாதவர்களாய் வியப்போடு அவளை உற்று நோக்கினர்.

சுமார் முப்பது வயதடைந்திருந்தவளாய்க் காணப்பட்ட அந்த ஸ்திரீ தனது தலையை நிமிர்த்தி அவர்களைப் பார்த்து ஏதோ பேச உதட்டை அசைப்பதும், வெட்கிக் கீழே குனிவதுமாய் நடிக்க, உடனே துரைஸாமி, "யாரம்மா? என்ன வேண்டும்?" என்று மிக விநயமான குரலில் வினவினார்.

உடனே அந்த ஸ்திரீ சிறிது துணிபடைந்தவளாய்க் கனைத்துத் தன் தொண்டையின் அடைப்பை விலக்கி வழி செய்துகொண்டு, பேசமுயற்சித்தாள். அவளுடைய அங்கங்கள் படபடத்து நடுங்குவது நன்றாய்த் தெரிந்தது. அச்சத்

தினால் அவளுடைய குரல் தடுமாறியதும் சுலபத்தில் தெரிந்தது.

அவள் மேன்மேலும் கனைத்துக்கொண்டு, பன்முறை எச்சிலை விழுங்கிக் குனிந்து நிமிர்ந்து தத்தளித்து, "இல்லீங்க, ஒண்ணுமில்லீங்க", என்று இரண்டு மூன்று தடவை அர்த்தமற்ற சொற்களைக் கூறிவிட்டு, "இந்த ஊட்டுக்குப் புச்சாக் குடுத்தனம் வந்திருக்காங்கன்னு கடைசி ஊட்டுலெ பேசிக்கினாங்க. ஊடு பெருக்கக்கொள்ள, பத்துக் கித்துத் தொலக்க ஆளு வேணும்னு இந்த ஊட்டு வேலைக்கார ஐய்யா ஆருக்கிட்டயோ சொன்னாங்களாம். அதுக்காவப் பாத்துப்புட்டுப் போவலாமுன்னு வந்தேனுங்க" என்று தட்டித்தடுமாறிக் கூறியது ஓரே காலத்தில் ஐந்தாறு குழந்தைகளைப் பெற்றதுபோல அவ்வளவு சுலபத்தில் நிறைவேறியது.

உடனே நண்பர்கள் இருவரும் விஷயத்தை கிரகித்துக் கொண்டனர். ஆனால், தாங்கள் மறைந்திருந்து திருநடன வைபவம் பிள்ளையினுடைய புதல்வியரின் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ளக் கருதினராதலால், அன்னியரை வீட்டில் சேர்க்க அவர்கள் விரும்பவில்லை. ஆயினும், தாம் அங்கிருக்கும் வரையில் வீட்டின் முன் வாசல் முதலியவற்றைப் பெருக்க ஒரு வேலைக்காரி அவசியம் தேவை என்பதை அவர்கள் உணர்ந்தனராதலால், அவளுக்கு உடனே மறுமொழி கொடுக்க மாட்டாமல் தயங்கிச் சிறிதுநேரம் மௌனமாயிருந்தனர்.

அந்த ஸ்திரீ துணிவும் திடமும் அடைந்து மறுபடியும் பேசத்தொடங்கி, "நானு மத்தவிங்களெப்பேலெ, தய்ட்டத்தன்மா நடந்துக்கறவ இல்லீங்க. இந்த ஊருலெ



இதுவரையிலே எத்தினியோ பெரிய மனிசரு ஊட்டுங்கள்ளெ வேலெ சேஞ்சு நல்ல பேரு எடுத்திருக்கறேனுங்க. அப்பிடி நானு திருட்டுப்பொரட்டு அந்தமாதிரியான கெட்ட நடவடிக்கெ எதுவும் வச்சுக்கறவ இல்லீங்க. எம்பாடுண்டு நானுண்டுன்னு போறவங்க. எங்க அக்கா இதோ பக்கத்துத் தெருவுலெ பெரிய மந்திரி உத்தியோகம் பாக்கறவங்க வங்களாவுலெ வேலை பாக்கறா. அவளெ வோணாலும் இட்டாறேனுங்க. என்னெப்பத்தி அவ சாமீனா இருப்பா" என்றாள்.

அதைக் கேட்டவுடன் கந்தசாமி சரேலென்று முகத்தெளிவும் ஊக்கமும் கொண்டு, துரைஸாமியுடன் இங்கிலீஷில் பேசத் தொடங்கி, "இவளை அமர்த்திவிடு. இவளுடைய அக்காள் அங்கே இருக்கிறாளாம். நாம் கோரி வந்தகாரியத்தை நிறைவேற்ற, இவள்தான் சரியான ஆசாமி. இதுவும் ஒரு நல்ல குறிதான்" என்று தணிவான குரலில் ஆவலோடு கூறினார்.

உடனே துரைஸாமி அந்த ஸ்திரீயை நோக்கி, "உன் அக்காள் யாருடைய பங்களாவில் இருக்கிறாள்?" என்றார்.

அந்த ஸ்திரீ :—இதோ நம்ப ஊட்டுக்குப் பின்னாலெ வெத்தலைக் கொடிக்காலுக்கு அன்னாண்டை இல்லீங்க பெரிய வங்களா; அதுலெதான் எங்கக்கா வேலை பாக்கறா. அவுங்க தெக்குச் சீமேலெ பெரிய சமீந்தாராம்; இப்ப நம்ப கவுணரு கச்சேரிலெ மொத மந்திரியாம். அந்த ஐயாவுக்கு மாஷம் அஞ்சாயிரம் ரூவா சம்பளமாம். அவுங்க பொண்ணுங்களுக்குக்கூட இப்ப கண்ணாளம் நடக்கப் போவுதுங்க.

துரைஸாமி:—ஓகோ! அப்படியா! உன் அக்காளுக்கு அந்த பங்களாவில் எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்களோ?

அந்த ஸ்திரீ:—அவுளுக்குக் குடுக்கறாங்க மாஷம் பத்து ரூவா. சம்பளம் தவுர, ரெண்டு வேளெ சாப்பாடு, ரெண்டு வேளெ பலவாரம் காப்பி, துணிமணி எல்லாம் தண்டியா அம்பிடுதுங்க.

துரைஸாமி:—உன் அக்காள் அங்கே என்னென்ன வேலைகள் செய்கிறது?

அந்த ஸ்திரீ:—அந்த ஊட்டு எசமானியம்மா, பொண்ணுங்க ரெண்டு பேரு. ஆக மொத்தம் மூணு பேருக்கும் பொடவை தோச்சுப் போட்றது. அவுங்க குளிக்கறபோது கூட இருக்கறது. தலைபின்னி வுட்றது. நகை போட்டு வுட்றது. படுக்கை போட்டு வுட்றது. அவுங்க சொல்லற அலுவலையெல்லாம் கேக்கறது. எங்க அக்காளெப்போலெ இன்னும் மூணு வேலைக்காரிங்க இருக்கறாளுவ. ஒத்தத்தொரு ஒவ்வொரு சோலியெப் பாக்கறது.

துரைஸாமி:—உன் அக்காளை நீ அடிக்கடி பார்க்கிறதுண்டா?

அந்த ஸ்திரீ:—பாக்காமெயா! ராவுலெ அவுங்கள்ளாம் படுத்துக்குன பொறவாலெ, எங்க அக்கா எங்க வூட்டுக்கு வந்துடுவா; விடிகாத்தாலெ எந்திரிச்சுப் பூடுவா. பவல்லெ ஒருநடை வந்துட்டுப் போவா. அவுளுக்குப் புருசன் புள்ளெயெல்லாம் இருக்கறுவளே; அவுங்க சொம்மா வுட்டுடு வாங்களா!

துரைஸாமி:—(புன்னகை செய்து) உன் பெயர் என்ன?

அந்த ஸ்திரீ:—எம்பேருங்க, வந்து, வந்து, எம்பேருங்க, சுப்பம்மாங்க.



துரைஸாமி:—இப்போது நீ வேறே எங்கேயாவது வேலை பார்க்கிறாயா?

சுப்பம்மா:—அதெல்லாம் எங்ஙனேயும் வேலை சேயலீங்க. சொம்மாப் பொய் சொல்லச் சொல்றீங்களா. போன மாஷம் வரையிலெ நானு ஒரு ஐயரு வூட்டுலே வேலை பாத்தேனுங்க. அந்த ஐயருக்கு இஞ்சினீரு வேலை. வடக்கே என்னமோ ஊராம். பேசவாடாவோ என்னமோன்னு சொன்னுங்க. அவுங்க வூட்டுலெ நானு அஞ்சு வருசம் வேலெ பாத்தேன். என்னெ அந்த அம்மா தங்க சொந்தப்பொண்ணு மாதிரி பிரியமா நடத்தினுங்க. அவுங்க கூடவே வந்துடறியான்னுகூடக் கேட்டாங்க. நானு எப்பிடிப் போறதுங்க? கட்டின புருசன் வுடுவானுங்களா?

துரைஸாமி:—சரி; உன்னைப் பார்த்தால், நல்ல மாதிரியானவள்போலத்தான் தெரிகிறது. நாங்கள் உன்னை வேலைக்கு வைத்துக்கொள்ளத் தடையில்லை. ஆனால் நீ என்ன சம்பளம் கேட்பாயோ?

சுப்பம்மா:—(முகமலர்ச்சி காட்டி) என்னமோ சாமீ நீங்க குடுக்கறத்தை நானு வாங்கிக்கறேனுங்க. நீங்க பெரிய மனிசரு. நானு ஏளெயிங்க. எங்க பாட்டெ நீங்க வச்சுக்கவா போறிங்க. எம் வவுத்துக்கு ரெண்டு வேளெ கஞ்சி வாத்து, அஞ்சு ரூவா குடுங்கசாமி. எங்கக்கா மாதிரி நானு இஞ்சே சம்பளம் கேட்டா, நீங்க குடுக்கப் போறீங்களா. அது பெரிய ராசா தர்பாருங்க. அவுளும் அதிட்டசாலிங்க. அந்த மாதிரி நானு ஆசைப்பட்டா கிட்டுங்களா! சொம்மா, அதிபாசை அதிய நயிஷ்டமாயிப்பூடும். சம்பளம் கொஞ்சமாயிருந்தாலும் மனசாறப் பாடுபட்டு ஒளெச்சி நல்ல பேரு வாங்கணுங்கறது என்னோடெ அவாவுங்க. ஏதுடா இவ

அஞ்சு ரூவா கேக்கறாளேன்னு எண்ணாதிங்க. எம் வேலையெயும், நாணயத்தையும் பாக்கப் பாக்க நீங்களே இன்னும் மேலெ ரெண்டு ரூவா போட்டுக் குடுப்பீங்க.

துரைஸாமி :—இந்த வீட்டில் நாங்கள் இரண்டு பேர்கள் இருக்கிறோம். சமயல்கார ஐயர் ஒருவரும், வேலைக்காரன் ஒருவனும் இருக்கிறார்கள். உனக்கு அதிகமாய் வேலை இருக்காது. இருந்தாலும், உனக்கும் வயிற்றுக்குக் கட்டவேண்டும். நீ வேறு எங்கும் வேலைக்குப் போகாமல் இங்கேயே இருந்து, நாங்கள் எந்தச் சமயத்தில் என்ன வேலை இடுகிறோமோ அதைச் செய்யவேண்டும். உன்னிஷ்டம்போலவே இரண்டு வேளை சாப்பாடு போட்டு, ஐந்து ரூபாய் கொடுக்கிறோம். நீ எப்போது முதல் இங்கே வேலை செய்ய ஆரம்பிக்கிறாய்?

சுப்பம்மா:—இப்ப மொதலே செய்யறேனுங்க. என் உத்தியோவத்துக்கு நாளு நச்சத்திரங்கூடப் பாக்கணுமா! எசமானரு என்னெக்கி வூட்டுக்குள்ளற நொளையறாங்களோ, அப்ப மொதலெ பெருக்கறவளும் வரவேண்டியதுதானெ மரியாதெ. நானு நாளு நச்சத்திரம் பாத்து வரவரையிலெ எசமாங்க குப்பையிலெ நடமாட முடியுமா! சமயக்கார ஐயரு எங்கனெ இருக்கிறாருங்க. அவரைக் காட்டி, அவுருக்கிட்ட ஒரு பேச்சுச் சொல்லுங்க. நானு எல்லா சோலியையும் கவினிச்சுக்கறேனுங்க—என்றாள்.

அதைக் கேட்ட துரைஸாமி கந்தசாமியின் முகத்தைப் பார்க்க, அவர் அந்த ஏற்பாட்டை உடனே ஆமோதித்தார். துரைஸாமி சமயற்காரரை அழைத்து, சுப்பம்மாளை வேலைக்கு அமர்த்தியிருக்கும் விஷயத்தை அவரிடம் தெரிவித்து, அவளிடம் ஆகவேண்டிய வேலைகளை



வாங்கிக்கொள்ளும்படி உத்தரவிட, அவர் சுப்பம்மாளை அழைத்துக்கொண்டு, இரண்டாவது கட்டிற்குப் போய்ச் சேர்ந்து, துடைப்பம் முதலிய அவளுடைய உத்தியோக சாமான்கள் இருந்த இடத்தைக் காட்ட, அவள் மிகுந்த ஆவேசத்தோடு வீட்டைப் பெருக்கவும், தண்ணீர் விட்டு அலம்பி சுத்தம் செய்து கோலமிடவும் தொடங்கினாள்.

அப்போது கந்தசாமி துரைஸாமியை நோக்கித் தணிவான குரலில் பேசத்தொடங்கி, "நமக்கு வசதியான வீடு கிடைத்ததை ஒரு சுபக்குறியாகக் கருதினோம். உடனே இவள் வந்து சேர்ந்தாள். இவள் மூலமாய் நமக்கும், திருநடன வைபவம் பிள்ளை பங்களாவிற்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டுப் போனது இரண்டாவது சுபக்குறி. நம்முடைய முயற்சியில்லாமல் தாமாகவே, நம் கருத்திற்கு அநுகூலமான காரியங்கள் நடக்கின்றன. ஆனால், இவளோடு பேச எனக்குக் கூச்சமாயிருக்கிறது. நீதான் இவளை மிகவும் தந்திரமாய் சமாளிக்க வேண்டும். நாம் இன்னார் என்பது இவளுக்குத் தெரியக்கூடாது. நாம் இன்ன கருத்தோடு இங்கே வந்திருக்கிறோம் என்பதோ, நமக்கும் திருநடன வைபவம் பிள்ளைக்கும் சம்பந்தம் இருக்கிறது என்பதோ இவளுக்குத் தெரியக்கூடாது. மிக சாமர்த்தியமாய், இவளுடைய அக்காள் மூலம் இவள் அந்தப் பெண்களின் உள் மர்மங்களைத் தெரிந்து நம்மிடம் வெளியிடும்படி செய்யவேண்டும். நாம் இன்னார் என்பதை இவளுக்குச் சொல்ல வேண்டாமென்று சமயற்காரரிடமும், வேலைக்காரனிடத்திலும் சொல்லி, எச்சரிக்க வேண்டும்" என்றார்.

துரைஸாமி, "சரி; அதையெல்லாம் நான் கவனித்துக் கொள்ளுகிறேன். நீ எதைப்பற்றியும் கவலைகொள்ள

வேண்டாம். கூடுமானால், அந்தப் பெண்களின் படம் கிடைத்தாலும், கொண்டுவரும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். அவர்கள் சந்தேகப்படாமல் மறுபடி திருப்பிக் கொண்டுபோய் அதை வைத்துவிடச் செய்யலாம்” என்றார்.

கந்தசாமி:—நீ எதை வேண்டுமானாலும் செய்யண்ணா; நாம் இங்கே வந்து மறைந்து கொண்டிருக்கிறோமென்னும் விஷயம் அவர்களுக்குத் தெரியக் கூடாது—என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவடைந்தது. அதுவரையில் வெளியில் போயிருந்த வேலைக்காரன் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து சேர்த்தான். துரைஸாமி அவனைத் தனிமையில் அழைத்து, சுப்பம்மாளிடம் அவன் நடந்து கொள்ள வேண்டியதைப் பற்றி எச்சரிக்க, அவன் அப்படியே நடந்து கொள்வதாக ஒப்புக்கொண்டு இரண்டாவது கட்டிற்குப் போய்ச்சேர்ந்தான்.

அதற்கு சுமார் ஒரு நாழிகைக்குப் பிறகு நண்பர்கள் இருவருக்கும் ஸ்நானம் போஜனம் முதலிய காரியங்கள் நிறைவேறின. சிப்பந்திகளுக்கும் சாப்பாடு முடிந்தது. சுப்பம்மாள் முதல் வேளை போஜனத்துடனேயே தன் வீட்டையும், புருஷன் முதலியோரையும் மறந்துபோனவள்போலவும், நெடுங்காலமாய் இவர்களோடு இருந்து பழகினவள் போலவும், அவளுக்கு இந்த உத்தியோகமும், புதிய இடமும் சாசுவதமாகி விட்டனபோலவும் காட்டிக்கொண்டு அளவற்ற பொறுப்போடும், அக்கறையோடும், பற்றுதலோடும், மகிழ்ச்சியோடும், மன உறுதியோடும் அந்த வீட்டு அலுவல்களைக் கவனித்து மற்றவர்களோடு நெருங்கி மிக இணக்கமாக நடந்து கொள்ளத் தொடங்கினாள்.



கந்தசாமி, துரைஸாமி ஆகிய இருவரையும் கண்டபோதெல்லாம், அவள் பெரிதும் நாணிக் கோணி, எங்காவது மறைவில் போய் ஒளிந்து கொள்வதும், அவர்களுக்கெதிரில் வாய்விட்டுப் பேசுவதற்குக் கூட அஞ்சி மற்றவர்களிடம் ஊமை ஜாடைகள் காட்டுவதுமாய் நடந்து கொள்ளத் தொடங்கினாளானாலும், அடிக்கடி துரைஸாமி அவள் தனியாயிருந்த இடத்திற்குப் போய் அவளிடம் ஏதேனும் கேள்வி கேட்பதும், தான் அவள் விஷயத்தில் மிக அன்பாயிருப்பதாகக் காட்டிக் கொள்வதுமாய் நடிக்க, அவளும் படிப்படியாய் அவரிடம் கூச்சத்தை விட்டு, தாராளமாகப் பேசவும், அவர் கேட்ட கேள்விகளுக்குப் பிரியத்தோடு மறுமொழிகள் கொடுக்கவும் ஆரம்பித்தாள்.

அன்றைய மாலையில், அவள் வீட்டைப் பெருக்கிய காலத்தில் துரைஸாமி அவளைப் பார்த்து, “சுப்பம்மா, நாங்கள் இரவில் மொட்டை மெத்தையில் படுத்துக் கொள்ளலாமென்று நினைக்கிறோம். மொட்டை மெத்தை குப்பையும் செத்தையுமாயிருக்கிறது. அதை சுத்தமாய்ப் பெருக்கி, ஜலம் விட்டு அலம்புகிறாயா?” என்று விநயமாகக் கூறினார்.

அவள், “ஓ, அப்பிடியே செய்யறேனுங்க; அங்ஙனே படுத்துக்கினாத்தான் கொஞ்சநாச்சும் காத்துவரும். உள்ளற படுத்துக்கினா, கொசுக்கடிலே, மனிதரு செத்துப்பூட வேண்டியதுதானுங்க. இந்த ஊருலே கொசு தாஸ்திங்க. எருமை மாடு கணக்கா வந்து உளுந்து ரெத்தத்தை உரிஞ்சிப்புடுங்க. கொசு வலை இல்லாமப்போனா, தூங்கவே முடியாதுங்க” என்று கூறிவிட்டு ஒரு குடத்தில் தண்ணீரையும் ஒரு துடைப்பத்தையும் எடுத்துக்கொண்டு மொட்டை மெத்தைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

அங்கே சென்றவள் பாதி தூரம் பெருக்கிக்கொண்டிருந்த சமயத்தில் துரைஸாமி சம்சயத்திற்கு இடமின்றி எதையோ கேட்டுக்கொண்டு, அங்கே போய்ச் சேர்ந்தார். அவர் அங்கு வந்ததைப்பற்றி சுப்பம்மாள் மகிழ்ச்சி கொண்டவள்போல் காணப்பட்டு, "சரியா, ஆறு மாஷத்துப் புழுதி படிஞ்சு கெடக்குது. இதுலெ மனுசரு படுத்துக்கினு எப்பிடித்தான் தூக்கம் புடிக்குமோ" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டபடி அடக்கி மெதுவாகப் பெருக்கலானாள்.

உடனே துரைஸாமி, "எங்களுக்கு முன்னால் இதில் இருந்தவர்கள் இதைக் காலி செய்துவிட்டுப் போய்ப் பல மாதக் கணக்கில் ஆயிருக்கலாம். அதுவுமில்லாமல் திறந்த வெளியல்லவா. காற்றில் தூசி வந்து படிந்திருக்கும். இதற்குமுன் இங்கே யார் குடியிருந்தார்கள் என்பது உனக்குத் தெரியுமா?" என்றார்.

சுப்பம்மா :—ஆரோ ஐயமாரு இருந்தாங்கன்னு சொல்லிக்கினாங்க. ரொம்ப நாளாக் கதவுலெ நோட்டீசு தொங்கிக்கினே கெடந்துச்சுங்க.

துரைஸாமி :—ஓ! அப்படியா! இதோ பின்னால் தெரிகிறதே பங்களா, இதில்தான் உன் அக்காள் வேலையாயிருக்கிறாளோ?

சுப்பம்மா :—(நிமிர்ந்து அவர் காட்டிய திக்கை நோக்கி) ஆமாங்க. அதுலெதான் இருக்கறாளுங்க.

துரைஸாமி :—பங்களா சரியாய்க் கால் மயில் சதுரம் இருக்கும்போலிருக்கிறதே! உள் பக்கம் எவ்வளவு அலங்காரமாயிருக்கிறது! நீ அந்த பங்களாவிற்குள் எப்போதாவது போய், உள் பக்கத்தை யெல்லாம் பார்த்ததுண்டா?



சுப்பம்மா :—நானு போனதில்லீங்க. எங்கக்கா, "வா, வா"ன்னு கூப்பிட்டுக்கினே கெடக்கறா. எனக்கு அங்கெல்லாம் போறத்துக்கு பயங்க. பெரிய மனுசரு ஊட்டுக்குள்ளாறல்லாம் போனா, அது ஏதாச்சம் தொந்தரவுலே முடியுங்க. அதனாலே நானு எங்கனெயும் போறதே இல்லீங்க.

துரைஸாமி :—அதுவும் நல்ல காரியந்தான். அந்த பங்களாவில் இருக்கும் ஜெமீந்தாருடைய பெண்களுக்குக் கல்யாணம் நடக்கப் போகிறதென்று சொன்னாயே. அப்போது அங்கே வேலை அதிகமாயிருக்குமே. அப்போது உன்னை உன் அக்காள் கூப்பிட்டால், போவாயோ என்னவோ. தக்க பெரிய இடமாயிற்றே; விருந்துச் சாப்பாடு, துணி மணி யெல்லாம் கிடைக்குமல்லவா.

சுப்பம்மா :—பேரு பெரிசுதானுங்க. அவுருக்கு சமீனுலெ கோடி கோடியாக் கெடக்குதாம். போதாக் கொறைக்கி, இந்த மந்திரி உத்தியோவத்துலெ மாஷம் பொறந்தா ஐயாயிரம் ஆறாயிரம் கெடைக்குதாம். ஆனா, எல்லாம் பைசாக் கொறையாமெ அம்மாக்கிட்ட வந்து சேந்து போவணும். அம்மா எச்சிக்கையாலெ காக்க ஓட்ட மாட்டாங்க. அம்பிட்டு கயாள கொணங்க. செட்டின்னாலும் செட்டு, அந்த அம்மாளோடெ செட்டு ஆருக்கும் வராதுங்க. தம் வவுத்துக்குச் சாப்பிட்றதுகூடக் கணக்குத்தானுங்க.

துரைஸாமி :—தங்கள் வரையில் கணக்காயிருப்பது நல்லதுதானே. என்ன இருந்தாலும் பெரிய மனிதர்கள்

கல்யாணம் நடத்தும் காலத்தில் தாராளமாகத்தான் பணச்செலவு செய்வார்கள்.

சுப்பம்மா :—அந்த அம்மா சங்கதி அவுங்களோடெ பளகற எங்கிளுக்கு நல்லாத் தெரியுங்க. அவுங்க, "காக் காசுலெ கண்ணாலமும், அதுக்குள்ளெயே வாண வேடிக்கையும்நடத்திப்புடணும்னு ரோசனை பண்ணறவங்க சாமீ. இருந்தாலும், எங்களெப்பேலெ இருக்கற வேலைக்காரிங்களுக்கு எப்பிடியும் நாலஞ்சு நாளைக்கி விருந்துச்சோறு கிட்டும். எங்கக்கா என்னெயும் கூப்பிட்டுக்கினுதான் இருக்கரு. இந்த வூட்டு வேலெயிலெ அமுராதேயிருந்தா போவேந்தான். இங்ஙனெ வேலெ ஒப்புக்கினுச்சு. இன்னமெ போவ முடியுதுங்களா. அவுங்க சாப்பாடும் ஆச்சு, ஓங்கானு செருப்பும் ஆச்சு. அவுங்க வூட்டுலெ நாலு நாளெக்கி பருப்பும் சோறு அம்பிடுதான்னு போனு, எப்பவும் பொளைக்கறத்து வாயிலெ மண்ணு உளுந்துடாதுங்களா. அதெல்லாம் நானு இன்னமெ எங்ஙனெயும் போவ மாட்டேனுங்க. நம்மெ வச்சுக் காப்பாத்தற மவராசா வூடுதான் நமக்குப் பெரிசுங்க.

துரைஸாமி :—இரண்டு பெண்களையும் ஒரே இடத்தில் கட்டிக் கொடுக்கிறார்களா ?

சுப்பம்மா :—ஆமாங்க.

துரைஸாமி :—பிள்ளை வீட்டார் எந்த ஊர் என்பது உனக்குத் தெரியுமா ?

சுப்பம்மா :—அவுங்களும் தெக்கே இருக்கறவங்களாம். தஞ்சாவூரோ என்னமோன்னு சொல்லிக்கினுவ.

துரைஸாமி:—அவர்களும் தக்க பெரிய மனிதர்களாய்த் தானிருப்பார்கள் ?



சுப்பம்மா :—மாப்பிளை ரெண்டு பேரும் சருச்சி வேலை பாக்கறவங்களாம். ஆனு பொண்ணுங்களுக்கு அந்த எடம் புடிக்கல்லேன்னு சொல்லிக்கறுங்க. அது நெசமோ பொய்யோ ஆண்டவனுக்குத்தான் தெரியணும்.

துரைஸாமி :—பெண்களுக்கு இஷ்டமில்லாத இடத்தில் அவர்களை ஏன் வலுக்கட்டாயமாய்க் கொடுக்கிறார்கள்?

சுப்பம்மா :—அவுங்க புருசன் பொஞ்சாதி ரெண்டு பேரும் ரொம்பக் கண்டிப்புக்காரருங்க. அவுங்க ஈஷ்டம் பேலெதான் மத்தவிங்க நடந்துக்கணும். பெத்த பொண்ணாயிருந்தாக்கூட, அவுங்களும் கிராச்சிமான்னு பேசப்படாது; அவுங்க கிறின கீத்தைத் தாண்டக்கூடாது.

துரைஸாமி :—அப்படியெல்லாம் பயந்து கீழ்ப்படிந்து நடக்கும் பெண்கள் இந்தக் கல்யாண விஷயத்தில் மாத்திரம் ஏன் இஷ்ட மில்லாதவர்களாய் இருக்கிறார்கள் ?

சுப்பம்மா :—அந்தக் கண்ட்ருவி யெல்லாம் நமக்குத் தெரியுதுங்களா! பெரிய மனிசரு வூட்டுப் பொண்ணுங்க எப்பிடி யெப்பிடியோ இருக்குங்க. நானு இதெயெல்லாம் ஊணி வெசாரிக்கற தில்லீங்க; எங்கக்கா தன் புருசங்கிட்ட ராத்திரி யெல்லாம் மொச்சு மொச்சுன்னு என்னென்னமோ சொல்லிக்கினே இருப்பா; நானு அத்தெயெல்லாம் காதுலே வாங்கறதில்லீங்க. கணத்துத் தவளெக்கி, நாட்டு வளப்பம் என்னாத்துக்குன்னு சொலவஞ் சொல்லுவாங்க. நம்ப நானு வீடு பெருக்கி சாடுமாலி வேலெ சேஞ்சு வயிறு வளக்கறவ. நமக்கென்னாத்துக்கு ஊரு வம்பெல்லாம்னு நானு சிவனேன்னு எம்பாட்டுலே மொடங்கிக்கறது.

துரைஸாமி :—பெண்கள் பார்வைக்கு அழகாயிருக்குமோ ?

சுப்பம்மா :—பெரிய மனிசரு வூட்டுப் பொண்ணுங்க நல்லாயிருக்கறத்துக்குக் கேக்கணுங்களா. அவுங்களுக்கென்ன கொறைச்சலுங்க. நல்ல வைர நகைங்களைப் போட்டுப் பட்டுச்சேலைங்களைக் கட்டினு, பட்டுப்போன மரங்கூட நல்ல வயசுகாலக் கொமரி தோத்துப் போறாப்புலெ இருக்காதா! அவுங்க எப்பிடி இருந்தா என்ன; ஆயிரம் பதினாயிரத்துக்கு நகை நட்டுவளைப் பூட்டிக்கினு, பளபளன்னு பட்டுப்பொடவெ ரவிக்கையெல்லாம் மாட்டிக்கினு, பாக்கப் பதினாயிரம் கண்ணு ஒணும்பேலெ மாறிப் போறாங்க—ஏஞ்சாமி, ஒங்களைப் பாத்தா ஐயமாருபேலெ இருக்குது. இன்னொரு ஐயாவுக்குப் பூணூலு இல்லீங்களே. நீங்க ரெண்டுபேரும் செநேகிதகாரரா? இந்த வூருலெ படிக்க வந்திருக்கிறீங்களா?

துரைஸாமி :—நாங்கள் இரண்டு பேரும் சிநேகிதர்கள் தான். என்னோடுகூட இருக்கும் அந்த ஐயா தக்க பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை. அவருக்குக் கல்யாணம் ஆக வேண்டும். இந்தத் தேனாம்பேட்டையில் பல பெரிய மனிதர்களுடைய பங்களாக்கள் இருக்கின்றனவென்று கேள்விப்பட்டோம். இங்கே கொஞ்சகாலம் இருந்து இவருக்குத் தகுந்த பெண் ஏதாவது கிடைக்குமா என்று பார்த்துக்கொண்டு போகலாமென்று இங்கே வந்திருக்கிறோம். உன் அக்காள் வேலை செய்யும் பங்களாவில் இருக்கும் ஜெமீந்தாருடைய பெண்களுக்கு இப்போது பார்த்திருக்கும் இடத்தில் வாழ்க்கைப்பட இஷ்டமில்லை என்று நீ சொன்னதன்மேல், நான் அதைப்பற்றி ஏன் இவ்வளவு தூரம் கிளரிக் கிளரிக் கேட்டேன் தெரியுமா? ஒருவேளை அந்தக் கல்யாணம் நின்று போனால், இவருக்கு அந்தப் பெண்களில் யாரையாவது பார்க்கலாமென்ற எண்ணத்தோடுதான் கேட்டேன். வேறொன்றுமில்லை.



சுப்பம்மா :—ஓ! அப்பிடீங்களா சங்கதி! சந்தோசமாச்சுதுங்க. ஐயாவுக்கு நல்ல எடமாக் கெடைச்சு சுருக்குனு கண்ணாளம் ஆவணுங்க; நானு பட்டுப் பொடவெ வாங்கிக் கட்டிக்கணுங்க.

துரைஸாமி :—அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாதே. கலியாணம் மாத்திரம் நேரட்டும்; ஒரு புடவைக்கு இரண்டு புடவையாய் உனக்குக் கொடுக்கிறேன். நீ எங்களுக்கு ஒரு காரியம் செய்யவேண்டுமே.

சுப்பம்மா :—(மகிழ்ச்சியோடு) சொல்லுங்க சாமி; என்னாலே இன்னா அலுவ ஆவணும்னாலும் சொல்லுங்க. அதெ முடிச்சிப்புட்டு மறுசோலி பாக்கறேனுங்க. அதனாலே என் உசிரு போறதா இருந்தாக்கூடத் துணிஞ்சி நிக்கிறேனுங்க.

துரைஸாமி :—சரி; சந்தோஷம்; நீ அவ்வளவு அபாயகரமான காரியம் எதுவும் செய்ய வேண்டாம். நீ உன் அக்காள் மூலம் இரகஸியத்தில் விசாரித்து இந்தப் பெண்களைப் பற்றிய சில சங்கதிகளைத் தெரிந்துகொண்டு வந்து சொல்ல வேண்டும்.

சுப்பம்மா:—ஒங்களுக்கு இன்னா சங்கதி தெரியணும்னு சொன்னா, இன்னெ ராவுலெயே தெரிஞ்சுக்குனு காலையிலே வந்து சொல்றேனுங்க.

துரைஸாமி :—இந்தப் பெண்கள் இருவருக்கும் இப்போது பார்த்திருக்கும் இடத்தில் வாழ்க்கைப்பட இஷ்டந்தானா இல்லையா, இஷ்டமில்லாவிட்டால், அவர்கள் வேறு யார் பேரிலாவது நாட்டமாயிருக்கிறார்களா, இப்போது, எங்களைப்போல் யாராவது புது மனிதர் வந்து கல்யாணப் பிரஸ்தாபம் செய்யலாமா என்னும் விஷயங்களை உன் அக்காளிடம் கேட்டு நீ தெரிந்துகொண்டு வரவேண்டும். நாங்

ள் கேட்டுக்கொண்டு வரச்சொன்னேம் என்னும் விஷயம் வேறு யாருக்கும் தெரியக்கூடாது.

சுப்பம்மா:—இத்தானா ஒரு பெரிய காரியமுங்க. நானு இன்னைக்கு ராவுலெ கேட்டுக்கினு காலையிலெ வந்து சொல்றேனுங்க சாமீ.

துரைஸாமி :—கூடுமானால், நீ இன்னொரு வேலையும் செய்யவேண்டும்.

சுப்பம்மா :—அத்தையும் சொல்லுங்களேன்.

துரைஸாமி :—இந்தப் பெண்களுடைய போட்டோப் படம் எங்கேயாவது இருந்தால், மறைவாக அதை நீ வாங்கிக்கொண்டு வா. இந்த ஐயா பார்த்துவிட்டு, உடனே திருப்பிக் கொடுத்து விடுவார்கள். அது இருந்த இடத்தில் அதைக் கொண்டுபோய் மறுபடி வைத்துவிடலாம்.

சுப்பம்மா :—எங்க அக்கா கிட்டக் கேட்டுப் பாக்கறேனுங்க. இம்பிட்டுத்தானே?

துரைஸாமி :—இன்னொரு சிறிய காரிய மிருக்கிறது. பல விஷயங்களை ஒரே தடவையில் முடிப்பது உனக்குப் பிரயாசையா யிருக்குமோ என்று யோசிக்கிறேன்.

சுப்பம்மா :—இதுலெ எனக்கென்ன கயிஷ்டமுங்க; மூட்டை தூக்கப்போறேனுங்களா? சொல்றத்தையெல்லாம் ஒருமிக்கச் சொல்லி வையுங்க, நானு சமயம்பேலெ பாத்துக்கறேனுங்க.

துரைஸாமி :—வேறொன்றுமில்லை; அந்தப் பெண்கள் இருவருக்கும் எழுதப்படிக்கத் தெரியுமா என்பது தெரிய வேண்டும்.



சுப்பம்மா :—அதைத் தெரிஞ்சுக்கறது ஒரு பெரிய காரியங்களா? அதையும் கேட்டுக்கினு வாறேனுங்க.

துரைஸாமி:—இந்த ஐயா தம்முடைய சம்சாரம் அழகாய் எழுத வேண்டுமென்று ஆசைப்படுகிறார். ஆகையால் இந்தப் பெண்கள் கையால் எழுதின காகிதங்கள் ஏதாவது கிடைக்குமானால், அவைகளையும் வாங்கிக்கொண்டு வர வேண்டும். தேவையானால் திருப்பிக்கொண்டுபோய் இருந்த இடத்தில் வைத்து விடலாம். இவ்வளவே நீ இப்போது செய்ய வேண்டிய காரியம். நீ அவசரப்படாமல் நிதானமாய் சமயம் பார்த்து இந்தக் காரியங்களை நிறைவேற்றலாம்; அவசரப்பட்டுக் காரியத்தை வெளியில் விட்டுக் கெடுத்து விடாதே. ஜாக்கிரதை. நான் சொல்வது தெரிகிறதா?

சுப்பம்மா:—அப்பிடியே ஆவட்டுங்க. ஒங்க காரியத்தெ நானு கெடுப்பேனுங்களா! அதெப்பத்தி ஒங்களுக்குக் கொஞ்சங்கூடக் கவலை வாணாங்க—என்றாள்.

அதோடு அவர்களுடைய சம்பாஷணை முடிவுற்றது. துரைஸாமி ஏதோ அவசர காரியமாய்ப் போகிறவர்போலக் கீழே இறங்கிப் போய்விட்டார். சுப்பம்மாள் மொட்டை மெத்தையை சுத்தம் செய்யும் வேலையைக் கவனிக்கலானாள்.

* * * *

அதே சமயத்தில், திருநடன வைபவம் பிள்ளையின் பங்களாவில் நிகழ்ந்த சில விஷயங்களை நாம் விவரிப்போம்.

அன்றைய தினம் பகலில் தமது காரியாலயத்திற்குச் சென்று, பிற்பகல் சுமார் ஐந்து மணி வரையில் அவ்விடத்தில் இருந்த பின்னர், அங்கிருந்து புறப்பட்டு காஸ்மபாலிட்டன் கிளப் முதலிய இரண்டு மூன்று இடங்களுக்குச்

சென்று சொற்ப சொற்ப காலம் இருந்துவிட்டுத் தமது மாளிகைக்குத் திரும்பி வந்து சேர்ந்த திருநடன வைபவம் பிள்ளை தமது உத்தியோக ஆடைகளைக் கழற்றிவிட்டு, மேலே ஒரு சிறிய துண்டைப் போட்டுக்கொண்டு, மேன்மாடத்தை யடைந்து மொட்டை மெத்தையின் பக்கமாயிருந்த ஒரு தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த சாய்மான நாற்காலியொன்றில் சாய்ந்துகொண்டார்.

அவ்விடத்தில் அருமையான வாசனை மலர்களைச் சுமந்திருந்த செடி கொடிகள் ஏராளமாயிருந்தனவாதலால், குளிர்ச்சியும், ஸொகுஸான மணமும் நிறைந்த மந்த மாருதம் ஜிலு ஜிலுவென்று வீசி அவருடைய மனோ மெய்களைப் பரவசப்படுத்தத் தொடங்கியது. அடுத்த நிமிஷம் அவருடைய மனையாளும், ஒரு வேலைக்காரியும் அவருக்குத் தேவையான சிற்றுண்டிகள், தண்ணீர் முதலியவற்றுடன் அங்கு வந்து, தாம் கொண்டுவந்த வஸ்துக்களை அவருடைய ஆசனத்திற்குப் பக்கத்திலிருந்த ஒரு சலவைக்கல் மேடையின்மீது வைக்க, உடனே வேலைக்காரி கீழே இறங்கிப் போய்விட்டாள்.

அப்போது திருநடன வைபவம் பிள்ளை எழுந்து தமது கைகால்களை அலம்பி சுத்தி செய்துகொண்டு வந்து மறுபடி நாற்காலியில் அமர்ந்துகொள்ள, கற்பகாம்பாள் அங்கிருந்த பக்ஷண பலகார பதார்த்தங்களை எடுத்தெடுத்து அவருக்குக் கொடுத்து உபசரிக்க, அவர் மிக சுருக்கத்தில் அந்த வேலையை முடித்துக்கொண்டார். அவர்கள் இருவரும் சந்தோஷமற்றவர்களாய் ஓய்ந்திருந்தது நன்றாகத் தெரிந்தது. இருவரும் ஒருவரோடொருவர் பேசாமல் ஊமை ஜாடையிலேயே அந்தக்காரியத்தை நிறைவேற்றினர்.



அதன் பிறகு நெடுமூச்செறிந்தபடி மௌனமாகவே இரண்டொரு நிமிஷகாலம் நாற்காலியில் சாய்ந்திருந்த பிள்ளையவர்கள் தமது மனையாளைப் பார்த்து, "விடிந்தால் கலியாணம் பிடியடா தாம்பூலம் என்று பழமொழி சொல்லுகிறபடி விவாகத்திற்கு இன்னம் ஆறு தினங்களே இருக்கின்றன. பிள்ளை வீட்டார் அபாரமான ஏற்பாடுகளையெல்லாம் செய்துகொண்டிருப்பதாக நமக்குச் செய்தி எட்டிக்கொண்டே இருக்கிறது. நாமும் அவர்களுடைய யோக்கியதைக்கும், நம்முடைய யோக்கியதைக்கும் தக்கபடி பொருளை லக்ஷம் லக்ஷமாய்ச் செலவிட்டு நகை நட்டுகளையும் இன்னம் மற்ற வரிசைகளையும் சேகரம் பண்ணிக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையில் முதலுக்கே மோசம் வந்துவிடும்போலிருக்கிறது. நான் நம்முடைய ராணியின் நிலைமையை இன்றுதான் ஊன்றிப் பார்த்தேன். படுக்கையிலிருந்து மற்றவர் தூக்கி உட்கார வைக்கவேண்டிய நிலைமையிலல்லவா இருக்கிறாள். இந்த நிலைமையில், நாம் அவளை மன்னார்குடிக்கு எப்படி அழைத்துக்கொண்டு போகிறது! அவள் கல்யாணப் பந்தலில் எப்படி உட்கார்ந்திருக்கப் போகிறாள். டாக்டர்களுக்கு இதுவரையில் செலவானது மொத்தம் ரூ. 5000 ஆகிறது. அவர்களால் ஒரு கொசுகூட நகரவில்லை. இது இன்ன வியாதி என்றுகூட அவர்களால் சொல்ல முடியவில்லை. பெண் வரவர துர்ப்பலமடைந்து கொண்டிருக்கிறதேதவிர, கொஞ்சமாவது தேறும் குறி ஏற்படவில்லையே! இந்த தர்ம சங்கடத்தில் நாம் என்ன செய்கிறது! இப்படிப்பட்ட கேவலமான நிலைமையில் இருக்கும் பெண்ணை நாம் கொண்டுபோய்ப் பந்தலில் உட்கார வைத்தால், எல்லோரும் கைகொட்டி ஏளனம் செய்வார்களே என்பதை நினைக்க நினைக்க இன்று முழுதும் எனக்குக் கச்சேரியில் இருப்பே கொள்ளவில்லை" என்றார்.

அதைக் கேட்ட கற்பகாம்பாளுடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பொங்கி வழிந்தது. அவள் தேம்பித் தேம்பி அழுதபடி பேசத் தொடங்கி, "இன்று எஜமானர் கச்சேரிக்குப் போன பிற்பாடு, நான் துணிந்து ஒரு காரியம் செய்தேன். நம்முடைய வேலைக்கார சொக்காயி வந்து, இந்த ஊரில் பரதேசிகள் தங்கும் சாவடியில் யாரோ ஒரு பெரியவர் வந்திருப்பதாகவும், அவர் யார் போனாலும் அவர்களுடைய வரலாறுகளைச் சொல்வதாகவும், எல்லோருக்கும் விபூதி கொடுப்பதாகவும் சொன்னாள். நான் வண்டியை அனுப்பி, அந்தப் பெரியவரை அழைத்துக்கொண்டு வரச்செய்தேன். பார்வைக்கு அவர் உண்மையான மகான் போலவே இருக்கிறார். அவர் வந்து நம் குழந்தையை ஏற இறங்க இரண்டு மூன்று தடவை பார்த்துவிட்டு, வெளியில் வந்து, தனிமையில் என்னை அழைத்து, 'அம்மா, உங்கள் குழந்தைக்கு உடம்பில் எவ்வித நோயுமில்லை. இது மதுரை வீரனுடைய விளையாட்டு. உங்கள் முன்னோருக்கு அவர் குலதெய்வம். அவர்கள் வருஷம் பிரதி அந்த தெய்வத்திற்குப் பூஜை போடுவார்கள். அதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். இப்போது உங்கள் குழந்தைகளுக்கு விவாகம் நடத்தப் போகிறீர்களென்பதும் அந்த ஆண்டவருக்குத் தெரியும். ஆகையால் அவர் கோபமடைந்து பெண்ணின்மேல் குதிகொண்டிருக்கிறார். அதை நீங்கள் நினையாமல் மேன்மேலும் வைத்திய சிகிச்சைகள் செய்துகொண்டே போகிறீர்கள். அதனால் ஆண்டவருக்குக் கோபம் அதிகரித்திருக்கிறது. இந்த விவாகமும் நடைபெறாமல் தடுத்துவிட ஆண்டவர் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார். நீங்கள் செய்துள்ள விவாக ஏற்பாடு சம்பந்தமாய் உங்களுக்குப் பிரதிகூலமான



செய்தி இன்று அல்லது நாளைக்குள் உங்களுக்கு வரப்போகிறது. அதையும் நீங்கள் அசட்டை செய்தால், இன்னம் நான்கு தினங்களுக்குள் பெண்ணை ஆண்டவர் தம்முடைய பாதாரவிந்தத்தில் சேர்த்துக்கொண்டு விடப்போகிறார்' என்று சொல்லி என்னிடம் கொஞ்சம் விபூதியைக் கொடுத்துப் பெண்ணுக்குப் பூசும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார். உங்களுக்கோ இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. இதை யெப்படி உங்களிடம் சொல்லுவது என்று பயந்துகொண்டே இருந்தேன். நீங்கள் இந்தப் பிரஸ்தாபத்தை எடுத்தவுடன் நான் உண்மையைச் சொல்லி விட்டேன்" என்று தட்டித் தடுமாறி நிரம்பவும் விசனகரமாக மொழிந்தாள்.

அந்த வரலாற்றைக் கேட்ட திருநடன வைபவம் பிள்ளை அவளுக்கு மறுமொழி கொடாமல் சிறிது நேரம் மௌனத்தில் ஆழ்ந்திருந்த பின் பேசத் தொடங்கி, "அந்த விபூதியைக் குழந்தைக்குப் பூசிவிட்டாயா? அதனால் ஏதாவது மாறுபாடு தெரிகிறதா?" என்றார்.

கற்பகாம்பாள்:—இதற்குள் என்ன மாறுபாடு தெரியப் போகிறது. அந்த விபூதியைப் பூசி விட்டப்பிறகு, அலட்டல் இல்லாமல் அயர்ந்து தூங்குவது போல் என் புத்திக்குப் படுகிறது—என்றாள்.

திருநடன வைபவம் பிள்ளை மறுபடி மௌனத்திலாழ்ந்திருந்த பின், "இந்த விவாகவிஷயமாய் நமக்கு ஏதோ பிரதிகூலமான செய்தி கிடைக்கப் போகிறதென்று அவர் சொன்னாரென்றாயே. இது வரையில் எந்தச் செய்தியும் வரவில்லையோ?" என்றார்.

கற்பகாம்பாள் "இன்று, அல்லது, நாளைக்குள் வரப் போகிற தென்றல்லவா அவர் சொன்னார். ஒரு வேளை நாளைக்கு வரலாம்" என்றாள்.

திருநடன வைபவம் பிள்ளை "சரி; அதையும் பார்த்து விடலாம்" என்றார்.

அவ்வளவோடு அவர்களுடைய சம்பாஷணை முற்றுப் புள்ளி பெற்றது. திருநடன வைபவம் பிள்ளை நாற்காலியின்மீது சயனித்திருந்தவர் மன வேதனையின் மிகையால் அலுத்து அப்படியே துயிலில் ஆழ்ந்துபோய்விட்டார்.

கற்பகாம்பாள் நெடுநேரம் வரையில் இருந்து பார்த்து, அவர் விழிக்காதிருந்ததைக் கண்டு, அவர் இராப் போஜனம் செய்யாமல் தூங்கிப்போனதைப் பற்றி மனவேதனையடைந்து, அவரை எழுப்ப முயல, அவர் எழுந்து தமக்கு வயிற்றில் பசியில்லை யென்று கூறிவிட்டு, உள் புறத்தில் இருந்த தமது மஞ்சத்தில் சயனித்துக் கொண்டார்.

கற்பகாம்பாள் இந்திராணி படுத்திருந்த இடத்தையடைந்து அவளுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டு கண்ணீர் விட்டழுதபடி தனது பசி தாகம் முதலியவற்றைப் பொருட்படுத்தாமல் அப்படியே தரையில் படுத்துத் துயிலில் ஆழ்ந்து போனாள்.

அந்த இரவு கழிய, மறுநாளைய காலையில் திருநடன வைபவம் பிள்ளையும், கற்பகாம்பாளும் தங்களது இயற்கைப்படி மற்றவர் எழுந்திருப்பதற்கு முன்னாகவே எழுந்து தமது நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, அவரவர் தம் தம் அலுவல்களை கவனிக்கலாயினர்.



அன்றைய காலையில் வழக்கப்படி தபால்கள் எப்போது வருமென்று திருநடன வைபவம் பிள்ளை மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். கற்பகாம்பாள் தன் புருஷர், பெண்கள் முதலியோருக்கு ஆகவேண்டிய சௌகரியங்களைச் செய்வதில் தனது கவன முழுமையும் செலுத்தியிருந்த சமயத்தில் திருநடன வைபவம் பிள்ளையின் அழைப்பு மணி கண கண வென்று ஓசை செய்தது.

அப்போது சமையலறையில் இருந்த கற்பகாம்பாள் தனது புருஷர் ஏதோ அவசர காரியமாய்த் தன்னை அழைக்கிறார் என்று அநுமானித்துக்கொண்டு, உடனே கை வேலைகளை அப்படி யப்படியே போட்டுவிட்டு விசையாக நடந்து, அவர் இருந்த முதல் ஹாலை யடைந்து, பயபக்தி விநயத்தோடு அவருடைய மேஜைக்கருகில் போய் நின்றாள்.

திருநடன வைபவம் பிள்ளையின் முகம் வாட்டமடைந்து சோர்ந்து வீழ்ந்துபோ யிருந்தது. அவர் சிறிதும் சந்தோஷமும், உற்சாகமும் அற்ற தோற்றத்தினராய் வீற்றிருந்ததைக் காண கற்பகாம்பாளின் மனம் பெருத்த திகில் கொள்ளலாயிற்று. அவர் என்ன விபரீதச் செய்தியைத் தெரிவிக்கப் போகிறாரோ என்று மிகுந்த கவலையோடு அவருடைய வாயைப் பார்த்தபடி கற்சிலைபோல் நிற்க, அவர் உடனே நிமிர்ந்து, "நேற்று வந்த ஸ்வாமியார் சொன்னது நிஜமாய்ப் போய்விட்டது. மன்னார்குடியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது" என்றார்.

அதைக் கேட்ட கற்பகாம்பாள் திடுக்கிட்டு, "ஆ என்ன! என்ன! மன்னார்குடியிலிருந்தா கடிதம் வந்திருக்கிறது? என்ன எழுதியிருக்கிறார்கள்?", என்று மிகுந்த ஆவலும் மனக்கலக்கமும் அடைந்தவளாய் வினவினாள்.

திருநடன வைபவம் பிள்ளை:—அடுத்த ஞாயிற்றுக் கிழமை விவாகம் இல்லையாம்.

கற்பகாம்பாள் :—(மிகுந்த பிரமிப்பும் கலவரமும் அடைந்து) ஏன் ? என்ன காரணம் ?

திருநடன வைபவம் பிள்ளை :—ஏதோ எதிர்பாராத சில அசந்தர்ப்பங்கள் நேர்ந்திருப்பதால், அடுத்த ஞாயிற்றுக்கிழமை முகூர்த்தத்தை வைத்துக்கொள்ள வேண்டாமென்றும், மறுபடி தாம் எழுதியபிறகு, இன்னொரு முகூர்த்தநாள் குறிப்பிடலாமென்றும் கந்தசாமி பிள்ளையிடத்திலிருந்து, மன்னார்குடிக்குத் தந்தி வந்ததாம். அதை அவர்கள் நமக்குக் கடிதத்தின் மூலம் எழுதி இருக்கிறார்கள்.

கற்பகாம்பாள் :—பெரிய மகாராஜாவின் கலியாணத்திற்குச் செய்யும் ஏற்பாடுகளையெல்லாம் அவர்கள் செய்திருப்பதாக நாம் கேள்வியுற்றோமே. அடுத்த ஞாயிற்றுக் கிழமை முகூர்த்தநாள் நிரம்பவும் சிலாக்கியமாயிருப்பதாக அவர்களே எழுதினார்களே. இப்போது எவ்வித முகாந்தரமுமின்றி, முகூர்த்தத்தை நிறுத்திவிட்டார்களே! இது என்ன கால மாறுபாடு என்பது தெரியவில்லையே! நேற்று அந்த ஸ்வாமியார் குறித்தது இதைத்தான்போலிருக்கிறது. பார்த்தீர்களா அவருடைய மகிமையை! மன்னார்குடியிலிருந்து கடிதம் இன்று வரப்போகிறதென்பதை இந்த ஊரிலிருந்தவரான அந்த ஸ்வாமியார் நேற்று மத்தியானம் எப்படித் தெரிந்துகொண்டிருப்பார்! நான் திடீரென்று நினைத்துக்கொண்டு நேற்று மத்தியானந்தானே அவரை இங்கே அழைத்துவரச் செய்தேன் !

திருநடன வைபவம் பிள்ளை :—இது உண்மையில் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது! நம் நாட்டில் ஞானதிருஷ்டி



யுடைய மகான்களும் ரிஷீசுவரர்களும் இருந்ததாகப் புஸ்தகங்களில் படிக்கிறோம். இப்போதும் அப்படிப்பட்ட யோக்கியதை வாய்ந்தவர்கள் யாராவது இருக்கலாம். ஆனால் வயிற்றை வளர்ப்பதற்காக வேஷம் போடும் போலிமகான்களும், ஜாலவித்தைக் காரர்களும் இந்தக் காலத்தில் நிறைந்து போயிருப்பதால், நமக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. அதனால் உண்மையான மகான்களையும் நாம் சில சமயங்களில் அசட்டை செய்து விடுகிறோம். இந்தக் கடிதத்தைப் பார்த்தவுடன் எனக்கு இந்தப் பரதேசியாரிடம் ஒருவித நம்பிக்கை உண்டாகிறது. ஆகையால், இன்றைக்கும் வண்டியை அனுப்பி, அவரை வரவழைத்து, அவர் குறிக்கும் மதுரை வீரசாமிக்குப் பூஜை முதலியவைகளை நடத்தச் செய்வோம். நாம் செய்வது சரியான காரியமோ, தப்பான காரியமோ, செய்வதைக் கடவுள் பெயரால் செய்து, நம்மைக் காப்பாற்றும்படி அவரிடம் கேட்டுக்கொண்டால், அது பலித்தாலும் பலிக்கட்டும், பலிக்கா விட்டாலும் கவலையில்லை. நாம் தவறான காரியம் எதையும் செய்யவில்லை என்ற மனத்திருப்தியாவது ஏற்படட்டும்; ஸ்வாமியை நாம் புறக்கணித்தோமென்ற குறைப்பாடும் இல்லாமல் போகும்.

கற்பகாம்பாள் :—அப்படியானால், எஜமானரும் இன்றைக்கு ஆபீஸுக்குப் போகாமல் இங்கேயே இருந்தால், நலமாயிருக்கும்.

திருநடன வைபவம் பிள்ளை:—அதென்ன பிரயாசையா; நான் இன்று வரவில்லையென்று டெலிபோன் மூலம் ஆபீசுக்குச் செய்தி சொல்லியனுப்பி விடுகிறேன். ஏதாவது அவசர விஷயமாயிருந்தால், குமாஸ்தா மோட்டார் வண்டியில் இங்கேயே வந்து, ஆகவேண்டிய உத்தரவைப் பெற்றுப் போகலாமென்று சொல்லிவிடுகிறேன்.

இந்த ஸ்வாமியாரை நானும் பார்த்து, அவருடன் பேச விரும்புகிறேன். இந்தக் கடிதம் வரப்போகிறதென்பதை ஞானதிருஷ்டியால் அறிந்து நமக்குச் சொன்னவர் இன்னொரு விஷயத்தையும் அறிந்து சொல்லக்கூடும். இந்த மன்னார்குடியார் என்ன காரணத்தினால் கல்யாணத்தை நிறுத்தியிருக்கிறார்கள் என்பதைக் கேட்கவேண்டும். அது வன்றி, மறுபடி கொஞ்சகாலத்தில இந்தக் காரியம் நிறைவேறுமா, அல்லது, நின்றுபோன கல்யாணம் ஒரே முடிவாக நின்றுபோனதுதானா என்பதையும் நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கற்பகாம்பாள் :—அப்படிக்கூட நடக்குமோ! நம் வீட்டில் பெண் கொள்ள அவர்களுக்கு இஷ்டமில்லாவிட்டால், அதை வெளிப்படையாக நமக்குத் தெரிவிக்காமல், அவர்கள் மூடுமந்திரமாக வைத்துக்கொண்டு நாளைக்கு பின்னைக்கு என்றால், நாம் இவர்களை நம்பி வேறே இடம் பார்க்காமல் இருந்து, துன்பத்திற்கு ஆளாகிறதா! இந்த விவாக ஏற்பாடு அவர்களுக்குப் பிடிக்காவிட்டால், அதற்கு இப்படியெல்லாம் வாய்தா வைப்பதா ஒழுங்கு?

திருநடன வைபவம் பிள்ளை:—அவர்களுக்குப் பிடிக்கவில்லையென்று யார் சொல்லுகிறார்கள். தஞ்சாவூரிலிருக்கும் பிள்ளை தேதியை ஒத்தி வைக்கும்படி தந்தியின்மூலம் கேட்டுக்கொண்டிருப்பதாக மன்னார்குடியார் எழுதி இருக்கிறார்கள். தஞ்சாவூராருடைய தந்தியின் உண்மை என்ன என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

கற்பகாம்பாள்:—அது எப்படியிருந்தாலும், அவர்கள் இப்போது முகூர்த்தத்தை ஒத்தி வைத்தது தெய்வாதீனமென்று நினைக்கிறேன். நம் ராணி இவ்வளவு



கேவலமான நிலைமையில் இருக்கும்போது, அவளை நாம் அங்கே அழைத்துக்கொண்டு போவது நல்லதல்ல. எப்படியாவது நாம் பிரயாசைப்பட்டு மறுபடி முகூர்த்தம் வருவதற்குள், அவள் தேறும்படியான காரியத்தைச் செய்ய வேண்டும். அதற்குக் கடவுள் நமக்கு அவகாசம் கொடுத்திருக்கிறார் என்றே நாம் எண்ண வேண்டும்.

திருநடன வைபவம் பிள்ளை:—அப்படியானால், இது மதுரைவீர சுவாமியினுடைய கோபத்தினால் ஏற்பட்டதல்லவென்று நீ சொல்வதுபோலாகும்.

கற்பகாம்பாள் :—பெரியவர்கள் சிறியவர்களைப் பார்த்துக் கோபித்துக்கொள்வது நன்மையைக் கருதியேயன்றி, வேறல்ல. ஆகையால், மதுரை வீரசாமி நம்மீது கோபங்கொண்டு நம்மை பயமுறுத்துவதிலேயே அவருடைய அருளும் மறைந்துகொண் டிருக்கிறது.

திருநடன வைபவம் பிள்ளை:—சரி; அப்படியேதான் நாம் கருதவேண்டும்; எல்லாவற்றிற்கும் நீ நேற்று அனுப்பிய ஆளையே இன்றைக்கும் வண்டியோடு அனுப்பி ஸ்வாமியாரை வரவழை—என்றார்.

கற்பகாம்பாள் அப்படியே செய்வதாகக் கூறி, அவ்விடத்தை விட்டு, உள் புறத்திற்குப் போய்விட்டாள்.

அன்றையதினம் காலை சுமார் பத்துமணிக்குள்ளாகவே ஸ்வாமியார் அந்த பங்களாவிற்கு வந்து சேர்ந்துவிட்டார். அவர் தோற்றத்தில் ஆஜானுபாகுவாய்ப் பெருத்திருந்த சரீரமுடையவரா யிருந்தார். அவர் சுமார் ஆறடி உயரம் வளர்ந்திருந்ததன்றி, அவருடைய மார்பும் மிக விசாலமாய் அகன்றிருந்தது. அவருடைய தலை முழுதும் ஜடைகளேமயமாய் நிறைந்து அடர்ந்திருந்தன. அவைகளை அவர்

தூக்கி தலையின் உச்சியில் லிங்கம்போலக் கட்டிக்கொண்டிருந்தார். அவர் தமது பின்புறத்தில் பயங்கரமான ஒரு பெரிய புலியின் தோலைப் பிரித்துக் கட்டிக் கொண்டிருந்தார். இடையில் காஷாயம் நனைக்கப்பெற்ற ஒரு கோவணம் மாத்திரம் இருந்தது. ஆகையால், அவருடைய முதுகுப் பக்கத்திலிருந்த புலித்தோலே அவருக்கு ஆடையாகவும், படுக்கையாகவும், குடையாகவும், பீடமாகவும் பல காரியங்களுக்கு உபயோகப்பட்டன. ஒரு திருவோடு, ஒரு கோணல் தடி, ஒரு சிறிய துணி மூட்டை ஆகியவைகளே அவர் கைகளில் காணப்பட்ட ஆஸ்தி. அவருடைய சரீரம் முற்றிலும் கணக்கற்ற ருத்ராக்ஷங்கள் நிறைந்திருந்தன. ஜடைகள், கோவணம், அடிப்பாதம் ஆகிய மூன்று இடங்கள் நீங்கலாக மற்ற சர்வாங்கத்திலும் ஒரே விபூதிமயமாய்ப் பூசப்பட்டிருந்தது. அவர் கால்களில் இரும்பு முள்கள் நிறைந்த பாதரக்ஷை யணிந்திருந்தார்.

மொத்தத்தில், அவருடைய ஆஜானுபாகுவாயிருந்த இரட்டை நாடிச் சரீரம், அகன்ற மார்பு, தடித்த தொடைகள், முண்டாக்கள் முதலியவைகளும் அவருடைய பயங்கரமான அலங்காரமும் ஒன்றுகூடி, பரமசிவனுடைய ஜடாபாரங்களிலிருந்து கங்கை இறங்குவதாயும், அவர் காளைமாட்டின் பக்கத்தில் கம்பீரமாய் சூலத்தோடு நிற்பதாயும் ரவிவர்மாவால் எழுதப்பட்டுள்ள படத்தின் தோற்றம்போல் இருந்ததாகையால், அது அவரைப் பார்த்தோர் எவராயிருந்தாலும், அவரிடம் ஒருவித பயபக்தி விநய விசுவாசத்தைக் கொள்ளும்படி செய்யத் தக்கதாயிருந்தது.

மந்திரவாதிகள், துறவிகள் முதலியோரிடம் சிறிதும் நம்பிக்கையோ, மதிப்போ வைக்காத மேல்நாட்டு நாகரிகத்தைத் தழுவினவரான திருநடன வைபவம் பிள்ளைகூட



இந்த ஸ்வாமியாரைக் கண்டு அஞ்சி மனப்பூர்வமான பயபக்தி கொண்டு அவருக்கு முன்னால் கைகட்டி நின்றாரென்றால், இந்தப் பரதேசியாருடைய வெளித்தோற்றத்தின் மகிமை எப்படி இருந்திருக்குமென்பது கூறாமலே விளங்கும்.

அந்தத் துறவி, இந்திராணியம்மாள் படுக்க வைக்கப்பட்டிருந்த அறைக்கருகிலிருந்த ஒரு கூடத்தில் தமது புலித்தோலாசனத்தின்மேல் கால்மேல் கால்போட்டு கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு, "பரமசிவம், வேலாயுதம், முருகா, முருகா" என்று அப்போதைக்கப்போது வாய்விட்டுக் கூவுவதும், தமது கண்களை மூடி நிஷ்டையில் ஆழ்வதும் சிறிது நேரத்தில் தமது கண்களைத் திறப்பதுமாயிருக்க, அப்போது திருநடன வைபவம் பிள்ளை, கற்பகாம்பாள் இன்னம் வேறு பலர் முதலியோர் கைகட்டி அடக்க வொடுக்கமாய் எதிரில் நின்றனர். சிறிது நேரம் பொறுத்திருந்த பிள்ளையவர்கள் பரதேசியாரை நோக்கி, தமது கைகளைக் கட்டிக்கொண்டு, "ஸ்வாமிகள் நேற்று இங்கு விஜயம் செய்துவிட்டுப் போனபோது தெரிவித்த சங்கதிகளையெல்லாம் நான் தெரிந்துகொண்டேன். என் குழந்தைகளிருவருக்கும் விவாகம் நடத்த நான் ஏற்பாடு செய்திருப்பதெல்லாம் ஸ்வாமிகளுக்குத் தெரியாததல்ல. அடுத்த வாரம் வைக்கப்பட்டிருந்த முகூர்த்தத்தை ஒத்தி வைத்துக்கொண்டிருப்பதாக இன்று காலையில் மன்னார்குடியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. மறுபடி அவர்கள் முகூர்த்த நாள் குறித்து எழுதுவதற்குள் எங்கள் மூத்த பெண் தேறி எழுந்திருக்க வேண்டும். எங்கள் குல தெய்வமான மதுரைவீர சாமியின் கோபத்தினால் இவ்வித நிலைமை ஏற்பட்டிருப்பதாக ஸ்வாமிகள் சொன்னதாகக் கேள்வியுற்றேன். அது விஷயத்தில் ஸ்வாமிகளைக் கொண்டே தக்க

சாந்தி முதலியவை நடத்திவைக்க வேண்டுமென்ற கருத்தோடு நான், ஸ்வாமிகள் இவ்வளவு தூரம் வரும்படியான பிரயாசையைக் கொடுத்தேன். தஞ்சாவூரார் என்ன காரணத்தினால் இந்த முகூர்த்தத்தை நிறுத்தி இருக்கிறார் என்பதையும் ஸ்வாமிகளின் ஞானதிருஷ்டியின் மூலம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது எங்களுடைய அவா. ஸ்வாமிகள் கிருபை கூர்ந்து, எங்கள் கோரிக்கையை நிறைவேற்றிவைக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். இது விஷயத்தில் ஸ்வாமிகளுடைய பூஜைக்கு எவ்விதமான ஏற்பாடுகளோ, சாமான்களோ தேவையானாலும் அவைகளைச் சேகரம் செய்துகொடுக்க சித்தமாய்க் காத்திருக்கிறோம். ஸ்வாமிகள் கிருபைசெய்து, எங்கள் குழந்தை பிழைத்து எழுந்திருக்கும்படியான மார்க்கத்தைத் தேடவேண்டும்" என்று கூறி வேண்டிக்கொள்ள, பரதேசியார், "அப்பா, தம்பீ, தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ வேண்டுமென்னும் கருத்துடனேயே நான் உலகைத் துறந்து பரதேசியானேன். மனிதராய் ஜனித்த நாம் நம்மைப் படைத்த ஆண்டவரைத் தொழுவதையும், அவருக்குப் பூஜை அர்ச்சனை நிவேதனம் முதலியவற்றை நடத்துவதையும் போன்ற ஆநந்தம் நமக்கு வேறு எதில் உண்டாகப் போகிறது. மனிதர் மகாராஜனுடைய பதவியில் இருந்தாலும், அதிலும் சில சமயங்களில் விரக்தி ஏற்பட்டுவிடும். போஜனம் தெவிட்டிப்போகும். மற்ற எல்லாவிதமான சுகபோகங்களும் சப்பிட்டுப் போய்விடும். கடவுளுக்கு நாம் செய்யும் பக்தியும் வழிபாடும் மாத்திரம் செய்யச் செய்ய மேன்மேலும் ஊறும் அமிர்தம்போல் இனிக்குமேயன்றி அதில் வெறுப்போ, தெவிட்டலோ ஏற்படாது. அப்படி இருக்கக் கரும்பு தின்பதற்கு எவரேனும் கூலி கேட்பதுண்டா. தம்பி, நீ கவலைப்



படாதே. இந்தத் தோட்டத்தில் எங்கேயாவது வேப்பமரம் இருந்தால், அதன் அடியில் ஒரு சிறிய பந்தல் போட்டுக் கொடுங்கள். அதில் வாழை மரங்கள், தோரணங்கள் முதலிய அலங்காரங்களை உங்கள் இஷ்டம்போலவும் சௌகரியம் போலவும் நீங்கள் செய்யலாம். அதற்குள் நான் மண்ணினால் மதுரைவீர சுவாமிகளுடைய சிலை செய்துவைத்து, பூஜை, ஜெபம் முதலியவை நடத்தி, சில தினங்கள் வரையில் பிரார்த்தனை செய்கிறேன். அதன் பிறகு ஆண்டவருடைய சித்தம் எப்படி இருக்கிறதோ பார்க்கலாம். ஆனால், ஆண்டவருடைய கிருபையைத் திருப்புவது கேவலம் அசேதனனான என் கையில் அடங்கிய காரியமல்ல. ஆகையால், குழந்தைக்கு அவசியம் குணம் உண்டாக்கி விடுகிறேனென்று நான் உறுதி செய்து கொடுப்பதாய் நீங்கள் கருதக்கூடாது. குழந்தை தேறிப் பிழைத்தால் உங்கள் பாக்கியம்; தேறுவிட்டால், அது கடவுள் சித்தம். நான் செய்யப்போவது மனிதப் பிரயத்தனமே. இதுவன்றி, நீ கோரும் இன்னொரு விஷயத்தையும் முருகப்பெருமான் அருளால் நான் அறிந்து சொல்ல முயற்சிக்கிறேன். அதாவது, தஞ்சாவூரார் என்ன காரணத்தினால் முகூர்த்தத்தை ஒத்திவைக்கக் கேட்டுக்கொண்டார் என்பது உங்களுக்குத் தெரியவேண்டும். அதையும் நான் கவனிக்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட திருநடன வைபவம் பிள்ளை ஸ்வாமியாரிடம் அபாரமான மதிப்பும் மரியாதையும் கொள்ளலானார்; மற்ற போலிச்சாமியார்கள்போல் தாம் எல்லாவற்றையும் சாதித்துவிடுவதாக வாய்ப்பந்தல் போடாமல், ஸ்வாமியார் மிக அடக்கமாகவும், மனித சக்திக்குத் தக்க

படியும் வாக்களித்தது பிள்ளையவர்களது மனதில் பெருத்த நம்பிக்கையையும், திருப்தியையும் உண்டாக்கியது.

அவர் ஸ்வாமியாருக்குத் தக்க உபசார மொழிகள் கூறிவிட்டு, அப்போதே பல ஆட்களை ஏவி, அவர் குறித்த படி பந்தல் முதலியவைகளை நிர்மாணிக்கச் செய்து, ஸ்வாமிகளின் பூஜைக் குரிய புஷ்பங்கள், பிரஸாத வஸ்துக்கள், அபிஷேக திரவியங்கள் முதலியவைகளை ஏராளமாக வரவழைத்துப் பந்தலில் நிரப்பிவிட்டார்.

ஸ்வாமியார் மண்ணினால் பெரிய மதுரைவீர சுவாமிகளின் சிலை ஒன்றைத் தயாரித்து, யந்திரங்களோடு கூடிய பஞ்சலோகத் தகடுகள் சிலவற்றை அந்தச் சிலையின் கீழ் வைத்து அதற்கு ஆடையாபரணங்கள், புஷ்ப மாலைகள் முதலியவற்றை அணிவித்து மந்திர உச்சாடனங்களின் மூலம் அதைக் கிரமப்படி பிரதிஷ்டை செய்து, அதற்கு ஆறு காலங்களில் மந்திரஸ்நானம், அர்ச்சனை, நிவேதனம், தீபாராதனை முதலியவற்றை நடத்தி, எப்போதும் ஜெபம் ஸ்தோத்திரம் முதலியவைகளைச் செய்தபடி ஸ்வாமியார் இரவு பகல் பாராமல் அநேகமாய் எப்போதும் அந்தப் பந்தலிலேயே இருந்து பொழுதைப் போக்கினார். அவர் தமது ஸ்நானம் முதலியவற்றை நடத்திக்கொண்ட காலத்திலும், பகலில் ஒரு வேளை பால், பழம் முதலியவற்றை உண்ட காலத்திலும், பங்களாக் கட்டிடத்திற்குள் அவருக்காகப் பிரத்தியேகமாய் ஒழித்து விடப்பட்டிருந்த விடுதிக்கு வருவதும், மற்ற காலத்தில் மதுரைவீரசாமி பந்தலில் இருந்து ஜெபதபங்களை நடத்துவதுமாய்ச் செய்யலானார்.

ஒவ்வொரு காலத்திலும் பூஜை நடந்தபோது, இந்திராணியம்மாளை ஒரு சாய்மான நாற்காலியில் சார்த்திய படி, வேலைக்காரிகள் பலர் தூக்கிவந்து பந்தலுக்குள் வைக்க, அவளைத் தரையில் சிறிதுநேரம் உட்கார வைத்து, ஸ்வாமியார் வேப்பிலையால் குழையடித்து எலுமிச்சம் பழங்களை அறுத்துக் கழிப்புக் கழித்து, விபூதி, குங்குமம் முதலியவற்



றைப் பூசிவிட்டு, மதுரைவீர சுவாமியின் பாதத்தடியில் கிடத்தி, தெண்டனிடச் செய்து, பிரஸாதம் வழங்கித் திருப்பி அனுப்பி வைக்க, வேலைக்காரிகள் அவளை மறுபடி நாற்காலி மீது சார்த்தி உள்ளே கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

அவ்வாறு இரண்டு தினங்கள் கழிந்தன. இந்திராணியின் துர்ப்பலம் சிறிதளவு நீங்கிப்போனதுபோன்ற குறி ஏற்பட்டது. அவளுடையதேகத்தில் உயிரும், முகத்தில்களையும் திரும்புவது போன்ற தோற்றம் எல்லோருக்கும் கண் கூடாகத் தெரிந்தது. அவள் கட்டிலிலிருந்து தானே எழுந்து சாய்மான நாற்காலியில் உட்காரவும், பந்தலில் நாற்காலியிலிருந்து தானே எழுந்து தெண்டனிடவும் உடம்பில் திடம் ஏற்பட்டிருப்பது போலக் காட்டிக்கொண்டாள். அதுவரையில் அவள் வாயைத்திறந்து பேசுவதற்கும் இயலாமல், அவளுடைய குரல் தொண்டைக்குள் அடங்கிப் போயிருந்தது. இப்போது, தொண்டைக்குள்ளாகவே, ஆம், இல்லை என்பன போன்ற சிறிய மறுமொழிகளைக் கொடுக்கத் தொடங்கினாள்.

அதுவரையில் எவ்வளவோ கீர்த்திவான்களான டாக்டர்கள் வந்து நூற்றுக் கணக்கில் பணத்தைப் பெற்று மருந்து கொடுக்கக் கொடுக்க, வேளைக்கு வேளை அவளுடைய சுறுசுறுப்பும், உயிர்க்களையும் படிப் படியாய்க் குறைந்து தோன்றினவே யன்றி சிறிதும் தெளிவடைந்ததாகத் தோன்றவில்லை யாதலால், இந்தச் சிறிய மாறுபாடு எல்லோர் மனதிலும் அபாரமான சந்தோஷத்தையும் பூரிப்பையும் உண்டாக்கியதன்றி, ஸ்வாமியார் உண்மையில் பெரிய மகான் என்ற அபிப்பிராயத்தையும் உண்டாக்கியது.

முக்கியமாகத் திருநடன வைபவம் பிள்ளையே அடியோடு புதிய மனிதராய் மாறித்தோன்றினார். அதற்கு முன் அவர் தெய்வபக்தி, தெய்வ வணக்கம், தெய்வ வழிபாடு முதலியவற்றை அவ்வளவு உருக்கமாகத் தோற்றுவித்தவரன்று. அத்தகைய மனிதருடைய மனப்பான்மையே அடியோடு மாறிப்போனதாய்த் தோன்றியது. அவரும் ஸ்வாமிக்கு

அர்ச்சனை தீபாராதனை முதலியவை நடந்தபோது பந்தலுக்கு வந்திருந்து, கீழே விழுந்து சாஷ்டாங்க தெண்டனிட்டு ஸ்வாமியின் பிரஸாதம் முதலியவை பெற்றுக்கொண்டு போகத் தொடங்கினார்.

அவ்வாறு அவர் ஒருநாள் மாலையில் வந்து தீபாராதனையை தரிசித்து, அதைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு நமஸ்காரம் செய்த காலத்தில், கற்பூரத்தின் ஜ்வாலை அவரது பக்கம் திரும்பிச் சாய்ந்துசாய்ந்து நிமிர்ந்தது.

அதைக் கண்ட ஸ்வாமியார், "அப்பா, தம்பீ, ஆண்டவர் குறி காட்டுகிறார். அதோ பார் கற்பூர ஜ்வாலை உன் பக்கம் வந்து வந்து நிமிருகிறது. அநேகமாய்க் கூடியவிரைவில் உனக்கு முக்கியமான செய்தி ஏதேனும் கிடைக்கப்போகிறதென்பதை நீ நிச்சயமாக மனதில் வைத்துக்கொள்ளலாம். உங்களுக்குப் பூர்த்தியான நல்ல நிலைமை இன்னம் திருப்பவில்லை; அதற்கு இன்னம் கொஞ்சகாலம் போகவேண்டும் என்று முருகப்பெருமான் குறிகள் காட்டுகிறார்" என்று கூறி பிரஸாதங்கள் வழங்கியனுப்பி வைத்தார்.

அவ்வாறு மதுரைவீர சுவாமியின் பிரசாதம் பெற்றுக்கொண்ட திருநடன வைபவம் பிள்ளை பங்களாவிற்குள் போய்த் தமது இராப்போஜனத்தை முடித்துக்கொண்டார்.

அவர் ஒவ்வொரு இரவிலும் போஜனம் செய்கையில் அவருடைய மனைவியான கற்பகாம்பாளே நேரில் அவருக்குப் பரிமாறுவதும், போஜனம் முடிந்தபின்னர் அவருடன் அவருடைய சயன அறைக்குப் போய் அவருக்குத் தாம்பூலம் முதலியவற்றைக் கொடுத்து உபசரித்துவிட்டு அவர் படுக்கையில் சயனித்துக் கொண்டபின்னர் அங்கிருந்து திரும்பிவந்து தனது போஜனம் முதலியவற்றை கவனிப்பதும் வழக்கம்.

அதே போல, நாம் மேலே குறித்த இரவிலும் காரியம் நடந்தேறியது. ஆனால், அன்று திருநடன வைபவம்



பிள்ளை கற்பூர ஆரத்தியைத் தொட்டு நமஸ்காரம் செய்த காலத்தில் பரதேசியார் ஞான திருஷ்டியால் கூறியதைக் கேட்டது முதல் பிள்ளையவர்கள் சிந்தனையிலாழ்ந்து போனார். அன்று கிடைக்கப்போவது எவ்விதமான செய்தியோ, அது ஏதேனும் கெடுதலானதாயிருக்குமோ என்ற நினைவினாலேயே அவருடைய மனம் சஞ்சலமடைந்து தவிக்கலாயிற்று. அதுவன்றி, இன்னோர் எண்ணமும் உண்டாகி அவரை வதைக்கலாயிற்று. பகற் காலமாயிருந்தால், தபால் மூலமாக எங்கிருந்தேனும் செய்தி கிடைக்கலாம், இராக்காலமாதலால், அநேகமாய் அது தந்தியின் மூலமாய் வரவேண்டும், அப்படித் தந்தியின் மூலம் வருவது சாதாரணச் செய்தியாயிராமல், விபரீதமானதாகத்தான் இருக்கும் என்று அவர் தமக்குத் தாமே யூகித்துக் கொண்டாராதலால், அதனால் அவருடைய மனம் பெருத்த அபாயத்தை எதிர்ப்பார்த்துக் கலவரமடைந்து தவிக்கலாயிற்று. ஆகையால், அன்றைய இரவு அவருக்கு போஜனத்திலேயே நாட்டம் ஏற்படவில்லையாதலால், அவர் இலையில் உட்கார்ந்து, இரண்டொரு நிமிஷத்திற்குள்ளாகவே எழுந்துவிட்டார்.

கற்பூர ஆரத்தி காட்டப்பட்டபோது, கற்பகாம்பாளும் தனது கணவருக்குப் பின்னால் நின்று பரதேசியார் கூறியதைக் கேட்டுக் கொண்டிந்தாளாதலால், அவளுடைய மனநிலைமையும் அதே போல வேதனைக்கிருப்பிடமானதாய் மாறிப் போயிற்று. ஆகவே, இருவரும் மௌனத்திலாழ்ந்து, சந்தோஷம், ஊக்கம், முகக்களை முதலியவின்றி, போஜனகாரியத்தை முடித்தனர். புருஷர் வழக்கப்படி தமது சயன அறைக்குச் சென்றகாலத்தில் மனையாளும் பின் தொடர்ந்து சென்றாள்.

அப்போது திருநடன வைபவம் பிள்ளை மெதுவான குரலில் பேசத்தொடங்கி, "இப்போது ஸ்வாமியார் சொன்னது என்ன சங்கதியாயிருக்குமென்று நானும் எண்ணியெண்ணி மண்டையை உடைத்துக்கொள்ளுகிறேன்.

எனக்கு எதுவும் புலப்படவில்லை. இப்போது ஏதாவது செய்தி வருவதாயிருந்தால் அது அநேகமாய்த் தந்தியின் மூலமாகத்தான் வரவேண்டும்'' என்றார்.

அதைக் கேட்ட கற்பகாம்பாள், "என்னவோ வருவதெல்லாம் வரட்டும். எதுவும் நம் செயலால் நடப்பதல்ல. கடவுள் செயலால் நேருவது, அவருடைய செயலாலேயே பரிகாரமாவது நிச்சயம். நாம் வேதனைப்படுவதில் என்ன ஆகப்போகிறது. நீங்கள் நிம்மதியாகப் படுத்துத் தூங்குங்கள். ஏதாவது செய்தி வந்தால், நான் வாங்கிக்கொண்டு வருகிறேன்'' என்றாள்.

அவ்வாறு பேசிக்கொண்டே இருவரும் சயன அறையை அடைய, அவ்விடம் இருளாயிருந்ததாகையால், திருநடன வைபவம் பிள்ளை, சுவரில் பொருத்தப்பெற்றிருந்த மின்சார விளக்கின் விசையைக் கீழே அழுத்தவே, உடனே குபீரென்று விளக்கின் வெளிச்சம் பிரகாசித்தது. எதிரிலிருந்த அவருடைய பஞ்சணைமீது அவருடைய திருஷ்டி சென்றது. அவர் திடுக்கிட்டு, "என்ன காகிதம் அது! பெரிய உறையோடு கூடிய ஒரு கடிதம் படுக்கையில் இருக்கிறதே! என்ன ஆச்சரியம் இது! யார் இங்கே வந்து இதை வைத்தார்கள்!'' என்று கூறியபடி துடியாகப் பாய்ந்து தமது தலையணைமீது வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தை எடுத்துக் கற்பகாம்பாளுக்குக் காட்டினார்.

அவளும் திடுக்கிட்டு அபாரமான வியப்பும், திகைப்பும், திகிலும், நடுக்கமும் கொண்டு, "இது எப்படி இங்கே வந்தது! நீங்கள் பார்க்க வேண்டுமென்று தலையணையின்மேல் வைத்திருக்கிறார்களே!'' என்று மிகுந்த கலவரத்தோடு கூறினாள். திருநடனவைபவம் பிள்ளையின் மனதும் விவரிக்கவொண்ணாத கலக்கமும், குழப்பமும், பீதியும் கொண்டு தத்தளிக்கலாயிற்று. அவருடைய கைகள் நடுங்கத்தொடங்கின. கண்கள் மயக்கங்கொண்டன.

அவர் உடனே விளக்கண்டை போய் அந்த உறையின் மேல்விலாசத்தைப் பார்க்க, அது அவருக்கே எழுதப்



பட்டிருந்ததென்பது தெரிந்தது. அவர் ஆவலோடு உறையின் வாயைக் கிழித்து உள்ளே இருந்தவைகளை வெளியில் இழுக்க, அதற்குள் ஒரு போட்டோப் படமும், ஒரு கடிதமும் இருந்தனவென்பது தெரிந்தது.

பிள்ளையவர்கள் மிகுந்த பதைப்போடு படத்தை எடுத்து அதன் திரையை விலக்கிப்பார்க்க, அதில் அற்புதமான அழகு வாய்ந்த ஒரு யௌவன ஸ்திரீயின் வடிவும் காணப்பட்டது. அதைப் பார்த்த பிள்ளையவர்கள் முற்றிலும் குழம்பிப்போன மனத்தினராய், "இது யாருடைய படம்! யார் இன்று இங்கே அனுப்பினார்கள்!'' என்று கூறியபடி கற்பகாம்பாளிடம் நீட்ட, அதை மிக ஆவலோடு வாங்கிப் பார்த்த அவரது மனையாட்டி, "யார் இவள்! அடியில் புஷ்பாங்கி என்று பெயர் எழுதப்பட்டிருக்கிறதே!'' என்று வியப்போடு கூறினாள்.

திருநடன வைபவம் பிள்ளை "என்ன, புஷ்பாங்கியா! புதுமையான பெயராயிருக்கிறதே! இருக்கட்டும், கடிதத்தைப் பார்ப்போம்'' என்று கூறிய வண்ணம் நான்காய் மடிக்கப்பட்டிருந்த கடிதத்தைப் பிரித்து மேலும் கீழும் இரண்டு மூன்று தடவை பார்த்துவிட்டு, "அடியில் கந்தசாமி யென்று கையெழுத்துச் செய்யப்பட்டிருக்கிறதே! எனக்குக் கண் இருளுகிறது. இதை நீயே படி'' என்று கூறியபடி அதை அவளிடம் கொடுக்க, அவள் அதை வாங்கிப் படிக்கலானாள். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

புஷ்பாங்கி என்னும் பொய்ப்பெயர் புனைந்துள்ள பூம்பாவாய்!

புஷ்பம்போன்ற சரீரமுடையவள் என்ற கருத்தைக் காட்டும் இந்தப் புனைப்பெயரை வைத்துக்கொண்டதிலிருந்து, உண்மையில் நீ மிருதுவான இயல்புகளுடையவளாகத்தான் இருக்க வேண்டுமென்ற எண்

ணம் எவருக்கும் அவசியம் உண்டாவது நிச்சயம். அதற்கநுசரணையாக அக்ஷர லக்ஷம் பெறத்தக்கதும், முத்தும், மணியும் போன்றதுமான உன்னுடைய ஒவ்வொரு வாக்கியமும் உன்னுடைய மிருதுவான இயல்புகளையும், புனிதத் தன்மையையும், உத்தம லக்ஷணங்களையும் ஆயிரம் நாக்கள் கொண்டு பறைசாற்றுவது போல சந்தேகமற வெளிப்படுத்துகிறது.

ஆகவே, நாம் ஒருவரையொருவர் நெருங்கி உண்மைகளைத் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் நேரும் பட்சத்தில், நீ வெளியிடப்போகும் உன்னுடைய உண்மையான பெயர் இவ்வளவு அழகாயிருக்குமோவென்பதும், உன் குணாமிருதத்தை இவ்வளவு நன்றாக அது எடுத்துக் காட்டுமோ என்பதும் எனக்கு சந்தேகமாயிருக்கிறது. ஆகையால், உன் நிஜப்பெயரைவிட்டு, எப்போதும் நீ இந்தப் புனைபெயரையே வைத்துக்கொள்வது முற்றிலும் தகுதியானதா யிருக்குமென்று நான் மனதார எண்ணுகிறேன்.

அது நிற்க, நீ விவரித்துள்ள உன் குடும்ப விஷயங்களும், சொந்த விஷயங்களும் உண்மையான வரலாறுகளா யிருக்குமானால், உனது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு கல்லும் கரைந்துருகுமென்று சொல்வது மிகைப்படச் சொல்வதேயாகாது. ஏனென்றால், கல்லினும், மரத்தினும் கடினமான இருதயம் படைத்த துஷ்டர்கள்கூட உன் விஷயத்தில் இரங்கி இளகி உருதவரென்பது நிச்சயமான விஷயம். ஆகவே, உன் விஷயத்தில் என் மனம் எவ்வளவு அபாரமாகப் பரிதபித்து வேதனைப்படுகிறது என்பது நான் தெரிவிக்காமலே உனக்கு விளங்கும்.

நீ எழுதியுள்ள வரலாறு உண்மையாக இருக்குமானால், நீ நேரில் எனக்கு எழுதியது உனக்கு அற்பமும் களங்கத்தை உண்டுபண்ணாது; அதுவன்றி, இவ்வளவிற்கும் துணிந்து நீ உன் நிலைமையை உள்ளபடி



எடுத்துரைத்தது உன் சிலாக்கிய குணங்களைப் பன்மடங்கு சோபிக்கச் செய்வதாகவே முடியும்.

அதுவன்றி, உன் துன்பத்தை விலக்குவதற்கு, நான் என் உடல் பொருள் ஆவி ஆகிய யாவற்றையும் ஈடுபடுத்த எந்த நேரத்திலும் ஆயத்தமாகக் காத்திருப்பேன்.

ஆனால், நீ இவ்வளவு அழகாய் விஷயங்களை எடுத்துக் காட்டியதில், உன் பெயரையும், விலாசத்தையும் மறைத்து வைத்திருப்பது இவ்வளவும் சொப்பனமோ என்ற சந்தேகத்தை உண்டாக்குவதாயிருக்கிறது. ஆனால், நீ உன் முதல் கடிதத்தில் அவைகளை மறைத்து வைத்துக்கொள்வதே நீ செய்யத்தக்க நேர்மையான காரியமென்பதை நான் ஒப்புக்கொண்டே தீர வேண்டும்.

ஆனால், இப்போது நாமிருவரும் ஒருவர் மனதை மற்றவர் அறிந்துகொண்டு விட்டோமாதலால், இனி நாம் நெருங்கி மேலே ஆகவேண்டிய விஷயங்களைப் பற்றிக் கலந்து ஆலோசிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டதாகையால், நீ இந்த மூடுமந்திரத் திரையைச் சிறிதளவு விலக்கி, இது கனவல்ல நனவே என்ற எண்ணத்தை என் மனதில் உண்டாக்கி என்னை ஊக்க வேண்டுமென்ற கோரிக்கையை உனக்குத் தெரிவிக்கும் பொருட்டே நான் இந்தக் கடிதத்தை இப்போது எழுதியனுப்பி இருக்கிறேன்.

உன் பெயர் விலாசம் முதலியவற்றை மாத்திரம் நீ எழுதினால்கூட, அப்போதும் சம்சயப்பேய் நீங்காது. ஆதலால் முதன் முதலில் உன் வடிவத்தை நான் கண்கூடாய்ப் பார்க்கும்படி உன் புகைப்படமொன்றை அனுப்பி வைத்தால், உடனே எல்லாம் நிச்சயப்படும். நீ எந்த மார்க்கத்தை எனக்குக் காட்டினாலும், அதைப் பின்பற்றும் துணிவும் எனக்கு ஏற்படும்.

அதை அனுப்புவதோடு நான் உனது இல்லத்தை அடைந்து உன்னோடு நேரில் உரையாடுவதற்கு உரிய

மார்க்கத்தையும் மறவாமல் எழுதியனுப்புவாயென்று உறுதியாக நம்புகிறேன்.

புஷ்பாங்கி என்னும் அற்புதப் பெயர் புனைந்த கற்பிற்கரசியான ஸ்திரீ ரத்னமே! உன் குணத்தழகையும், உன் கடிதத்தின் விதரணையையும் இன்னவிதந்தான் புகழுவதென்பதை யறியாமல் நான் தவிக்கிறேன். உன் முதல் கடிதத்தால் அபாரமாக என் மனதைச் சலனப்படுத்திவிட்ட நீ உன் அடுத்த கடிதத்தின் மூலம் அதற்குத் தக்க பரிகாரம் அவசியம் தேடுவாயென்று உறுதியாக நம்புகிறேன்.

நீ முன்னர் அனுப்பியதுபோலவே இனியும் உன் கடிதங்களை நேரில் என் ஜாகைக்கே அனுப்பிவிடலாம். கோவில் மதில்சுவரின் மாடத்தில் நீ உன் கடிதத்தை வைப்பது பெரிதும் அபாயகரமானது. நான் அங்கே போய் அடிக்கடி தேடிப் பார்ப்பதற்கும் எனக்கு அவகாசம் கிடைக்காது.

இங்ஙனம்

உன் கடிதத்திற்கடிமையான

கந்தசாமி.

—என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த கற்பகாம்பாள் சித்தப்பிரமை கொண்டவள்போல் மாறி, "என்ன பைத்தியம் இது! இந்த மாதிரியான நாட்டமுள்ளவரா இவர்! கந்தசாமி என்பது இந்த மனிதரா, அல்லது, வேறொருவரா! நாம் கனவிலும் எதிர்பார்க்காத கேலிக் கூத்தாயிருக்கிறதே இது!" என்று வியப்போடு கூறினாள். அதைக் கேட்ட திருநடன வைபவம் பிள்ளை, "வேறு மனிதரால் எழுதப்பட்டதாயிருந்தால், இது நம்மிடம் ஏன் வருகிறது? தஞ்சாவூரார் தந்தியின் மூலம் முகூர்த்தத்தை நிறுத்திய காரணம் இப்போது விளங்குகிறதல்லவா?" என்றார்.

அத்தியாயம்—2.

ஆமன்

## சமய விளக்கம்

சேயருக்கன் பீதகனு மென்றிவற்றை ஆணாக
வாயுணர்ந்தோர் கண்ட வழக்கு"

என்று சிநேந்திர மாலை கூறுகிறது. சேயாகிய செவ்வாய், அருக்கனாகிய சூரியன், பீதகனாகிய வியாழன் ஆகியவை



1932.59

ஆண் தன்மை யுடையவை, சுக்கிரன், சந்திரன், ராகு ஆகிய மூன்றும் பெண் தன்மை யுடையவை, புதன், சனி, கேது ஆகிய மூன்றும் அலித்தன்மை யுடையவை என்னும் தகவல்களை நாம் மேற்படிப் பாடலினால் தெரிந்து கொள்ளுகிறோம்.

இதை ஜாதகாலங்காரம் சற்று வேறு மாதிரியாகக் கூறுகிறது:—

" வகுத்திடும் வாரம் மதிபுகர் பெண்ணும்
தொகுத்த சேய்மந்தன் சூரியன் பொன்னும்
பகுத்திடும் ஆணும்; பகர்புத னலிசம்
நிகழ்த் தோன்றுண் பெண்ணுகிடு மிரண்டே"

என்பது ஜாதகாலங்காரப் பாடல். இதன்படி, சந்திரன் சுக்கிரன் ஆகிய இரண்டும் பெண்தன்மை யுடையவை; செவ்வாய், சனி, சூரியன், வியாழன் ஆகிய நான்கும் ஆண் தன்மை யுடையவை; புதன் ஆண் பெண் ஆகிய இரண்டு குணங்களையும் உடையது என்று இப்பாடல் கூறுகிறது.

வேறு சில நூல்களில் ராகுவும் அலித்தன்மையுடையது என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

சந்திரன் சுக்கில பக்ஷத்தில் சுக்கிலத்தையும் கிருஷ்ண பக்ஷத்தில் சோணிதத்தையும் பொழிவதாக நாம் ஏற்கனவே தெரிந்துகொண்டோம். கணேசருடைய அர்ச்சனையில் அவர் நிருதிமதே நம:, மகாபலாய நம:, புருஷாய நம: என்று குறிக்கப்படுவதிலிருந்து பூர்வபக்ஷமாகிய சுக்கில பக்ஷத்துச் சந்திரன் பலராமன் என்றும், அபர பக்ஷத்துச் சந்திரன் தம்பியாகிய கிருஷ்ணன் என்றும் கருதப்படுவது நன்றாகத் தெரிகிறது.

172259



அலி, முசலி என்ற பெயர்களுக்கு சந்திரன், பலராமன் என்ற அர்த்தங்கள் கொடுக்கப் பட்டிருப்பதை அகராதிகளில் காணலாம்.

'ஆலம்' என்றால் தண்ணீர் என்பது கருத்து. 'ஆலி' என்பது தண்ணீரின் அதிதேவதையான சந்திரனை, அல்லது, சுக்கிரனைக் குறிக்கும் சொல். அலி, ஆலி, முசல்மன் முதலிய பெயர்கள் நம் இஸ்லாமிய சகோதரர்களிடம் அதிகமாய்ப் பழக்கத்திலிருக்கின்றன. ஆனால், அப்பெயர்களுக்கு அவர்கள் என்ன பொருள் கூறுகின்றனரென்பது நமக்கு விளங்கவில்லை.

நாம் கிறிஸ்தவர்களுடைய வேதமாகிய பைபில் என்னும் நூலை ஆராய்ந்தால், அதில் நம் தெய்வங்களில் பல காணப்படுகின்றன.

கிறிஸ்தவர்கள் இன்னவிதமாகக் கடவுளை ஸ்தோத்திரம் செய்ய வேண்டுமென்று ஏசுநாதரே சொல்லிக் கொடுத்ததாக அவர்களுடைய புதிய ஆகமம் கூறுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் இப்போதும் அன்றாடம் கடவுளை அடியில் வருமாறு தொழுகிறார்கள்:—

மோக்ஷ லோகத்திலுள்ள எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் புனிதகரமானது; உமது ராஜ்பாதிபத்யம் இங்கும் உண்டாவதாக; மோக்ஷ லோகத்தில் நடப்பது போல, பூலோகத்திலும் உமது சித்தம் நிறைவேறட்டும்.

எங்களுடைய அன்றாட போஜனத்தை இன்று கொடுத்தருளும்.

நாங்கள் எங்களிடம் கடன்படுவோரை மன்னிப்பது போல, நீரும் எங்கள் கடன்களை மன்னித்துக் கொள்ளும்.

O31 N34

கெட்ட விஷயங்களில் எங்களை நடத்தாமல், தீங்குகளிலிருந்து எங்களைக் காப்பாற்றும்.

ஏனென்றால், ராஜ்யம், அதிகாரம், பெருமை ஆகியவை எப்போதும் உம்முடையவைகளே.—ஆமன்.

என்பது கிறிஸ்தவர்களுடைய அன்றாட தெய்வப் பிரார்த்தனை. இந்தப் பிரார்த்தனையை ஏசுகிறிஸ்துவே ஜனங்களுக்கு உபதேசித்ததாக அவர்களுடைய புதிய ஆகமம் கூறுகிறது. ஆகையால், இந்தப் பிரார்த்தனையில் நாம் குற்றங் கண்டுபிடிப்பதோ, இது நம்முடைய பிரார்த்தனைகளைப்போல் அர்த்த புஷ்டியானதாயும் கம்பீரமானதாயும் இல்லை என்று இழிவுபடுத்துவதோ தகாத செய்கைகள். நாம் இதில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது, முடிவில் உபயோகப்படுத்தப் பட்டிருக்கும் ஆமன் என்ற சொல்லையே.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் பிரார்த்தனையைச் சொல்லி, கடைசியில் ‘ஆமன்’ என்று கூறி முடிக்கிறார்கள். ‘அப்படியே ஆகட்டும்’, ‘ததாஸ்து’ என்பது அதன் கருத்து என்ற அபிப்பிராயம் இருந்து வருகிறது. இப்படிச் சொல்வது, வரம் கேட்பவரே அதைக் கொடுப்பதாக வாக்களிப்பது போன்ற கருத்தைக் கொடுக்குமாதலால், அது முதலில் பகுத்தறிவிற்கு ஒத்ததாகவே தோன்றவில்லை. அதுவன்றி இவ்வாறு அர்த்தம் செய்வோர் கிறிஸ்தவர்களுடைய பழைய ஆகமத்தை நன்றாகப்படிக்கவில்லை என்றே நாம் கருதவேண்டும்.

பழைய ஆகமத்தில் “ஆமன்” என்பது ஒரு தெய்வத்தின் பெயராகக் கருதப்பட்டு வந்ததென்பது நன்றாகத் தெரிகிறது. அதைப் பலவிதமாக மாற்றி ஈசுவரவேல்



வகுப்பார் தங்கள் பெயர்களாக வைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். ஆமடு, ஆமாள், ஆமாளிகை, ஆமம், ஆமன்னா, ஆமரய்யா, ஆமசேய், ஆமாசய்பா, ஆமத்தாய், ஆமக்கா, ஆமி, ஆமியள், ஆமக்கத்தா, ஆமநாதப்பா, ஆமசடை, ஆமீசப்படு, ஆமண்ணன், ஆமராம், ஆமாஸ் என்பனபோன்ற பலவிதமான பெயர்கள் பழக்கத்திலிருந்ததென்பதை நாம் கிறிஸ்தவருடைய பழைய ஆகமத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

ஆகவே, ஆமன் என்ற சொல்லுக்கு ‘ததாஸ்து’ அல்லது ‘அப்படியே ஆகட்டும்’, என்று அர்த்தம் சொல்வது பொருந்தாது. கிறிஸ்தவர்களுடைய பிரார்த்தனையிலுள்ள ஆமன் என்ற முடிவுச் சொல், ஆதிகாலத்தில் தேபாவிலும், பாலஸ்தானத்திலும் வணங்கப்பட்ட தெய்வத்தைக் குறிக்கிறது.

கிறிஸ்தவர்களுடைய பழைய ஆகமத்தில் இன்னம் வேறு பல தெய்வங்கள் இருக்கின்றன. தமஸ் (Tammuz), ராகப் (Rahab), அஷ்டரதி (Ashtarath), பால் (Baal) அல்லதுபால் ஐயம் (Baalim), கணங்களின் நாதர் அல்லது சேனாபதி (Lord of the Hosts) முதலிய தெய்வங்களை அவர்கள் வணங்கினார்கள். முக்கியமாய் ஈசுரவேலர் கணங்களின் நாதர் அல்லது சேனாபதி என்ற தெய்வத்தை பிரதானமாக மதித்து வழிபட்டனர். அவர்கள் எதிரிகளோடு யுத்தத்திற்குச் சென்ற காலத்தில், இந்த தெய்வத்தையும் கூடத் தூக்கிக்கொண்டு சென்றே போர் நடத்தினார்கள். அவர்களுடைய பூசாரிகள் குறி சொல்லும்போது சேனாபதி தெய்வம் இன்னின்ன விதமாகச் சொல்லுகிறது என்றே கூறுவது வழக்கம். அவர்களுடைய கணங்களின்

நாதர் (Lord of the Hosts) என்னும் தெய்வம் கணபதியா அல்லது சுப்ரமணியரா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. சுப்ரமணியத்தை பாலன், பாலசுப்ரமணியம் என்று நம்மவர் குறிக்கின்றனர். சுப்ரமணியம் என்னப்படும் செவ்வாய் கிரகமே சேனாதிபதி என்பதை நாம் ஏற்கனவே தெரிந்துகொண்டிருக்கிறோம். பால், பாலையம் என்ற பெயர்களும் வருகின்றனவாதலால், சேனாபதி என்பது பாலனையே குறிக்கிறதா, அல்லது, கணநாதரைக் குறிக்கிறதா என்பது தெரியவில்லை.

ஆனால், அந்த தேசத்தின் பெயர் பாலஸ்தானம் (Palestine). இராஜ்ஜியத்தின் பெயர் சமரியா என்பது. சமர் என்றால் சண்டை என்று அர்த்தம். சுப்ரமணியம் சமரபதி, சமராபுரிக் கடவுள் என்று குறிக்கப்படுகிறது. சமரபதி என்னும் ஊர் நம் நாட்டில் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

பாலஸ்தானம் என்று குறிக்கப்படும் தேசம் பழைய காலத்தில் பயணி (Phoeni) என்றும் குறிக்கப்பட்டது. சமரியா என்ற ராஜ்யத்திலிருந்த குருக்கள்மார்களுக்கு சமரத்தன் (Samarattan) என்று பெயர். அவர்கள் அஷ்டரதி என்று குறிக்கப்படும் காமாக்ஷியாகிய ரதியையும், தமஸ் என்று சொல்லப்படும் காமனையும் தெய்வமாக வணங்கினார்கள். நம்முடைய மகாராஷ்டிர தேசத்தில் ஆதி சிவாஜிக்கு குருவாயிருந்த சைவப் பிராம்மணரை சமர்த்த ராம்தாஸ் என்று குறிப்பதுண்டு. நம் தேசத்தில் உள்ள ஒரு வகுப்புப் பிராம்மணர் ஸ்மார்த்தர் என்று குறிக்கப்படுகின்றனர். அதற்கு ஸ்மிருதியை அநுசரிப்பவர் ஸ்மார்த்தர் என்று பொருள் கூறுகின்றனர். வைஷ்ணவர்களும் ஸ்மி



ருதியை அநுசரிக்கிறார்களானாலும், அவர்களுக்கு ஸ்மார்த்தர் என்ற பெயர் இல்லை.

சைவர்களுடைய கந்தபுராணத்தில் குறிக்கப் படும் சூரன் முதலியோர் கிறிஸ்தவருடைய பழைய ஆகமத்தில் வருகின்றனர். கருங்கடலுக்கு அருகில் இருந்த கிரௌஞ்சம், அல்லது, கௌஞ்சத்தை ஆண்ட அசுரனை சுப்ரமணியன் சம்மாரம் செய்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது. அராபியா, பர்ஷியா ஆகியவற்றிற்கு அப்பாலுள்ள கருங்கடலுக்கு (Black Sea) அருகில் ஆதியில் அசிரியா என்று ஒரு தேசமிருந்து அழிந்து போய்விட்டது. அதன் கல்வெட்டு சிலாசாசனங்களில் கேளஞ்சகம் என்ற பெயர் காணப்படுகிறது. அவ்விடத்தில் அசூர் என்ற அரசர்கள் ஆண்டு இதர தேசங்களை நாசப்படுத்தி இருக்கிறார்கள். அவர்கள் பாலஸ்தானத்தை அழித்து அங்கிருந்த சமரத்தன் குருக்கள்மார்களை சிறைப்படுத்திக்கொண்டு போய்த் தங்கள் ஜனங்களுக்கு கடவுள் வழிபாடு கற்றுக்கொடுக்கும்படி அமர்த்தியதாக கிறிஸ்தவருடைய பழைய ஆகமம் கூறுகிறது.

ஏசு கிறிஸ்து தச்சர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும் தெரிகிறது. அவர் தக்கன் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறார். (சுப்ரமண்யருடைய பெயர்களில் தக்ஷன் என்பது ஒன்று). தக்க யாகத்தில் சம்பந்தப்படும் அரசருடைய பெயர் பிராசீன பணிச்சி என்பது. பயணி (Phoeni) என்று ஆதிகாலத்தில் குறிக்கப்பட்ட இடத்தில் இருந்தவர்களை ரோமர்களும், கிரேக்கர்களும் பணிச்சி (Punic, Punix or Punichi) என்று குறித்தனர்.

இன்னும் நாம் நம்முடைய பழைய தமிழ் நூல்களில் ஜீவகன் என்பவனுடைய சரித்திரத்தைப் படிக்கிறோம். ஏசு கிறுஸ்து ஜீவுகளின் அரசர் (King of the Jews) ஆக விரும்பியவர் என்று குறிக்கப் பட்டிருக்கிறார். ஜீவுகள் (Jews) என்று குறிக்கப்படும் ஆதிக்கிறிஸ்தவர்களுடைய பஞ்சாங்கக் குறிப்பு கிறிஸ்தவ வேதத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது. அதில் காணப்படும் மாதங்

களின் பெயர்கள் முதலியவற்றை நாம் கவனித்தால், அவர்களுடைய தெய்வங்களுக்கும், நம் தெய்வங்களுக்கும் சம்பந்தம் உண்டா இல்லையா என்பது சந்தேகமற விளங்கிப் போகும்.

ஜீவுகள் சாந்திரமானப்படி தங்கள் வருஷத்தைக் கணக்கிட்டார்கள். அவர்களுடைய வருஷம் வஸந்த ருதுவிலிருந்து ஆரம்ப மாயிற்றாலும், அவர்கள் பாபிலோனியாவில் சிறைவாசம் செய்து விட்டு வந்த பிறகு, தங்கள் ஏழாவது மாதம் பூர்ணிமையிலிருந்து புது வருஷப் பிறப்பைக் கொண்டாடும் வழக்கத்தை வைத்துக்கொண்டனர்.

| ஜீவுகளின் மாதம் (Jewish Month) | இங்கிலீஷ் மாதம் | தமிழ் மாதம் |
|---|---|---|
| 1. அப்பீப் (Abib) | மார்ச்—ஏப்ரல் | சித்திரை |
| 2. சிவ் அல்லது அயர் (Ziv or Ayyar) | ஏப்ரல்—மே | வைகாசி |
| 3. சிவன் (Sivan) | மே—ஜூன் | ஆனி |
| 4. தமஸ் (Tammuz) | ஜூன்—ஜூலை | ஆடி |
| 5. அப் (Ab) | ஜூலை—ஆகஸ்ட் | ஆவணி |
| 6. இளல் (Elul) | ஆகஸ்ட்—செப்டம்பர் | புரட்டாசி |
| 7. எத்தனம் அல்லது திஸ்ரீ (Ethanum or Tisri) | செப்டம்பர்—அக்டோபர் | ஐப்பசி |
| 8. மார்சேசிவன் (Marchesivan) | அக்டோபர்—நவம்பர் | கார்த்திகை |
| 9. சிசலயா (Chesleu) | நவம்பர்—டிசம்பர் | மார்கழி |
| 10. தபத் (Tebet) | டிசம்பர்—ஜனவரி | தை |
| 11. செபத் (Sebat) | ஜனவரி—பிப்ரவரி | மாசி |
| 12. ஆடர் or ஆதார் (Adar) | பிப்ரவரி—மார்ச் | பங்குனி |

பரத்தின் திருவிழா (The Feast of Purim)



நம் தேசங்களில் பன்னிரண்டாவது மாதமான பங்குனி மாதத்தில் கோவில்களில் ப்ரம்மோத்ஸவம் நடத்தப்படுவது போல, ஜீவுகளின் கடைசி மாதத்தில் பரத்தின் திருவிழா என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பஞ்சாங்கக் குறிப்பில் வரும் மாதப்பெயர்கள் நம் மாதப்பெயர்களின் கருத்தையே வேறு பெயர்களால் குறிக்கின்றன. அவற்றை விரிவாய் ஆராய்வதை நாம் இன்னொரு சந்தர்ப்பதிற்கு வைத்துக் கொண்டு, அயர், சிவன் முதலிய பெயர்களை மாத்திரம், நாம் இங்கு கவனிப்போம்.

ஆனி மாதம் சூரியனுடைய ருது வாதலால், அதனுடைய அதிதேவதையாகிய சிவனுடைய பெயர் ஆனி மாதத்திற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் இங்கு குறிக்கப்பட்டிருக்கும் சிவன் வேறு, நம் சிவன் வேறு என்று எவரும் சம்சயிக்க இடமே இல்லை.

ஆனால் அவர்களுடைய பஞ்சாங்கத்தில் சிவன் முதலிய தெய்வங்கள் வந்தாலும், அவர்களுடைய தெய்வம் சேனாபதி (Lord of the Hosts,) ஜிஹோவா, ஆமன் முதலிய தெய்வங்களே. சூரியனும் செவ்வாயும் சிவனென்றும், பின்னதே சுப்ரமணிய ரென்று குறிக்கப்படுகிற தென்றும் நாம் வான சாஸ்திரங்களில் தெரிந்து கொண்டோம். ஆமன் என்பதை அறிய ஏதேனும் வகையுண்டா வெனில் அதை நாம் ஜிஹோவா என்னும் தெய்வத்திலிருந்தே கண்டு கொள்ள வேண்டும். கிறிஸ்தவர் வேதத்தில் கடவுள் ஜிஹோவா என்றே முக்கியமாய்க் குறிக்கப்படுகிறார்.

ஜிஹோவா என்பது எதிரிலிருந்து வந்ததென்பதை நாம் ஆராய்ந்தால், அது ஜிஹ்வா (Jhvh) என்ற

சொல்லிலிருந்து உண்டான தென்பதை பாதிரிமார்கள் கொடுத்துள்ள குறிப்புகளால் நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.

ஜிஹ்வா என்ற சொல்லுக்கு சமஸ்கிருதத்தில் நாக்கு என்பது பொருள். அது தமிழில் சிகுவா என்று குறிக்கப் படுகிறது: சிகு, அல்லது, செகு என்றால், வெட்டித் துண்டாக்குவது, 'வா' என்பது 'வாய்' என்ற சொல்லின் சுருக்கம்; அதாவது, நம் வாயில் போடப்படும் வஸ்துக்களை அழித்து உள்ளே புகுத்துவது நாக்காதலால், அது சிகுவா அல்லது ஜிஹ்வா என்று குறிக்கப் படுகிறது. ஆதியில் ஹீப்ரு முதலிய பாஷைகளில், மெய்யெழுத்துக்களையே எழுதுவது வழக்கம்; அவரவர் படிக்கும் போது அநுபவத்தைக்கொண்டு அததற்குத் தக்க உயிரெழுத்துக்களை வைத்துப் படித்துக் கொள்வது வழக்கம். ஆதியில் ஜிஹ்வஹ் (Jhvh) என்று எழுதப்பட்டிருந்ததை பிற்காலத்தவர் ஜிஹோவாஹ் என்று மாற்றினார்களாம்.

ஜிஹ்வா என்பதற்கு நா அல்லது நாக்கு என்பது பொருள். நம் நாக்கிற்கு அதிபதி யார்? புதன். புதன் தான் நமக்கு வித்தையை அளிப்பவர். பிரகத் ஜாதகம் என்னும் வான சாஸ்திரத்தில் கிரகங்களை அடியில் வருமாறு வகுத்திருக்கிறார்கள். இந்த ப்ரபஞ்சத்தை நடத்தும் கால புருஷனுக்கு, சூரியன்—ஜீவன், சந்திரன்—மனது, செவ்வாய்—குணம், புதன்—வார்த்தை, வியாழன்—சுகம், சுக்கிரன்—காமம், சனி—துக்கம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

புதன் எப்போதும் பாலப்பருவமுடையது. அது வியாழ பகவானாகிய தேவேந்திரனுக்கு அடுத்தபடியான



அதிகாரம் வகிப்பதாகையால், அதை வியாழனுடைய புத்திரனாகிய யுவராஜன் என்று குறிப்பது வழக்கம். வியாழனுடையது, கால புருஷனுடைய மூளை ஸ்தானமாதலால், அதற்கு அடுத்தபடியான வாக்கு ஸ்தானத்திற்குரிய புதன் வியாழனுடைய புத்திரனாய்க் கருதப்படுகிறது. வியாழன் வாசஸ்பதி, வாக்பதி என்று குறிக்கப்படுகிறதானாலும், அது பிரதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களும் அழிந்து ஆகாய வெளியில் ஒடுங்கும்போது, மிஞ்சி நிற்கும் பரத்தின் வாக்கிற்கு அதிதேவதை ஸ்தானத்தை வகிப்பதாகையால், வியாழ பகவான் பரப்ரம்மத்தின் வாக்கிற்கிருப்பிடமானவர். புதன் நம்முடைய வாக்கு ஸ்தானத்தில் இருந்து நமக்கு வித்தை புத்தி முதலியவற்றை யளிப்பவர். புதனை அலியாகவோ, ஆணாகவோ, பெண்ணாகவோ குறிக்கலாமென்பதை நாம் ஏற்கனவே தெரிந்து கொண்டோம்.

புதன் விஷ்ணுவின் அம்சம் பொருந்தியது; பச்சை நிறமானது; இதன் அடையாளம் மூன்று கோணம், அல்லது, அறுகோணம். "புசிப்பிற்குப் புந்தியாகும்" என்றும் வானசாஸ்திரம் கூறுகிறது. அதாவது, நம்முடைய போஜனத்திற்குத் தேவையான தானியங்களையெல்லாம் உற்பத்தி செய்வது புதனாகையால் அது தான்யராஜன் என்றும் குறிக்கப்படுகிறது. அதுவன்றி, இதற்கு இன்னொரு ஜீவாதாரமான உத்தியோகமும் உண்டு. அதாவது, பஞ்ச பூதங்களில் காற்றிற்கு அதிதேவதை புதன் என்று பெரும்பாலான வான சாஸ்திரங்கள் கூறுகின்றன. இது பூமிக்கு அதிதேவதை என்று சில நூல்கள் கூறுகின்றனவானாலும் முன்னதே அநுபவத்திற்கு ஒத்ததாயிருக்கிறது. புதன் எப்போதும் சூரியனுக்குப் பக்கத்திலேயே சஞ்சாரம்செய்து கொண்டிருக்கும்; அது சூரியனை விட்டு விலகி சிறிது

தூரத்தில் போய் விடுமானால் உடனே விபரீதமான புயல் காற்று முதலியவை உண்டாவதை நாம் கண்கூடாய்க் காணலாம்.

இதுவன்றி, புதன் வடக்கு திக்கிற்கு அதிபன். அது குபேரனுடைய திக்காதலால், புதனே குபேரன். எப்படியெனில், ஜீவ ஜெந்துக்களுக்கு இன்றியமையாத காற்று, தானியங்கள், புத்தி, வித்தை முதலிய சகலமான நிதிகளுக்கும் புதன் அதிதேவதையாதலால், அவனே வட திசைப் பாலகனான குபேரன். குபேரனை மரகதன் என்ற பெயராலும் குறிப்பதுண்டு. மரகதம் என்பது புதனுடைய ரத்னமென்றும், அது பச்சை நிறமானதென்றும், மரகதவல்லி, பச்சையப்பன், பச்சை வண்ணர் முதலிய பெயர்கள் புதனைக் குறிக்கும் பெயர்கள் என்றும் ஏற்கனவே நாம் தெரிந்து கொண்டோம்.

'ஆமன்' என்னும் தெய்வமும் புதனே என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆமம் என்பதற்கு, பசுமை என்பது முக்கியமான பொருள். பச்சை நிறமாயிருப்பதனால், புதன் ஆமன் என்று குறிக்கப்படுகிறான். அதுவன்றி, 'ஆமை' என்பது நீர்வளம், நிலவளம் நிறைந்த இடத்தைக் குறிக்கும் ஜெந்துவாதலால், தானிய வளப்பம் முதலியவற்றின் அதிபதியான புதன் ஆமன் என்று குறிக்கப்படுகிறான். 'ஆமன்' என்ற பதத்தைப் பிரித்து, அர்த்தம் கண்டுபிடித்தால் அதுவும் பொருத்தமானதாகவே இருக்கும். 'ஆ' என்றால், சகலத்தையும் கொடுக்கும் காமதேநு; 'மன்' என்றால் அதிபன். அதாவது குபேரன் என்பது கருத்து. கச்சபம், கச்சன் என்றால், ஆமை என்று நாம் முன்னரே குறித்திருக்கிறோம். கச்சப நிதி என்று அகராதியில் ஒரு



சொல் இருக்கிறது. அதன் பொருள் குபேர நவநிதியிலொன்று என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் கச்சபம் அல்லது ஆமம் என்பது பச்சை நிறத்தினனான குபேரனைக் குறிக்கிறதென்பது நிதரிசனமாகத் தெரிகிறது.

ஆறுகோணமாயிருக்கும் தளவரிசைக் கல்லை ஆமைக் கல் என்று குறிப்பது வழக்கம். புதனுடைய அடையாளம் மூக்கோணம், அல்லது, அறுகோணம் என்பது முன்னரே கூறப்பட்டிருக்கிறது. இதுவன்றி, இன்னொரு முக்கியமான காரணத்தினாலும் புதனே ஆமன் என்று நாம் நிச்சயிக்கலாம். ஆமன், முத்துவாகிய தன் தாய்க்கே புருஷன் என்று தேபாஸ் பட்டணத்துத் தகவல்களால் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். நாம் ஏற்கனவே கொடுத்துள்ள புதனுடைய பெயர்களில் மதிமகன் என்பதும் ஒன்றல்லவா. அதாவது, புதன் சந்திரனுடைய மகன் என்பது அதன் கருத்து. ஆகையால், முத்து என்னப்படும் சந்திரனுக்கு, அதனுடைய மகனாகிய புதனே கணவனாய் ஆமன் என்று குறிக்கப்படுகிறான் என்பது நன்கு விளங்குகிறது. இதன் கருத்து சுலபத்தில் விளங்கும். சந்திரனாகிய மதி கால புருஷனுடைய மனதைக் குறிக்கிறது. மனதிலிருந்து உண்டாகும் புத்தி அல்லது கலைஞானம் அதே மனதை அடக்கியாளுகிறது என்ற கருத்தோடு, மகன் தாய்க்குப் புருஷனாகிறான் என்று குறித்திருக்கிறார்கள் போலும்.

இதிலிருந்து நாம் முக்கியமாய் ஒரு விஷயத்தை அநுமானித்துக்கொள்ள வேண்டியதாகிறது. ஒரே கிரகத்தை ஒரு சமூகத்தார் பெண்ணாகவும், அதையே இன்னொரு சமூகத்தார் ஆணாகவும் வெவ்வேறு பெயர்களால் குறிப்பதால், இரண்டும் ஒன்றேயென்று சம்பந்தமற்ற

வெவ்வேறு தெய்வங்கள்போலத் தோன்றுகின்றன. உண்மையில் ஒரே தெய்வத்தை வைத்துக்கொண்டு 'உன் தெய்வம் வேறு, என் தெய்வம் வேறு' என்று ஜனங்கள் சிலர் ஒருவரோடொருவர் பகைமை பாராட்டுகிறார்கள் என்பது நிதரிசனமாகத் தெரிகிறது.

அதை நாம் சில உதாரணங்களைக்கொண்டு விளக்குவோம். இந்த புதன் தெய்வம் நாவிற்கு அதிபதியாதலால் இதை ஜிஹோவா (ஜிஹ்வா) என்று கிறிஸ்தவர்களில் பெரும்பாலோர் குறிக்கிறார்கள்.

நாக்கு ஸ்தானத்திற்கு உரியதாகையால் இதை நம்மவர் எப்படிக் குறிக்கிறார்கள் என்றால், நாகம்மாள், நாகலக்ஷ்மி என்ற பெயர்களால் குறிக்கிறார்கள். நாகம்மாள் என்ற பெயரைப் பிரித்தால், நா + அக + அம்மாள் என்று பிரிகிறது. நாவாகிய ஸ்தானத்தில் இருக்கும் தேவதை என்பது இதன் பொருள். நாகலக்ஷ்மி என்பது நாவாகிய ஸ்தானத்தில் இருக்கும் லக்ஷ்மி என்று பொருள் படுகிறது. இதற்கு பாம்பைப் போல் சிலை அடித்து வைத்து, அதை வணங்குகிறார்கள்.

இதே புதன் காற்றிற்கு அதிதேவதை யாதலால், இதை நம்மவர் காத்தாயி, காத்தவராயன் என்று குறிக்கிறார்கள். கிறிஸ்தவர்களுடைய கோவில் எப்போதும் எவ்விடத்திலும் மாதா கோவில் என்றே குறிக்கப்படுகிறதிலிருந்து, அவர்கள் வணங்குவது பெண் தெய்வம் என்பதை நாம் சுலபத்தில் அநுமானிக்கலாம். அவர்களுள் ஒரு சாரார் காத்தாலிக் கிறிஸ்தவர் என்று குறிக்கப் படுகின்றனர். அவர்கள் மேரியின் சிலையைப் பிரதானமாக வைத்து வணங்குகிறவர்கள். காத்தாலிக் கிறிஸ்தவர் என்பதன் அர்த்தத்தை நாம் கவனித்தால், காற்றின் தேவதையான புதனுடைய அளி, அல்லது, கிருபைக்குப் பாத்திரமானவர்கள் என்ற பொருள் ஏற்படுகிறது.



இங்கிலீஷ்காரர்கள் பொதுவாக தெய்வத்தை 'காட்' (God) என்ற சொல்லால் குறிக்கிறார்கள். அவர்கள் 'த' என்ற எழுத்து உபயோகப்படவேண்டிய இடங்களில் 'ட' என்ற எழுத்தை உபயோகிப்பது பிரத்தியக்ஷம்.

தேவசகாயம் என்ற பெயரை டேவசகாயம் என்றே எழுதுகிறார்கள். வார்த்தை என்ற சொல் வார்ட் (Word) என்று மாறிப் போயிருக்கிறது. அதே போல, அவர்களுடைய 'காட்' (God) என்ற சொல் எதிலிருந்து வந்ததென்பதை நாம் ஆராய்ந்தால், 'காத்து' (Goth) என்பதிலிருந்து வந்ததாகத் தெரியவரும். அதாவது, காற்றின் அதிதேவதையையே அவர்கள் 'காட்' என்று குறிக்கிறார்கள். அவர்கள் காற்றை விண்டு (Wind) என்று குறிக்கிறார்கள். விண்டு என்பது விஷ்ணுவின் பெயர். காற்றின் அதிதேவதையான புதன் விஷ்ணுவின் அம்சம் என்பதை நாம் ஏற்கனவே தெரிந்து கொண்டோம். வெள்ளைக்காரர்கள் தங்களுடைய பெயரோடு தங்களுடைய வீட்டின் பெயரையும் சேர்த்து வைத்துக்கொள்வது வழக்கம். சில வெள்ளைக்காரர் 'விண்டில்' (Windle) என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதே புதன் தேவதை வடக்கு ஈகைப்பட்டில் காத்தார் (Hathor) என்று குறிக்கப்பட்டது. அதற்கு அவ்விடத்தில நாகப்பாம்பின் முகம் ஏற்படுத்தப் பட்டிருந்தது.

அவ்விடத்திலும், அது மாகதத்தம்மாள் (The Lady of Turquoise) என்று குறிக்கப்பட்டது. அங்கு காத்தாரும் (Hathor), ஆமனும் ஒன்றாக்கப்பட்டிருக்கின்றன. காத்தாருக்குப் பல முகங்கள் உண்டு. அதில் அநுமார் முகமும் ஒன்று.

நம் மாத்வர்களுடைய சித்தாந்தப்படி, வாயு பகவான் ஜீவோத்தமன் என்று கருதப்பட்டு, முக்கியப் பிராண தேவர் என்று குறிக்கப்படுகிறது. அதுவே அநுமார் என்னப்படுகிறது; அநுமார் வாயு பகவானுக்கும் அஞ்சனாதேவிக்கும் பிறந்ததாகக் கருதப்படுகிறது.

கிறிஸ்தவர்களால் வைத்து வணங்கப்பட்ட கன்னி மேரியின் படமொன்றை இதோடு சேர்த்திருக்கிறோம். அது (13) என்ற லக்கமிடப்பட்டிருக்கிறது. அதின் நெற்றியில் புதனுடைய அடையாளமான முக்கோணம் காணப்படுகிறது. அது ஆண் வடிவமா, பெண் வடிவமா என்பதை நாம் சொல்ல இயலாது. நம்முடைய புரட்டாசி மாதம் 'கன்னி' என்ற பெயராலும் குறிக்கப்படுகிறது. அது புதனுடைய ஆட்சி ஸ்தானமும்; உச்ச ஸ்தானமுமாகும். நாம் மேலே குறித்த பஞ்சாங்கத்தில் அதற்கு 'இளல்' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இளல், இளவல் என்பன இளவரசு, யுவராஜன், இளவரசி என்ற அர்த்தத்தைத் தருகின்றன. புதன் யுவராஜன் என்று நாம் முன்னமே குறிப்பிட்டோம்.

மேரி என்பதை சிலர் 'மாரி' என்று மாற்றி அதை மாரியம்மனாக்குவது வழக்கம். அது தவறு. மேரி என்பது 'மேரு' பருவதத்திலிருந்து உதித்தவள் என்பதைக் காட்டுகிறது. மேரு, இமம் முதலியவற்றிற்கு தங்கம் என்பது பொருள். வியாழ பகவானாகிய இந்திரனுடைய கிரகம் தங்க நிறமுடையதாகையாலும், புதன் இளவரசியாதலாலும், 'மேரி' என்று குறிக்கப்படுகிறது; அதாவது மேரு பர்வதராஜன் அல்லது இமவானுடைய புத்திரி என்கிற கருத்தைத் தருகிறது.



(13) கிறிஸ்தவர்களின் கன்னிமேரி.

## அத்தியாயம்—3.

# என்பு மய கோசம்

(தொடர்ச்சி)

(2) முதுகெலும்பு:—முதுகெலும்பை இங்கிலீஷில் வர்ட்டிபிரே (Vertebrae) என்றும், பாக்போன் (Back bone) என்றும் குறிக்கிறார்கள். அதைக் கண்கூடாய்ப் பார்ப்பதற்கு X, XI என்ற எண்கள் உள்ள இரண்டு படங்களை இதோடு சேர்த்திருக்கிறோம். X-வது படம் முதுகெலும்பின் பின்தோற்றத்தையும், XI-வது படம் அதன் பக்கத் தோற்றத்தையும் காட்டுகின்றன.

இந்த எலும்புதான் நம் முழு உடம்பிற்கும் அடிப்படையாயமைந்துள்ள சுமைதாங்கி. இது நம் சரீரத்தின் பின்பக்கத்தில் நடு முதுகில் அமைந்து, கபாலத்தின் பின்னெலும்பு முதல், ஆசனவாய்க் கூர்வரையில் நீண்டிருக்கிறது. தைரியமில்லாத மனிதனை முதுகெலும்பில்லாதவன் என்று இங்கிலீஷில் குறிப்பதுண்டு. அதாவது, முதுகெலும்பினால்தான் நம் உடம்பிற்கு உறுதியும், கம்பீரமான நிமிர்வும் உண்டாயிருக்கின்றன என்ற கருத்திலிருந்து இங்கிலீஷ்காரர் அப்படிக் குறிக்கிறார்கள்.

இதை முதுகெலும்பு என்று ஒருமையாய்க் குறிப்பதிலிருந்து, இது முற்றிலும் ஒரே எலும்பினால் ஆனது என்று நாம் நினைப்பது தவறு. தலைமயிர்ப்பின்னல் போல,

தோன்றும் இந்த எலும்புத் தொடர் உண்மையில் முப்பத்து மூன்று எலும்புத் துண்டுகளின் சேர்க்கையால் மிக சாமர்த்தியமாய் அமைக்கப்பட்டிருக்கிறது. X, XI-வது படங்களில் அவைகளை நாம் 1 முதல் 33 வரையில் உள்ள எண்களால் குறித்திருக்கிறோம். இளங் குழந்தைகளுடைய முதுகெலும்புத் தொடரில் இம்முப்பத்து மூன்று எலும்புகளும் வெவ்வெறாயிருக்கும்; பெரியவர்களுடைய முதுகெலும்புத் தொடரில் 1 முதல் 24 வரையில் உள்ள எலும்புத் துண்டுகள் எப்போதும் வெவ்வேறாகவே இருக்கும். 25 முதல் 33 வரையில் உள்ள ஒன்பது எலும்புகளும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு ஒரே எலும்பாக மாறிவிடும். அப்படி மாறியபின்னர் அது இரண்டு வடிவமாகத் தெரியும். 25 முதல் 29 வரையில் உள்ள ஐந்தும் ஒரு வடிவாயும், 30 முதல் 33 வரையில் உள்ள நான்கும் ஒரு வடிவாயும் இருக்குமாதலால் இரண்டிற்கும் வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

XI-வது படத்தைப் பார்த்தால், நம் முதுகெலும்புத் தொடர் ஒரே நேராய் அமைக்கப் பட்டிருக்கவில்லை என்பது கண்கூடாய் விளங்கும். இந்தத் தொடரில் நான்கு வளைவுகள் இருக்கின்றன. 1 முதல் 7 வரையில் உள்ள தொடர் நம் கழுத்திற்குப் பின்னால் இருப்பது; அது முன் பக்கமாக வளைந்திருக்கிறது. 8 முதல் 19 வரையில் உள்ள தொடர் நம் மார்பெலும்புகளுக்குப் பின்னால் இருப்பது; அது பின்பக்கமாக வளைந்திருக்கிறது. 20 முதல் 24 வரையில் உள்ள தொடர் நம் இடுப்பிற்குப் பின்னால் இருப்பது. அது முன் பக்கமாக வளைந்திருக்கிறது. 25 முதல் 33 வரையில் உள்ள தொடர் சப்பைக்குள் இருப்பது; அது பின் பக்கமாக வளைந்திருக்கிறது.



இப்படி நம் முதுகெலும்புத் தொடர் இயற்கையிலேயே நான்கு வளைவுகளாய் அமைக்கப் பட்டிருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இப்படியில்லாமல், நம் முதுகெலும்புத் தொடர் ஒரே நேராய் இருக்குமானால், இப்போது நம் உடம்பிற்கு ஏற்பட்டிருக்கும் அழகான தோற்றம் இராது. அதுவுமன்றி, நம் இடுப்பிற்கு மேற்பட்ட பகுதி வளையவும், குனியவும், நிமிரவும், அப்புறம் இப்புறம் திரும்பவும் கூடாததாகிவிடும். நம் தலையின்மேல் பளுவான ஒரு சுமையை நாம் வைத்தால், நம் முதுகெலும்பு நேரானதாயிருக்கும் படத்தில், அந்தச் சுமை அடிப்பாகம் வரையில் மிகக் கடுமையாக உறைக்கும். எலும்புத்தொடர் வில்போல் வளைந்திருந்தால், பளுவின் உரம், முதல் வளைவிற்குக் கீழ் அதிகமாய் அழுந்தாது. தலையின் மேல்பாகத்தில் அடி முதலியவற்றால் அதிர்ச்சிகள் ஏற்பட்டால், எலும்புத் தொடர் நேராய் இருந்தால் அந்த அதிர்ச்சி கடைசிவரையில் உடனே பரவிவிடும்; வளைவாயிருந்தால், அதிர்ச்சி வளைந்து வளைந்து வருவதற்குள் ஓய்ந்து போகும். நாம் திடீரென்று குதிப்பதால் முதுகெலும்புத் தொடரின் அடிப்பாகத்தில் ஏற்படும் அதிர்ச்சி கபாலத்தில் உள்ள மூளையில் உடனே உறைக்காமல் இவ்வளைவுகள் அடியிலேயே தடுத்துவிடுகின்றன. 1 முதல் 7 வரையில் உள்ள தொடரை ஸர்விகல் (Cervical) என்றும், 8 முதல் 19 வரையில் உள்ள தொடரை தார்ஸல் (Dorsal) அல்லது தாரகிக் (Thoracic) என்றும், 20 முதல் 24 வரையில் உள்ள தொடரை லம்பர் (Lumbar) என்றும், 25 முதல் 29 வரையில் உள்ள தொடரை ஸேக்ரம் (Sacrum) என்றும், 30 முதல் 33 வரையில் உள்ள தொடரை கோக்ஸிக்ஸ் (Coccyx) என்றும் இங்கிலீஷில் குறிக்கிறார்கள்.

குழந்தை பிறந்தவுடன் நமக்கு அதன் தார்ஸல் எலும்புத்தொடர் மாத்திரம் தெரியும். கொஞ்சகாலத்தில், அது தன் கழுத்தை நிமிர்த்த முயலும்போது தான், ஸர்விகல் என்னப்படும் அதன் கழுத்தெலும்புத்தொடர் வளையவாரம்பிக்கும். குழந்தை எழுந்து நடக்க ஆரம்பிக்கையில் அதன் இடுப்பெலும்புத் தொடரில் வளைவு உண்டாகும்.

முதுகெலும்புத் தொடரில் உள்ள 1 வது, 2 வது எலும்புத் துண்டுகளும், 25 முதல் 33 வரையில் உள்ள துண்டும் ஆகிய மூன்று துண்டுகளும் தவிர, மற்ற இருபத்திரண்டு துண்டுகளும் அநேகமாய் ஒரேவிதமான அமைப்பாயிருக்கும். இவைகளுடைய வடிவத்தைக் காட்டுவதற்கு XII என்ற எண்ணுள்ள படமொன்றை இதோடு சேர்த்திருக்கிறோம். அந்தத் துண்டின் அடியில் வட்டமான அடிக்கட்டை ஒன்று காணப்படுகிறது. அதை 5 என்ற எண்ணால் குறித்திருக்கிறோம். ஷை அடிக் கட்டைக்கு மேற்பக்கத்தில் ஒரு துவாரமும், நீண்ட கூர்கள் மூன்றும், சிறிய கூர்கள் இரண்டும் காணப்படுகின்றன. துவாரம் 4 என்ற எண்ணாலும், நீண்ட கூர்கள் 1, 2, 3 என்ற எண்களாலும் குறிக்கப் பட்டிருக்கின்றன.

வட்டமாயிருக்கும் அடிக்கட்டையின் குறுக்களவு சுமார் ஒன்றரை அங்குலமும், அதன் கனம் சுமார் ஓர் அங்குலமும் இருக்கும். நாம் நம் முதுகெலும்பைத் தொட்டுப் பார்த்தால், 1-வது லக்கமிடப்பட்ட பின் பக்கத்துக் கூர்களைக் கையால் உணரலாம். இவ்வாறு எலும்புக் கூர்கள் முளைகள் போல் அமைக்கப் பட்டிருப்பதால், முதுகெலும்புத் துண்டுகள் கெட்டியான தசை நார்களால் ஷை கூர்களின் மூலம் ஒன்றோடொன்று சேர்த்துப் பிணைக்கப் பட்டிருக்கின்றன. 5-வது லக்கமிடப் பட்ட அடிக்கட்டை முதுகெலும்பிற்கு உறுதியைத் தருகிறது; நம் மூளையிலிருந்து கீழிறங்கி உடம்பு முழுதும் பரவியிருக்கும் ஸ்பரிச நாடிகள் முதுகெலும்பிற் குள்ளிருக்கும் நீண்ட துவாரத்தின் வழியாகவே வருகிறது. நாம் மேலே குறித்த எலும்புத் துண்டில் 4.வது லக்கமிடப்பட்ட பாகம் துவாரமென்றோமல்லவா? அவ்வாறு எல்லாத் துண்டுகளிலும் துவாரம் ஏற்பட்டிருக்கிறதாகையால், முதுகெலும்புத் தொடருக்குள் ஒரு நீண்ட வாய்க்கால்போல வழி ஏற்பட்டிருக்கிறது. அதற்குள்ளாகவே, ஸ்பரிச நாடிகள் வைக்கப் பட்டு, மூளையோடு சம்பந்தப் பட்டிருக்கின்றன. மூளையும், ஷை நாடிகளும் மிகவும் நுட்பமான பாகங்களாதலால், அவை அவ்வளவு ஜாக்கிரதையாக எலும்புத் தொடருக்குள் வைத்து மறைக்கப்பட்டிருக்கின்றன.



முதுகெலும்புத் தொடரில் உள்ள எலும்புத் துண்டுகளில் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் நடுவில் நார்போல கெட்டியாயிருக்கும் வட்ட வடிவமான குருத்தெலும்புத் துண்டு பொருத்தப் பட்டிருக்கிறது. எலும்புத் துண்டுகள் ஒன்றோடொன்று உராய்ந்து முட்டிக் கொள்ளாமல் சுலபமாய் வளைந்து கொடுக்கும் பொருட்டு இப்படி இடையிடையே குருத்தெலும்பு வில்லைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஷை வில்லையின் கனம் சுமார் கால் அங்குலமிருக்கும். ஒவ்வொரு குருத்தெலும்பு வில்லையும் அதன் இரண்டு பக்கங்களிலும் உள்ள எலும்புத் துண்டுகளோடு இயற்கையிலேயே கெட்டியாய் ஒட்டிக் கொண்டிருக்கிறது. இக்குருத்தெலும்பு வில்லைகள் எலும்புத் துண்டுகளை ஒன்றோடொன்று சேர்ப்பதற்கு உபயோகப் படுவதோடு, இரண்டிற்கும் இடையில் மெத்தை போடப் பட்டதுபோல மிருதுத்

தன்மையை உண்டாக்கும் சாதனமா யமைந்திருக்கின்றன. அடியின் அதிர்ச்சி நெடுகிலும் பரவாமல் தடுப்பதற்கும் இவை உபயோகப்படுகின்றன. ஒவ்வோர் எலும்புத் துண்டிலும் துவாரம் உள்ள பாகத்தில் (அதாவது, 4-வது லக்கமிட்ட பாகத்தில்) இருக்கும் வளைவு மேலும் கீழும் உள்ள துண்டுகளின் வளைவுகளோடு சேர்ந்திருக்கின்றன. அவைகள் நரம்புகளால் ஒன்றோடொன்று கட்டப்பட்டிருக்கின்றன. இதே போல, எலும்புத் தொடரின் முன்பக்கத்திலும், பின் பக்கத்திலும் துண்டுக்குத் துண்டு நரம்புக் கட்டுகள் இருக்கின்றன. ஆகவே, முதுகெலும்புத் தொடரின் துண்டுகள் நரம்புகளால் நான்கு இடங்களில் தொடர்ச்சியாய்ப் பின்னப்பட்டிருக்கின்றன; எனவே, எலும்புத் தொடர் கெட்டியாய்ப் பிணைக்கப் பட்டிருப்பதோடு, சிறிதளவு துவண்டு கொடுக்கக் கூடியதாயும் அமைந்திருக்கிறது.

முதுகெலும்புத் தொடரின்மேல் உச்சியில் உள்ள 1-வது லக்கமிடப்பட்ட துண்டு அட்லாஸ் (The Atlas) என்றும், இரண்டாவது துண்டு ஆக்ஸிஸ் (The Axis என்றும் பிரத்தியேகமான பெயர்களால் குறிக்கப்படுகின்றன. மற்ற துண்டுகளைப்போ லில்லாமல், இவை இரண்டும் தோற்றத்தில் வேறு மாதிரி இருப்பதனால், இவற்றை XIII, XIV என்ற எண்ணுள்ள இரண்டு படங்களால் காட்டுகிறோம்.

அட்லாஸ் என்று குறிக்கப்படும் உச்சி யெலும்பின் மேலேதான் கபாலம் பொருத்தப் பட்டிருக்கிறது. அட்லாஸ் என்ற சொல் புதன் என்ற கிரகத்தைக் குறிப்பது. புதன் வியாழனுடைய புத்திரனென்றும், புதனுக்கு மேலேயே வைகுண்டமிருக்கிறதென்றும், வியாழன் மூளை ஸ்தானத்திலிருப்பவரென்றும், புதன்



வாக்கு ஸ்தானத்தி லிருப்பவரென்றும் நம் வானசாஸ்திரங்கள் கூறுகின்றன. மேல் நாட்டாரும் அதே போல, அட்லாஸ் என்பது வியாழனுடைய பிள்ளையென்றும், அதன் மேல் வைகுண்டம் இருப்பதாகவும் ஆதிகாலத்தில் கருதினார்கள், அதனால், மூளைக்கு அடுத்தாற்போல் உள்ள இந்த முதல் எலும்பை அட்லாஸ் என்ற பெயரால் குறித்திருக்கிறார்கள் என்று இங்கிலீஷ் நூல்கள் கூறுகின்றன.

இந்த அட்லாஸ் ஒரு மோதிரம் அல்லது ஒட்டியாண முகப்புப் போன்ற தோற்ற முடையதாயிருக்கிறது. மற்ற துண்டுகளுக்கு அடிக்கட்டை இருப்பதுபோல இந்த அட்லாஸிற்கு அடிக்கட்டை இல்லை. அதாவது XIIவது படத்தில் 5 என்ற லக்கத்தால் குறிக்கப் பட்டுள்ள வட்டமான அடிப்பாகம் இந்த அட்லாஸில் இல்லை.

இந்த அட்லாஸுக்குக் கீழே இருக்கும் ஆக்ஸிஸ் என்ற துண்டில் நீண்ட முளை ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. அது XIV என்ற படத்தில் 1 லக்கமிட்ட பகுதி. அந்த முளை அதற்குமேல் உள்ள அட்லாஸின் துவாரத்தில் சொருகப் பட்டிருக்கும்; அதாவது, XIII வது படத்தில் 2 லக்கமிடப்பட்ட துவாரத்தின் மேல்பாகத்தில் சொருகப் பட்டிருக்கிறது. இந்த முளை மேற்படி துவாரத்தைப் பூர்த்தியாய் அடைத்துக் கொள்ளுகிறதில்லை; அப்படி அடைத்துக் கொண்டால், மூளைக்குள்ளிருந்து கீழே இறங்கும் ஸ்பரிச நாடிகள் போவதற்கு இடமில்லாமல் போகும். ஆகையால், இந்த முளை, மேற்படி துவாரத்தின் ஒரு பக்கத்தையே அடைத்துக் கொண்டு நிற்கிறது. ஆக்ஸிஸ் என்ற இந்த இரண்டாவது எலும்பை அட்லாஸ் என்னும் முதல் எலும்போடு சேர்த்துப் பிணைக்கும் இந்த

முளையை இங்கிலீஷில் ஓடன்டாய்டு (Odontoid) முளை என்று குறிக்கிறார்கள்.

அட்லாஸில் (அதாவது XIII-வது படத்தில்) 1 என்று லக்கமிட்ட இரண்டிடங்களின்மேல் கபாலம் பொருத்தப்பட்டிருக்கிறது. நாம் நம்முடைய தலையை முன்னும் பின்னுமாய் அசைக்கும்போது, கபாலம் இந்த அட்லாஸில் 1 லக்கமிட்ட இடங்களின் உதவியினால், அவ்விதம் முன்னும் பின்னுமாய் இயங்குகிறது.

ஆனால் நாம் நம்முடைய சிரத்தை வலப்புறம் இடப்புறமாகத் திருப்பும் போது, கபாலம் அட்லாஸ் ஆகிய இரண்டும் சேர்ந்து, ஆக்ஸிஸ் என்னும் இரண்டாவது எலும்பின் முளையைச் சுற்றித் திரும்புகின்றன; அதாவது, ஓடன்டாய்டு முளையைச் சுற்றி இயங்குகின்றன. இந்த முளை மா அரைக்கும் இயந்திரக் கல்லின் அடி முளை போல் அமைந்திருக்கிறது. அந்த முளையோடு கூடிய ஆக்ஸிஸ் முதுகெலும்புத் தொடரின் மற்ற பாகத்தோடு கெட்டியாய்ப் பிணைக்கப்பட்டிருக்கிறது. நம் தலை அப்புறம் இப்புறம் திரும்பும்போது, இயந்திரத்தின் மேல் மூடி அடி முளையைச் சுற்றித் திரும்புவதுபோல், கபாலமும், அட்லாஸும், ஓடன்டாய்டு முளையைச் சுற்றி இயங்குகிறது; ஆனால், அவை வலது இடது புறங்களில் தோள் பட்டை வரையில்தான் திரும்புமேயன்றி, பின்புறம் திரும்ப முடிகிறதில்லை.

நம் எலும்புத் தொடரில் நாம் இனி கவனிக்க வேண்டியது அதன் அடிப்பாகத்தையே. அதாவது 25 முதல் 33 வரையில் லக்கமிடப்பட்ட பாகத்தையே. இந்த பாகம் நம் இரண்டு சப்பை எலும்புகளின் இடையில் பொருத்தப்



பட்டிருக்கும் பகுதி. இதை நாம் XV என்ற லக்கமிடப்பட்ட படத்தினால் காட்டுவோம். இதில் 2லக்கமிடப்பட்ட இரண்டு பக்கங்களும் நம்முடைய சப்பை எலும்புகள். அவைகளுக்கு இடையில் ஆப்பு வைக்கப்பட்டது போலத் தோன்றும் பாகமே நம் முதுகெலும்புத் தொடரின் அடிப்பாகம். அந்த அடிப்பாகத்தை நாம் ஸேக்ரம் என்றும், கோக்ஸிக்ஸ் என்றும் ஏற்கனவே குறிப்பிட்டோம். ஸேக்ரம் என்பது 1 என்ற லக்கமிடப்பட்ட அகலமான பாகம். கோக்ஸிக்ஸ் என்பது 5 என்ற லக்கமிடப்பட்ட கூரான பாகம். இந்தக் கூரிலிருந்துதான் சில ஜெந்துக்களுக்கு வால் முளைத்திருக்கிறது.

நாம் நமது இடுப்பை அப்புறம் இப்புறம் திருப்பும் போது, முதுகெலும்புத் தொடர், ஸேக்ரம் எனப்படும் இந்த எலும்பின்மேல் பாகத்தில் உராய்ந்தே இயங்குகிறது.

(3) மார்பெலும்பு:—இந்த பாகத்தை நாம் XVI என்று லக்கமிட்ட படத்தினால் காட்டுவோம். இது கோழி முதலியவற்றை அடைத்துக் கவிழ்த்து வைக்கும் பஞ்சரம் போன்ற தோற்றமுடையதாயிருக்கிறது. இதை இங்கிலீஷில் தாரக்ஸ் (Thorax) என்று குறிக்கிறார்கள். இது பின்புறத்திலுள்ள நம் முதுகெலும்புத் தொடரோடு சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கிறது. முதுகெலும்புத் தொடரில் 8 முதல் 19 வரையில் உள்ள பாகத்தை நாம் தார்ஸல் அல்லது தாரகிக் தொடர் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். அந்தப் பகுதிக்கு அந்தப் பெயர் கொடுக்கப்பட்டதின் காரணம் இப்போது விளங்கும். தாரக்ஸ் என்று குறிக்கப்படும் மார் பெலும்புக் கூண்டு, முதுகெலும்புத் தொடரில் தார்ஸல் என்று குறிக்கப்படும் பகுதியின்மேல் நிற்கவைக்கப்பட்டிருக்கிறதாகையால், அதற்கு அந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, தாரக்ஸ் என்று குறிக்கப்படும் மார்புக்கூண்டு முதுகெலும்புத் தொடரில் 8 முதல் 19 வரையில் உள்ளவையான 12 எலும்புகளின் இரண்டு பக்கங்களிலிருந்தும்

முளைத்து, வட்டமாய் வளைந்து முன்னால் வந்து, கூண்டு போன்ற வடிவத்தை உண்டாக்குகிறது.

இவ்வாறு முதுகெலும்புத் தொடரின் தார்ஸல் எலும்புகளின் இரண்டு பக்கங்களிலிருந்தும் முளைத்து வட்டமாய் முன்னால் வரும் இருபத்து நான்கு எலும்புகளில் ஒவ்வொன்றும் இங்கிலீஷில் ரிப் (Rib) என்று குறிக்கப்படுகிறது.

நமது மார்பின் முன்புறத்தில், நெஞ்சுக் குழிமுதல் வயிறு வரையில் சப்பையான நீண்ட ஓர் எலும்பு அமைந்திருக்கிறது. அதை இங்கிலீஷில் ஸ்டார்னம் (Sternum) அல்லது பிரஸ்ட் பிளேட் (Breastplate) என்று குறிக்கிறார்கள். அது சுமார் அரை அடி நீளம் இருக்கிறது. அதன் மேல்பாகம் சுமார் $2\frac{1}{2}$ அங்குல அகலம் இருக்கிறது. அதன் அடிப்பாகம் ஒரு கரண்டிக் காம்பு போல் குறுகலாயிருக்கிறது. மார்புக்கூண்டின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள பன்னிரண்டு (ரிப்) எலும்புகளில், பத்து எலும்புகள் முன்பக்கத்தில் உள்ள ஸ்டார்னம் என்னும் முன்னெலும்பில் வந்து சேர்ந்திருக்கின்றன. மற்ற இரண்டிரண்டு எலும்புகளும் முன் பக்கத்தில் வந்து சேராமல், கூராக அப்படியே தனியாய் நிற்கின்றன. இப்படி அலாக்காக நிற்கும் குட்டையான இரண்டு ஜதை எலும்புகளும் மிதக்கும் ரிப் எலும்புகள் (Floating ribs) என்று குறிக்கப்படுகின்றன.

மற்ற பத்து ஜதை 'ரிப்' எலும்புகளில், மேல் பக்கத்து ஆறு ஜதை 'ரிப்' எலும்புகள் தனித்தனியாகவே வந்து முன்புறப் பட்டை எலும்பாகிய ஸ்டார்னத்தோடு சேருகின்றன. ஆனால், 7, 8, 9, 10, ஆகிய நான்கு ஜதை 'ரிப்' எலும்புகள் முன் பக்கத்தில் ஒன்றாகச் சேர்ந்து, ஒரே எலும்பாய் ஸ்டார்னத்தில் வந்து சேருகின்றன. அதாவது, பின்புறத்திலிருந்து பத்து ஜதைகளாக முளைத்து வரும் 'ரிப்' எலும்புகள் ஏழு ஜதைகளாக மாறி, முன் பக்கப் பட்டை எலும்பான ஸ்டார்னத்தில் வந்து கூடுகின்றன.



பின்பக்கத்தில் உற்பத்தியாய் முன்னால் வளைந்துவரும் 'ரிப்' எலும்புகள் முன் பக்கத்தில் சிறிது கீழ்நோக்கி தனியாக வந்து முன்னெலும்போடு கூடுகின்றன. அதுவன்றி, அடிப்பாகத்திலுள்ள 'ரிப்' எலும்புகள் மேல் பாகத்திலுள்ளவைகளை விட அதிக நீளமானவைகளாயிருப்பதனால், மார்புக்கூண்டின் அடிப்பாகம் அதிக உப்புசமானதாயிருக்கிறது. அந்தப் பகுதியில் இருதயம், சுவாசத் துருத்திகள் முதலிய பல உறுப்புக்கள் சௌகரியமாய் இருப்பதற்காக, அது உப்புசமாயமைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, நம் ஸ்திரீகள் முதலியோர் ஆடைகளை அணியும் போது, மார்புக்கூண்டின் அடிப்பாகத்தை இறுக்கிக் கட்டி வைப்பதனால், கீழ்ப்பாகத்து 'ரிப்' எலும்புகள் சாசுவதமாய் நெருங்கி மேலே குறித்த முக்கியமான உறுப்புக்களை அழுத்துவதால், பலவிதமான நோய்களும் அபாயங்களும் ஏற்படு மென்பதை நாம் கவனத்தில் வைக்கவேண்டும். அவ்வாறு ஆடைகளை இறுக்கிக் கட்டுவதால், ரிப் எலும்புகள் ஈரல் குலையில் அழுந்தி, அது இரண்டு பகுதிபோல் தோன்றும்படி அதை நசுக்கி விடுகின்றன. அதனால், நமது ஜீரணம் பெரிதும் பாதிக்கப்படுவதால், குன்மம் முதலிய வயிற்றுக் கோளாறுகள் நேருகின்றன.

ஸ்டார்னம் என்னப்படும், மார்பின் முன்னெலும்போடு வந்து சேரும் பத்து ஜதை 'ரிப்' எலும்புகளில் இன்னொரு முக்கியமான விசேஷம் இருக்கிறது. அதை நாம் கவனத்தில் வைக்கவேண்டும். அதாவது, 'ரிப்' எலும்புகள் ஸ்டார்னத்தோடு சேரும் பகுதியில் கொஞ்சதூரம் வரையில் அவைகள் முற்றிலும் குருத்தெலும்புகளால் ஆயிருக்கின்றன. அதாவது, ஸ்டார்னத்திலிருந்து சிறிது தூரம் வரையில் இரண்டு பக்கங்களிலும் 'ரிப்' எலும்புகள் அழுத்தமான எலும்புகள் அல்ல; அவை குழந்தைகளின் எலும்புகள்போல் பொய்யெலும்பாயமைந்திருக்கின்றன. அந்த பாகங்கள் படத்தில் கருப்பாகக் காட்டப்பட்டிருக்கின்றன. அங்கு குருத்தெலும்புகள் வைக்கப்பட்டிருப்பதற்கு முக்கியமான ஒரு காரணமிருக்

கிறது. நம்முடைய மார்பு மூச்சுக்காற்றினால் நன்றாக விரிந்து சுருங்குவதற்கு அநுகூலமாயிருக்கும் பொருட்டே, அவ்விடங்களில் குருத்தெலும்புகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. அங்கு அவை வைக்கப்பட்டிராவிடில், மார்பு விரியாமலும், சுருங்காமல், எப்போதும், ஒரே விதமாய்க் கட்டைபோல் இறுகலாயிருக்கும். சுவாசத் துருத்திகளின் வேலை மிக நுட்பமாகவே உள்ளுக்குள் நடைபெறும்.

நாம் இன்னம் மற்ற எலும்புகளை ஆராயுமுன், பொதுவாக, எலும்புகள் ஒன்றோடொன்று எத்தனை விதங்களில் எப்படிப் பொருத்தப்பட்டிருக்கின்றன என்பதை கவனித்துத் தெரிந்துகொள்வ தவசியமாகிறது. நம் உடம்பில் எலும்புகள் ஒன்றோடொன்று சேருவதை நாம் எலும்புப்பூட்டு, அல்லது, எலும்புக்கணு என்று குறிக்கிறோம். நம் உடம்பின் எந்தெந்த பாகம் எவ்வெவ்விதமாக வேலை செய்ய வேண்டுமோ அதற்குத் தக்கபடி எலும்புகளின் வடிவம் அமைந்திருக்கிறது; அதுபோலவே எலும்புகளின் சேர்க்கையும் மிக ஆச்சரியகரமாய் அமைந்திருக்கிறது.

எலும்புகள் ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டிருப்பதை நாம் பொதுவாய் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கலாம். I. அசையாத பூட்டு. II. அசையும் கணு என்று நாம் அவற்றைக் குறிப்பிடலாம்.

நாம் ஏற்கனவே கபாலத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த காலத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிந்து கொண்டோம். அதாவது, கபாலத்தின் எலும்புகள் பெட்டிப் பலகைகள்போல் குழிவாயும், ஏந்தலாயும் இருக்கின்றனவென்றும், ஒன்றின் கூர்கள், இன்னொன்றின் இடைவெளியில் புகுத்தப்பட்டு அசையாமல் கெட்டியாய்ப் பிணைக்கப்பட்டிருக்கின்றனவென்றும் நாம் தெரிந்துகொண்டோம்.

அவ்வாறு சேர்க்கப்பட்டிருக்கும் பலகைகள்போன்ற எலும்புகளை நாம் அசைப்பதோ, பிரிப்பதோ சிறிதும்



கூடாத காரியங்கள். இதை அசையாத பூட்டிற்கு, அல்லது, சேர்க்கைக்கு உதாரணமாக நாம் கூறலாம்.

II. இனி நாம் அசையும் கணுக்களை ஆராய்ந்து பார்த்தால், அவை பலவகையா யமைந்திருக்கின்றன வென்பது தெரியும். ஒவ்வொன்றும் எவ்விதமாய் அசைகிறதோ, அதைக்கொண்டு, அவைகளைப் பாகுபாடு செய்திருக்கிறார்கள். அவைகளை நாம் இரண்டு பகுதிகளாய்ப் பிரிக்கலாம். (1) சிறிதளவு விலகிக் கொடுத்து இழுத்துக் கொள்வது. (2) ஒன்றன்மேலொன்று உராய்ந்தபடி திரும்புவது. இந்த இரண்டாவது வகுப்பை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். (i) கீல்போல் அசைவது, (ii) உருண்டையும், குழிவுமாயிருப்பது, (iii) முளையின் மேல் சுழல்வது என்று பிரிக்கலாம்.

(1) சிறிதளவு விலகிக் கொடுத்து இழுத்துக் கொள்ளும் கணுக்களுக்கு நாம் முதுகெலும்புத் தொடரை உதாரணமாகச் சொல்லலாம். ஓர் எலும்புத் துண்டிற்கும் இன்னொன்றிற்கும் நடுவில் குருத்தெலும்பு வில்லை மெத்தைபோல் பொருத்தப் பட்டிருப்பதனால், முதுகெலும்புத் தொடர் எந்தப் பக்கத்தில் வேண்டுமானாலும் சிறிதளவு வளையக் கூடியதாயமைந்திருக்கிறதென்பதை நாம் ஏற்கனவே தெரிந்து கொண்டோம். ஆனால், இவ்வித வளைவில், ஓர் எலும்பு அதற்குப் பக்கத்திலிருப்பதன்மேல் அதிகமாய் உராய வேண்டிய அவசியமே ஏற்படுகிறதில்லை.

(2) ஒன்றன்மேலொன்று உராய்ந்தபடி திரும்புவதை நாம் பல உதாரணங்களைக் கொண்டு விளக்கலாம்.

(i) நாம் முகத்தெலும்பை ஆராய்ச்சி செய்த காலத்தில், வாயின் கீழ் எலும்பு, காதிற்குப் பின்னால் கபால எலும்பில் கீல்போல் பிணைக்கப் பட்டிருப்பதாகக் கூறினோம். அதுவன்றி, நாம் நம்முடைய முன் கையை மடக்கினால், அது ஒரே திசையில் மடங்குகிறது; நீட்டினால் அதே திசையில் நீண்டுகொள்கிறது. வேறு விதமாகப் அதை நாம் திருப்புதல் கூடாது. நம் முழங்கைக் கணு கீல் போல் அமைந்

திருக்கிறது. முன்கையில் இரண்டெலும்புகள் இருக்கின்றன. மேல் கையில் ஓர் எலும்பே இருக்கிறது. முன்கை எலும்புகளின் நடுவில் மேல் கை எலும்பு சிறிதளவு சொருகிவிடப்பட்டிருக்கிறது. ஆகையால், முன்கை கீல் போல் மடங்கி நீளுகிறது.

இதே போல, நம் மணிக்கட்டு பாகமும் ஒரே திக்கில் மடங்கி நீளுகிறது. நம் கையின் விரல்களும் உள் பக்கத்தில் மடங்கி நீளுகின்றன. அந்த திசையை விட்டு வேறு விதமாக இவைகளைத் திருப்புவது சாத்தியமானதல்ல. இதே போல, நாம் நம்முடைய முழங்காலை மடக்கினால் அது பின் பக்கமாக மடங்கி அதே வழியாய் நீளுகிறது.

இவைகளை யெல்லாம் நாம் (i) கீல் கணுக்களுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

நம்முடைய மேல்கை தோள்பட்டையோடு சேர்க்கப்பட்டிருப்பது வேறு மாதிரியானது; நம் மேல் கையின் எலும்பின் முடிவு பாகம் பந்து போல் உருண்டையாயிருக்கிறது. தோள் பட்டையின் எலும்பிற்குள் குழிவான பள்ளம் அமைந்திருக்கிறது. கை எலும்பின் உருண்டைப் பாகம் தோள் எலும்பின் குழிவுக்குள் புகுத்தப்பட்டிருப்பதால், நாம் நம்முடைய கையை எப்படி வேண்டுமானாலும் சுழற்றலாம். நமது மேல் கையை நாம் எந்தத் திசையிலும் சுலபமாய்த் திருப்பலாம். இதே மாதிரி நம் இடுப்பின் சப்பை எலும்போடு தொடை எலும்பு பிணைக்கப்பட்டிருப்பதால், நம் காலை நாம் எப்படி வேண்டுமானாலும் சுழற்றலாம். இப்படி இருக்கும் சேர்க்கைகளை நாம் (ii) உருண்டையும் குழிவுமான கணுக்களுக்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இன்னொரு விதமான கணுவை நாம் ஏற்கனவே தெரிந்து கொண்டிருக்கிறோம். அதாவது முதுகெலும்புத் தொடரில் இரண்டாவது எலும்பாகிய ஆக்ஸிஸ் என்பதில்



ஓடன்டாய்டு முளையின்மேல், கபாலமும், அட்லாஸூம் சுழல்வதாய் நாம் மேலே தெரிந்துகொண்டோம். அதை நாம் (iii) முளையில் சுழலும் கணுவுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.


இவ்வாறு எலும்பின் முனைகள் சேர்ந்து கணுவாகுமிடங்களில் செய்யப்பட்டிருக்கும் இயற்கை வேலைப்பாடுகள் மிக யூகமானவையா யமைந்திருக்கின்றன. மனிதருடைய புத்திசாலித்தனத்தினாலும், திறமையினாலும் அமைக்கப்படும் கட்டுகள் ஷை இயற்கைக் கட்டுகளுக்கு முன் கேவலம் பயனற்றவை என்று கருதக்கூடிய விதத்தில் எலும்புகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதை விளக்குவதற்கு நாம் இவ்விடத்தில் XVII, XVIII என்ற எண்களுள்ள இரண்டு படங்களை வெளியிடுவோம். ஒவ்வொரு படத்திலும் எலும்புகள் இயற்கையில் கணுக்களாய்ச் சேர்க்கப்பட்டிருக்கும் விதம் கண் கூடாகத் தெரியும்.

நார்கள் போலிருக்கும் நரம்புகள் குறுக்கும் நெடுக்குமாகப் போய்ப் போய் எலும்புகளின் முனைகளை ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கின்றன. இரண்டு எலும்புகளின் முனைகள் ஒன்றாய் உராயுமிடத்திற்கு மேல் பாகத்தில் சற்று தூரத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் நரம்பு இரண்டு முனைகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பூர்த்தியாக மறைத்துக் கொண்டிருக்கிறது. இது இரண்டு முனைகளும் ஒன்றாய்ச் சேருமிடத்தைப் திரை போட்டது போல் மூடிக்கொண்டிருக்கிறது. இதை இங்கிலீஷில் கியாப்சூல் (Capsule) என்று குறிப்பார்கள். பைபோலிருக்கும் இந்த மூட்டத்திற்குள் இரண்டு எலும்புகளின் முனைகளும் ஒன்றோடொன்று உராயும்போது, லொட லொடவென்ற ஓசையுண்டாகாதபடி, இரண்டு முனைகளுக்கும் மெல்லிய குருத்தெலும்புகள் மெத்தைகள்போல் பொருத்தப்பட்டிருக்கின்றன. அவற்றின்மேல் மெல்லிய ஜவ்வுபோன்ற இளந்தோல் போர்த்தப் பெற்றிருக்கிறது. அந்த


ஜவ்விலிருந்து எப்போதும் ஒருவிதமான எண்ணெய் கசிந்து கொண்டே இருக்கிறது. அந்த இயற்கை எண்ணெய்ப் பசை ஷை கணுவிற்கு எப்போதும் மழமழப்பையும் பிசுக்கையும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால், நம் கணுக்கள் துருப்பிடிக்காமல், கூச்சலிடாமல், எப்போதும் வழு வழுப்பாய் இயங்கியபடி யிருக்கின்றன. ஷை ஜவ்விலிருந்து சரியான அளவிற்கு எண்ணெய் ஊறாவிடில், கணுக்களில் பிடிப்பு, வீக்கம், நோவு முதலியவை உண்டாகி விடும்.

ஷை ஜவ்வுகளுக்குத் தேவையான எண்ணெய்ப் பசை எங்கிருந்து வருகிறது என்ற சம்சயம் எவருக்கும் உண்டாகலாம். உடம்பு முழுதிலும் சர்வ வியாபியாய் மயிர் போன்ற குழாய்களின் மூலம் நிறைந்து கிடக்கும் இரத்தத்திலிருந்து அந்த எண்ணெய்ப்பசை ஒவ்வொரு ஜவ்விற்கும் ஏற்படுகிறது. ஆகையால் நம்முடைய இரத்தம் சரியான நிலைமையில் இல்லாவிட்டால், நம் கை கால்கள் முதலியவற்றிலுள்ள எந்தக் கணுவையும் மடக்குவதோ நீட்டுவதோ கூடாத காரியமாகிவிடும். சில சமயங்களில் கணுக்களில் சிரங்குகள், கட்டிகள் முதலியவை தோன்றுவதும் உண்டு.


எனவே, ஒன்றோடொன்று உராய்ந்து திரும்பும் கணுக்களில் மூன்று அம்சங்கள் முக்கியமானவை. (1) எலும்புகளின் இசைவுகளில் வழு வழுப்பான குருத்தெலும்புகள் இருக்க வேண்டும். (2) அவைகளை மூடிக்கொண்டிருக்கும் ஜவ்விலிருந்து முட்டையின் வெள்ளைக் கருபோன்ற எண்ணெய் எப்போதும் ஊறிக்கொண்டே இருக்கவேண்டும். (3) இரண்டு முனைகளையும் மறைத்துக் கட்டுகள் போடப்பட்டிருக்க வேண்டும்.





X. முதுகெலும்பின் பின்தோற்றம்.




XI. முதுகெலும்பின் பக்கத்தோற்றம்.





XII. முதுகெலும்பில்—ஒரு துண்டு.





XIII. முதுகெலும்பில் முதல் துண்டாகிய அட்லாஸ்.





XIV. முதுகெலும்பில் இரண்டாவது துண்டாகிய ஆக்ஸிஸ்.





XV. முதுகெலும்பின் அடிப்பாகம்.




XVI. மார்பெலும்புக் கூண்டு.



XVIII. எலும்புக் கணுக்களின் சேர்க்கை— இசைவுகளில் குருத்தெலும்பு.



XVII. எலும்புக்கணுக் களின் சேர்க்கை— நரம்புக் கட்டுகள்.

## அத்தியாயம்—3.

### ப்ரபஞ்சத்தின் முக்கியமான சக்திகள், அவற்றின் உபயோகம் முதலியவை.

வினா:—ஒரு வஸ்துவின் நிறை, அல்லது, கனம் என்பது என்ன?

விடை:—ஒவ்வொரு வஸ்துவையும் இழுக்கும் சக்தி நம்முடைய பூமிக்கும் இருப்பதாக நாம் கூறினோமல்லவா? இந்த பூமி ஒரு வஸ்துவை எவ்வளவு ஊக்கத்தோடு இழுக்கிறதோ, அதையே அந்த வஸ்துவின் நிறை, அல்லது கனம் என்று நாம் குறிக்கிறோம்.

வினா:—அப்படியானால், இந்த ப்ரபஞ்சம் முழுவதிலும் நிறைந்திருக்கும், பரஸ்பரம் இழுக்கும் சக்தியின் ஓர் அம்சத்தையே நாம் வஸ்துக்களின் நிறை, அல்லது, கனம் என்று குறிக்கிறோமா?

விடை:—ஆம்.

வினா:—அப்படியானால், ஸர் ஐஸெக் நியூட்டன் ஏற்படுத்திய விதிப்படி, ஒரு வஸ்து பூமியை விட்டு ஆகாயத்தில் அதிக தூரம் போகப்போக, பூமி அதை இழுக்கும் கவர்ச்சி குறைந்துகொண்டே போகுமானால், அந்த வஸ்துவின் கனமும் குறைந்து போகுமோ?

விடை:—ஆம். ஒரு வஸ்துவை நாம் பூமியில் வைத்துக்கொண்டு நிறுக்கிறோம். அதே வஸ்துவை, மிக உயரமான ஒரு மலையின் உச்சியிலோ, அல்லது, ஆகாயத்தில் அதிக உயரத்தில் இருக்கும் ஓர் ஆகாய விமானத்திலோ வைத்து நிறுத்துப் பார்த்தால், அந்த வஸ்துவின் கனம் குறைவாகவே இருக்கும்.

வினா:—நம் பூமி, சற்றேறக்குறைய, கோழி முட்டையின் வடிவமாயிருக்கிறதென்றும், இதைச் சுற்றிலும் பல கண்டங்களும், கடல்களும் இருக்கின்றனவென்றும் சொல்லுகிறார்களே. பூமியின் கவர்ச்சி எல்லாப் பக்கங்களிலும் உறைக்குமல்லவா?

விடை:—ஆம், உறைக்கும். இந்த பூமி, பந்து உருளுவதுபோல், ஒவ்வொரு நாளும் புரண்டு ஒரு கரணம் போடுகிறது. பகலில் நாம் சூரியனை நோக்கி நிற்கிறோம்; இரவில் சூரியனை விட்டு விலகி, எதிர்ப்பக்கமாய்ப் போய்த் தலைகீழாய்த் தொங்குகிறோம். இதேபோல, நமது கால்களுக்கு நேரில் எதிர்த்திக்கில் இருக்கும் அமெரிக்கர்கள், அவர்களுக்கு எப்போது பகல் வேளையோ, அப்போது அவர்கள் சூரியனை நோக்கி நிற்கிறார்கள்; அவர்களுக்கு எப்போது இரவோ, அப்போது தலைகீழாய் மாறுகிறார்கள். ஆனால், நாமோ, அவர்களோ, ஒவ்வோர் இரவிலும் தலைகீழாய் மாறுவதை உணருகிறதே இல்லை; அப்படி மாறும் சமயத்தில் நாம் பூமியை விட்டு பாதாளத்தில் வீழ்ந்து விடுகிறதுமில்லை. ஏனென்றால் பூமியின் இழுப்பு நாலாபக்கங்களிலும் இருக்கிறது.

வினா:—நாம் பூமியைக் குடைந்து, உள்ளே ஒரு வஸ்துவைக் கொண்டுபோவதாக வைத்துக்கொள்வோம். 



அப்போது அந்த வஸ்துவின் கனம் அதிகரிக்குமா, குறையுமா?

விடை:—நாம் கீழே போகப்போக, கனம் குறைவதாகத் தோன்றும். ஏனென்றால், பூமியின் ஒரு பாகம் நமக்கு மேலே போய்விடுகிறதாகையால், மேல்பாகத்தின் கவர்ச்சி அந்த வஸ்துவை மேல் நோக்கி இழுக்கிறதாகையால், அதன் நிறை குறைந்து தோன்றுகிறது. அப்படியே நாம் பூமியின் நடுமையத்திற்கு அந்த வஸ்துவைக் கொண்டு போய்விட்டால், அதற்கு சிறிதும் கனமே இல்லாமல் போய்விடும். ஏனென்றால், பூமியின் நாலாபக்கங்களிலும் இருக்கும் வஸ்துக்களை இழுக்கும் சக்தி முழுதும் பூமியின் நடுமையத்தில் போய் முடிகிறதாகையாலும், அந்த இடத்தில் உள்ள வஸ்துவை, பூமியின் எல்லா பாகங்களிலும் சமமான விசையோடு இழுக்குமாதலாலும், அந்த வஸ்து அப்படியே ஓய்ந்து நிற்கும்; அதற்கு கனமே இராது.

வினா:—அப்படியானால், ஒரே வஸ்துவின் கனம் இந்த பூமியின் எல்லா இடங்களிலும் ஒரே நிறையாயிருக்காதென்றல்லவா அர்த்தமாகிறது?

விடை:—ஆம். நம்முடைய இந்த பூமி தெற்கு வடக்கு துருவங்களில் சிறிது சப்பையாயிருக்கிறது; நடுவில் உருட்சியாய்ப் பிதுங்கி யிருக்கிறது. அதற்கு நாம் ஓர் எலுமிச்சம் பழத்தை உவமையாகச் சொல்லலாம். அப்பழத்தில் காம்பு இருந்த பாகமும், அதற்கு எதிர்ப்பக்கத்தில் 'பூ' இருந்த பாகமும் சப்பையாயிருக்கின்றன. மற்ற பாகம் உருட்சியாயும் உப்புசமாயுமிருக்கிறது. இந்த எலுமிச்சம் பழத்தின் உள்ளீட்டில் இருக்கும் நடுமையத்திலிருந்து அளந்து பார்த்தால், சப்பையாயிருக்கும் இரண்

டிடங்களும், மற்ற பாதத்தைவிட, நடு மையத்திற்குக்
கிட்ட இருக்கும். அதாவது, நடு மையத்திலிருந்து மற்ற
பாகம் ஓர் அங்குல தூரத்தி லிருந்தால், சப்பை பாகங்கள்
ஓர் அங்குலத்தைவிடக் குறைவான தூரத்திலேயே இருக்
கும். இதேபோல, நம் பூமியின் வடக்கு தெற்குக் கோடி
கள் சப்பையாயிருப்பதால், மற்ற பாகங்களைவிட அவை
பூமியின் நடு மையத்திற்குக் கிட்ட இருக்கின்றன. ஆகை
யால், ஒரு வஸ்துவின் கனம், மற்ற இடங்களில் இருப்
பதைவிட, வடக்கு தெற்கு துருவங்களில் அதிகமா
யிருக்கும்.

வினா:—ஸர் ஐஸெக் நியூட்டனுடைய விதிப்படி,
ஒவ்வொரு வஸ்துவும் ஒன்றையொன்று இழுத்துக் கொள்
வதாகத் தெரிந்து கொண்டோமே. நம்முடைய பூமிக்குள்,
அதன் கவர்ச்சி ஒன்றாகக் கூடும் நடு மையம் இருப்பது
போல, மற்ற ஒவ்வொரு வஸ்துவிற்கும் உண்டல்லவா?

விடை:—ஒவ்வொரு வஸ்துவிற்கும் அம்மாதிரியான
மையம் உண்டு. அதை இங்கிலீஷில் ஸென்டர் ஆப்
கிராவிட்டி (Centre of Gravity) என்று குறிக்கிறார்கள்.
அதை நாம் ஒரு வஸ்துவின் கன மையம், கவர்ச்சி
ஸ்தானம், அல்லது, ஆகருஷண மையம் என்று குறிக்கலாம்.

வினா:—அந்த மையஸ்தானத்தில் உள்ள அணுக்கள்
மற்ற இடங்களிலுள்ள அணுக்களைவிட அதிகமான சக்தி
வாய்ந்தவைகளா யிருக்குமோ?

விடை:—அணுக்கள் எல்லா இடங்களிலும் ஒரே
மாதிரியான அமைப்பும், வலுவும் உடையவைகளாகத்தான்
இருக்கும். ஆனால் ஒரு வஸ்துவிலுள்ள எல்லா அணுக்
களிலிருந்தும் உண்டாகும் கவர்ச்சி மொத்தமாய்ச்சேர்ந்து,



அந்த மைய ஸ்தானத்திலிருந்து உண்டாவதுபோலத்
தோன்றும். வெளியிலுள்ள வஸ்துக்களெல்லாம் அந்த
மைய ஸ்தானத்தின் வாட்டமாகவே நேராய் இழுக்கப்படும்;
அதாவது, ஒரு வஸ்துவின் அணுக்களில் பெரும்பாக
மானவை எவ்விடத்தில் அடர்ந்திருக்கின்றனவோ அவ்
விடத்தில் கனமும் பெரும்பாகமா யிருக்குமாதலால், அவ்
விடத்தில் கவர்ச்சியின் மூலஸ்தானம் இருப்பதுபோலத்
தோன்றும்.

வினா:—அதாவது, ஒரு வஸ்துவின் அடர்த்தி, அல்
லது, நிறைவு என்பதும், அதன் கனமும் ஒன்று?

விடை:—ஒரு வஸ்துவின் அடர்த்தி, அல்லது,
நிறைவு என்பது அதில் அடங்கியுள்ள மொத்த சாமானைக்
குறிக்கிறது. நிறை, அல்லது, கனம் என்பது பூமியின் கவர்ச்
சியாகிய சக்தி அதன்மேல் எவ்வளவு உறைக்கிறதென்ப
தைக் காட்டுகிறது. ஒரு மணங்கு கனமுள்ள ஒரு கட்
டையை நாம் பூமியின்மேல் வைத்துக்கொண்டு நிறுத்தால்,
அது ஒரு மணங்கு கன மிருக்கும்; அதையே ஓர் ஆகாய
விமானத்தில் ஏற்றிக்கொண்டு, நான்கு மயில் உயரத்தில்
போய்நிறுத்தால், அதன் கனம் ஒரு மணங்கைவிடக் குறை
வாயிருக்கும். இப்படி அந்தக் கட்டையின் கனம் இரண்
டிடங்களிலும் வித்தியாசப்பட்டாலும், அதிலுள்ள சாமான்
குறையாமல் ஒரே அளவாய் இருக்கும்; அதாவது, அந்த
வஸ்துவின் அடர்த்தி, நிறைவு, அல்லது, பருமன் மாறாமல்
அப்படியே இருக்கிறது. ஒரு வஸ்துவை எங்கே கொண்டு
போனாலும், அதில் அடங்கியுள்ள சாமான் மாறுப்படுகிறதில்லை.
பூமி அதை இழுக்கும் கவர்ச்சியே வேறுபடுகிறதாகையால்,
அந்த வஸ்துவின் கனம், அல்லது, நிறை வித்தியாசப்படு
கிறது. இந்த உதாரணத்திலிருந்து ஒரு வஸ்துவின் கனத்

திற்கும், அதன் அடர்த்தி, அல்லது, பருமனுக்கும் உள்ள நுட்பமான வித்தியாசம் நன்கு விளங்கும்.

வினா:—இந்த ப்ரபஞ்சக் கவர்ச்சியாகிய ஆகருஷண சக்தியைத் தவிர, வேறு முக்கியமான சக்திகள் ஏதேனும் இருக்கின்றனவா?

விடை:—வேறு இரண்டு சக்திகள் இருக்கின்றன. அவைகளை நாம் இரண்டு உதாரணங்களைக் கொண்டு விளக்குவோம். நாம் ஏற்கனவே குறிப்பிட்ட அம்மிக் குழவியின் உதாரணத்தையே நாம் மறுபடி எடுத்துக் கொள்ளலாம். அதை நாம் உடைத்துத் தூளாக்கி அணு வணுவாகப் பிரிக்கு முன்னர், அவ் அணுக்களை ஒன்றாகச் சேர்த்து இறுகப் பிடித்துக்கொண்டிருந்த சக்தியைப் போன்ற, அணுக்களை ஒன்றாகப் பிணைக்கும் சக்தி இந்த ப்ரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலுமிருக்கிறது. இவ்வாறு அணுக்களை ஒன்று சேர்க்கும் சக்தியை இங்கிலீஷில் கோ ஹீஷன் (Co-hesion) என்று குறிக்கிறார்கள். கிரந்தத்தில் ஈஷணம், ஈஷல் என்ற சொற்களும், தமிழில் ஈழ்ப்பு, ஈழ்த்தல் என்ற சொற்களும் சம்பந்தமுடையவை. பல அணுக்கள் ஒன்றையொன்று ஈழ்த்துப் பிடித்துக் கொண்டிருப்பதற்கு கோஈஷன் அல்லது கோஹீஷன் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

வினா:—பூமியின் ஆகருஷண சக்திக்கும் இந்தக் கோஹீஷன் சக்திக்கும் என்ன வித்தியாசம்?

விடை:—பூமியின் ஆகருஷண சக்தி தொலை தூரத்திலுள்ள கிரகங்களையும், பூமியின் மேல் தனித்தனி கிடக்கும் பொருள்களையும் எப்போதும் இழுத்துக் கொண்டிருக்கும் சக்தி. கோஹீஷன் என்பது ஒன்றோடொன்று



நெருங்கியுள்ள அணுக்களை ஒன்றுபடுத்துவது. பூமியின் ஆகருஷண சக்தி எல்லா வஸ்துக்களையும் தன்னிடம் இழுக்கிறதானாலும், அதனால் வஸ்துக்கள் ஒன்றுபட்டு உருமாறிப் போகிறதில்லை. கோஹீஷனில் அணுக்கள் ஒன்றுபட்டுப் பிணைந்து ஒருருவை யடைந்துவிடுகின்றன. அணுக்கள் இயற்கையிலேயே ஒன்றோடொன்று நெருங்கி இருந்தால் தான் ஒன்றோடொன்று இறுகலாய் ஒட்டிக்கொண்டிருக்கும்; பிரிந்துபோனால், மறுபடி முன்போல ஒன்றுசேருவதரிது.

நாம் இன்னோர் உதாரணத்தைக் காட்டுவோம். பஞ்சில் நெருப்பை வைத்தால், இரண்டும் ஒன்றுபட்டு எரிந்து, சாம்பலாய் மாறிப்போகின்றன. சாம்பலின் வடிவமும், குணமும், நெருப்பு, பஞ்சு முதலியவற்றின் வடிவம், குணம் ஆகியவற்றைப்போ லிருப்பதில்லை. இவ்வாறு இரண்டு அல்லது அதற்கு அதிகமான வஸ்துக்கள் ஒன்று சேர்வதால், வடிவம், குணம் முதலியவற்றில் வேறுபடும் புதிய வஸ்து ஒன்று உண்டாவதை இங்கிலீஷில் கெமிஷல் அட்ராக்ஷன் (Chemical Attraction) என்று குறிக்கிறார்கள். அதற்கு ரஸாயனக் கவர்ச்சி என்று பொருள். இது ஒரே மாதிரியான பொருட்களின் சேர்க்கையால் உண்டாவதல்ல. கோஹீஷன் என்பது ஒரே மாதிரியான பல அணுக்களின் பரஸ்பரக் கவர்ச்சியையே பெரும்பாலும் குறிக்கிறது. ரஸாயனக் கவர்ச்சி என்பது வேறு மாதிரியான வஸ்துக்களின் சேர்க்கையால் ஏற்படுகிறது. கோஹீஷனை மித்துருப் பொருட்களின் சேர்க்கையென்றும், ரஸாயனக் கவர்ச்சியை சத்துருப் பொருட்களின் சேர்க்கையென்றும் நாம் பெரும்போக்காகக் குறிக்கலாம்.

வினா:—ப்ரபஞ்ச ஆக்ருஷண சக்தி, அணுக்கவர்ச்சி, ரஸாயனக் கவர்ச்சி ஆகிய இம்மூன்றுமே முக்கியமான சக்திகள் போலும். இவை இல்லாவிட்டால், நம் காரியம் நடைபெறாதோ?

விடை:—ப்ரபஞ்சக் கவர்ச்சியாகிய பரஸ்பர ஆகருஷணசக்தி இல்லையென்று வைத்துக்கொள்வோம். அப்போது பூமி, சூரியன், சந்திரன் முதலியவை ஒன்றுக்கொன்று சம்பந்தமற்றதாகிவிடும். ஒழுங்காய் நமக்கு ஏற்படும் இரவு, பகல், ருதுக்கள் முதலியவை தாறுமாறுக் மாறிப்போம். வருஷம், மாதம் முதலிய கணக்குகள் விளங்காமல் போய்விடும். மழை, காற்று, வெயில் முதலியவை நமக்கு இல்லாமல் போய் விடும். அபாரமான விசையோடு ஓடிக்கொண்டிருக்கும் பிரம்மாண்டமான கிரகங்கள் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு நாசமடைந்து விடும். அதுவுமன்றி, பூமியின் ஆகருஷண சக்தி இல்லையானல், வஸ்துக்களுக்கு கனமே இல்லாமல் போய்விடும். நாம் ஆகாயவெளியில் நடந்து போகலாம். ஒரு வஸ்து இன்னொரு வஸ்துவோடு சேராமல் ஆகாய வெளியில் அப்படி யப்படியே மிதக்கும். பூமியில் உள்ள தண்ணீர், மலைகள் முதலிய யாவும் வெவ்வேறாய்ப் பிரிந்து திக்காலுக்கொன்றாய் சிதறிப்போகும்.

இதுபோல, கோஹீஷன் என்னும் அணுக்கவர்ச்சி இல்லையானல், இந்த ப்ரபஞ்சத்திலுள்ள, மேலே குறித்த சகலமான வஸ்துக்களும் அணுவணுவாய்ப் பிரிந்துபோகும். நம்முடைய உடம்பும் கணக்கற்ற அணுக்களாய் அலாக்காய்ப் பிரிந்து இப்போதைய வடிவத்தை இழந்துவிடும். இந்த உலகமே உருமாறி அணு மயமாய் நிறைந்து போகும்.



இதேபோல, ரஸாயனக் கவர்ச்சி என்னும் சத்துருப் பொருட்களின் சேர்க்கை யில்லையானல், நமக்கு இன்றியமையாத ஜீவாதாரமான பல வஸ்துக்கள் இல்லாமல் போகும். பிராண வாயு, ஜல வாயு என்னும் இரண்டு காற்றுக்களின் சேர்க்கையால் தண்ணீர் உண்டாயிருக்கிறது. விறகு முதலிய எரியும் வஸ்துக்களோடு நெருப்பும், பிராண வாயுவும் சேர்ந்து, நமக்குத் தேவையான அக்னியைக் கொடுத்துதவுகின்றன. இவை யாவும் ரஸாயன மாறுதல்கள்; அதாவது, சத்துருப் பொருட்களின் சேர்க்கை. இந்தக் கவர்ச்சி இல்லையானல், நமக்குத் தேவையான அக்னி, தண்ணீர் முதலியவை இல்லாமல் போகும். நாம் உயிர் வாழ்வது கூடாத காரியமாகிவிடும். ஆகையால், ப்ரபஞ்ச ஆகருஷண சக்தி, அணுக்கவர்ச்சி, ரஸாயனக் கவர்ச்சி ஆகிய மூன்று சக்திகளும் இல்லையானல், இந்த சிருஷ்டியே தூள் மயமாய் மாறி, பரஸ்பர சம்பந்தமின்றி, ஓய்ந்து உயிரற்று அப்படி யப்படியே கிடக்கும்.

வினா:—இந்த பூமி இதைச்சுற்றி நாலா பக்கங்களிலும் உள்ள வஸ்துக்களை இழுக்கும் ஆகருஷண சக்தி முடிவாக பூமியின் நடு மையத்தில் போய் ஒன்றாய்ச் சேருகிறதென்று தெரிந்து கொண்டோமல்லவா?

விடை:—அதை நாம் அப்படிச் சொல்வதைவிட வேறுவிதமாகச் சொல்வதே பொருத்தமானதாயிருக்கும். இந்த பூமிக்கு ஏற்பட்டுள்ள மொத்த ஆகருஷண சக்தியும் ஒன்று சேர்ந்து இதர வஸ்துக்களை இழுக்கும்போது, அந்த சக்தி இந்த பூமியின் மையத்தில் இருந்துகொண்டு அதே நேரில் ஷை வஸ்துக்களை இழுப்பதுபோலத் தோன்றும்.

வினா:—நாம் ஓர் இரும்புச் சல்லடையை எடுத்துக் கொள்ளுவோம். நம் பூமியின் ஆகருஷண சக்தி, பூமியின் மையம் இருக்கும் திக்கில் அந்தச் சல்லடையின் முழு பாகத்தையும் இழுக்குமா? அதாவது, அந்தச் சல்லடையில் கணக்கில்லாமல் அடர்ந்து கிடக்கும் ஒவ்வோர் அணுவையும் தனித்தனி இழுக்குமா?

விடை:—தனித்தனி இழுக்கிறதென்பது ஒரு விதத்தில் உண்மையானாலும், அந்தச் சல்லடையின் கன மையஸ்தானத்திலேதான் பூமியின் ஆகருஷண சக்தி நேராக உறைக்கும். கன மையஸ்தானத்தை நாம் இனி ஆகருஷண மையம் என்றே குறிப்போம்.

வினா:—ஒரு சல்லடையின் ஆகருஷண மையம் எங்கிருக்கிறதென்பதை நாம் எப்படிக் கண்டுபிடிக்கிறது?

விடை:—சல்லடையைப்போல சக்கர வட்டமாய் இருக்கும் சாமான்களின் ஆகருஷண மையம் அநேகமாய் அவற்றின் நடுமையத்திலேயே அமைந்திருக்கும். உதாரணமாக, நாம் ஒரு சிறிய தாம்பாளத்தை எடுத்து, அதைத் தலைகீழாகத் திருப்பி, ஒரே ஒரு விரலில் நிறுத்த எத்தனித்தால், அநேகமாய், அந்தத் தாம்பாளத்தின் நடுமையத்தின் கீழேயே நம்முடைய விரல் இருக்க வேண்டியதாகும். வித்தையாடிகள் சிலர் பல அளவிலுள்ள தாம்பாளங்களை வைத்துக் கொண்டு, ஒவ்வொன்று யெடுத்து, அதை ஒற்றை விரலின் நுனியில் வைத்துக்கொண்டு நிரம்பவும் விசையாகச் சுழற்றி விட்டு அப்படியே நிறுத்திக் கொண்டிருப்பார்கள். அது கீழே விழாமல் ஒற்றை விரலின்மேல் இருந்த படியே சுற்றிக் கொண்டிருக்கும். விரலை ஓர் எள்ளளவு அந்தஸ்தானத்திலிருந்து அப்புறம் இப்புறம் நகர்த்தினால், தாம்பாளம்



உடனே கீழே விழுந்து விடும்; அந்தத் தாம்பாளத்தின் கனம் முழுதும் அந்த மைய நிலையில் சரி சமமாக நிரவிக் கொண்டு நிற்கிறதாகையால், அதுவே அதன் கனத்தின் மையமாகும். பூமியின் ஆகருஷண சக்தி அந்த மையத்தை நேராகப் பிடித்திழுக்குமாதலால், அந்த மையத்தை ஷை- சாமானுடைய ஆகருஷண மையமென்று நாம் சொல்லலாம். நாம் மேலே குறித்த சல்லடையையும் தாம்பளத்தைப் போல ஒற்றை விரலில் நிறுத்தலாம். விரல் சல்லடையைத் தாங்குமிடம் அநேகமாய் அதன் நடுமைய மாகவே இருக்கும்.

வினா:—ஒரு சாமான் சல்லடையைப்போல் சக்கர வட்டமாயிராமல், மணைப்பலகையைப் போல் நாற்சதுர வடிவமாயிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அப்போது அதன் ஆகருஷண மையத்தை எப்படிக் கண்டுபிடிக்கிறது?

விடை:—ஒரு பலகைக்கு நான்கு மூலைகள் இருக்கின்றன வல்லவா? அவைகளை வரிசைக்கிரமத்தில் 1, 2, 3, 4 என்று குறிப்போம். 1வது மூலையையும், 3வது மூலையையும் சேர்த்து நேராக ஒரு கோடு கிழிக்கிறது. அதே போல 2வது, 4வது மூலைகளைச் சேர்த்து நேராக ஒரு கோடு கிழிக்கிறது. இவ்விதமாக ஏற்படும் இரண்டு குறுக்குக் கோடுகளும் எந்த இடத்தில் ஒன்றையொன்று சந்திக்கிறதோ, அந்த இடமே, அநேகமாய், அதன் ஆகருஷண மையமா யிருக்கும். அவ்விடத்தில் ஒரு கோலைக் கொடுத்து அசைக்காமல் தாங்கினால், பலகை கீழே விழாமல் அப்படியே நிற்கும்.

வினா:—பலகை நாற்கோணமாய் இராமல், முக்கோணமாயிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்போது எப்படி ஆகருஷண மையத்தைக் கண்டு பிடிக்கிறது?

விடை:—அதுவும் சுலபமானதே. முக்கோணமாயிருக்கும் பலகைக்கு மூன்று பக்கங்களும், மூன்று மூலைகளும் இருக்குமென்று சொல்வது அநாவசியமானது. நாம் ஒரு நூல் கயிற்றை வைத்துக்கொண்டு, ஷை முக்கோணப் பலகையின் ஒரு பக்கத்தை அளந்து, அந்த அளவை இரண்டாய் மடித்து வைத்து, அவ்விடத்தில் ஓர் அடையாளப் புள்ளிவைத்தால், அது அந்தப் பக்கத்தை இரண்டு சரிபங்குகளாய்ப் பிரித்ததுபோலாகும். அந்த அடையாளப் புள்ளியிலிருந்து, அதற்கு எதிரிலிருக்கும் மூலைக்கு நேராய் ஒரு கோடு கிழிக்கிறது. அதேபோல இன்னொரு பாக்த்தை சரிசமமாக வகுத்து, அடையாளப் புள்ளி வைத்து அந்தப்புள்ளிக்கும், அதற்கு எதிரிலிருக்கும் மூலைக்கும் ஒரு கோடு கிழிக்கிறது. அப்படிக் கிழிக்கப்பட்ட இரண்டு கோடுகளும் ஒன்றையொன்று சந்திக்கும் இடமே அந்தப் பலகையின் ஆகருஷண மையமாகும். அந்த இடத்தில் விரலையோ, ஒரு கோலையோ வைத்து அசையாமல் மெதுவாக மேல் பக்கத்தில் பலகையை வைத்தால், அது சாயாமல் சமமாய் அப்படியே நிற்கும். இப்படி இரண்டு பக்கங்களின் மையங்களை எதிர் மூலைகளோடு சேர்க்காமல், வேறு விதமாகவும், ஆகருஷண மையத்தைக் கண்டு பிடிக்கலாம். ஒரு பக்கத்தின் மையத்திலிருந்து, எதிர் மூலைக்குக் கோடு கிழிக்கிறது. ஷை பக்கத்தின் மையத்திலிருந்து, ஷை கோட்டின் மூன்றில் ஒரு பாகம் எங்கு முடிகிறதோ, அந்த இடமே ஆகருஷண மையம் என்று கண்டுபிடித்து விடலாம்.

வினா:—இப்போது குறித்த உதாரணங்களில் வந்துள்ள சல்லடை, நாற்சதுரப் பலகை, முக்கோணப்பலகை ஆகியவை சரியான அளவும், சரியான தடிப்பும் உடையவைகளாய் இருந்தால்தானே இந்தக் கணக்கின்படி ஆகருஷண



மையத்தை நாம் கண்டுபிடிக்கலாம்? நாம் மேலே குறித்த சல்லடை பல இடங்களில் மூளியாய்ப் போயிருப்பதாக வைத்துக் கொள்வோம். அல்லது, அது பல இடங்களில் பிய்ந்துபோயிருப்பதாகவோ, அது பல இடங்களில் கனமான இரும்புத் தகடுகளால் ஒட்டுப் போடப் பெற்றிருப்பதாகவோ வைத்துக் கொள்வோம். அப்போது அதன் ஆகருஷண மையத்தை எப்படிக் கண்டுபிடிக்கிறது?

விடை:—அதையும் நாம் சுலபத்தில் கண்டுபிடிக்கலாம். நீளமான ஓர் ஆணியை சுவரில் அடிக்கிறது; தாறுமாறான தோற்றமாயிருக்கும் இரும்புச் சல்லடையை அதன் ஓரத்தில் உள்ள ஒரு துவாரத்தின் மூலம் அந்த ஆணியில் மாட்டித் தொங்கவிடுகிறது. சல்லடையின் பெரும்பாகமும் அந்த துவாரத்திற்கு எந்தப் பக்கத்திலிருந்தாலும், அந்தப் பெரும்பாகமும் ஷை ஆணிக்கு நேராய்க் கீழே நகர்ந்துகொள்ளும். அந்த நிலையில் சல்லடை அசையாமல் நிற்கும்படி செய்த பின், ஒரு கயிற்றை எடுத்து அதன் ஒரு நுனியை ஷை ஆணியில் கட்டி, இன்னொரு நுனியில் ஓர் இரும்புக் குண்டைக் கட்டித் தொங்க விட்டால், அந்தக் குண்டு கயிற்றை உறுதியாய் இழுத்துக் கொண்டு, பூமியின் மையத்திற்கு நேராய் நிற்கும். அந்தக் கயிறு சல்லடையின் மேல் படும் நீளத்திற்கு, சுண்ணாம்பினால் ஒரு கோடு கிழித்துக் கொள்ளுகிறது. பிறகு கயிற்றையும், சல்லடையையும் ஆணியை விட்டு எடுத்துவிட்டு, சல்லடையைக் கொஞ்சம் புரட்டிக் கொடுத்து வேறொரு துளையால் அதை ஆணியில் மாட்டி, அதற்கு மேல், முன்போல, இரும்புக் குண்டோடு கூடிய கயிற்றைக் கட்டிவிட்டு, கயிறு தொங்கும் வாட்டத்தில் சுண்ணாம்பினால் முன்போல ஒரு கோடு கிழிக்கிறது. அப்போது சல்லடையின்மேல் சுண்

ணும்புக் கோடுகள் இரண்டு கிழிக்கப்பட்டிருக்குமல்லவா? இரண்டும் ஒன்றையொன்று சந்திக்கும் இடம் எதுவோ, அதுவே அந்தச் சல்லடையின் ஆகருஷண மையம் என்று வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு கோலின்மேல் அந்த இடம் தங்கும்படி சல்லடையை அதன்மேல் மெதுவாக வைத்தால், சல்லடை கீழே சாயாமல் சம கனமாகக் குடை போல நிற்கும். அந்தச் சல்லடையை எந்தத் துளையின் மூலம் ஆணியில் மாட்டிக் கயிற்றின் வாட்டமாய்க் கோடு கிழித்தாலும், அந்தக் கோடு, முதல் இரண்டு கோடுகளும் சந்தித்த இடத்தில் வந்து அவசியம் சந்தித்தே தீரும். அதுவன்றி நாம் இப்படித் தொங்கவைக்கும் ஒவ்வொரு தடவையிலும், சல்லடையின் ஆகருஷண மையம் ஆணிக்கு நேராய் அதன்கீழ் வந்து நிற்கும்.

அதாவது, ஒரு வஸ்துவை ஏதாவது ஒரு பிடிப்பில் மாட்டித் தோங்கவிட்டால், அதன் ஆகருஷண மையம் அந்தப் பிடிப்பிற்கு நேர் கீழாக இருக்கும்படி அந்த வஸ்து எப்போதும் தோங்கும். ஒரு வஸ்துவைத் தோங்க வைக்கும் பிடிப்பு, அந்த வஸ்துவின் ஆகருஷண மையம், பூமியின் மையம் ஆகிய மூன்றும் எப்போதும் ஒரே நேரில் நிற்கும். இது வன்றி, இந்த ஆகருஷண மையம் சம்பந்தமாய் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கியமான இன்னொரு விதியும் இருக்கிறது.

வினா :—அது என்ன?

விடை :—ஒரு வஸ்துவை சரிமட்டமான ஓர் இடத்தில் நிற்க வைக்கிறோம். அந்த வஸ்துவின் ஆகருஷண மையத்திலிருந்து பூமியின் மையத்தை நோக்கி இழுக்கப்படும் கோடு,



அந்த வஸ்துவின் அடிப்பாகத்திற்கு உள்ளடங்கியதா யிருந்தால், அந்த வஸ்து அப்படியே நிற்கும்; டி கோடு வெளியில் போனால், அந்த வஸ்து குடைச்சாய்ந்து போகும்.

வினா :—விளங்கவில்லை.

விடை:—ஒரு மனிதன் தரையில் நிற்பதாக வைத்துக் கொள்வோம். அவனுடைய இரண்டு பாதங்கள் பூமியில் படும் இடங்களும், அவற்றின் நடுவில் உள்ள இடை வெளியுமே அவனுடைய அடிப்பாகம். அவன் நேராக நிமிர்ந்து நிற்கும்போது, அவனுடைய உடம்பின் ஆகருஷண மையம் அந்த அடிப்பாகத்திற்கு நேராய் மேலே இருக்கிறது. ஆகையால், அவன் கீழே விழாமல் நிற்கிறான். அவன் தன் உடம்பை முன் புறத்தில் வளைத்துக் கொண்டே இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவனுடைய இடுப்பு வரையில் அவன் முன்பக்கத்தில் வளையலாம்; அது வரையில் அவனுடைய உடம்பு நிற்கும். இடுப்பிற்குக் கீழ்ப் பாகத்தையும் அவன் வளைத்து முன் பக்கம் கொண்டு போக முயன்றால், அவன் உடனே முன் பக்கத்தில் விழுந்து விடுவான். ஏனென்றால், அவனுடைய கனத்தின் மத்தியபாகம் இடுப்பிற்குக் கீழாக இருக்கிறது. அந்த பாகம் அவனுடைய அடிப் பாகத்திற்கு நேராக மேலே இருக்கும் வரையில் அவன் நிற்கிறான்; அது சற்று விலகி எந்தப் பக்கம் போனாலும், அந்தப் பக்கத்தில் அவனுடைய உடம்பு சாய்ந்து போகும். சாமான்வண்டிகள் குடைச் சாய்வதும் இதே காரணத்தினால்தான். ஒரு வண்டியில், அதன் இரண்டு சக்கரங்களுக்கும் உள்ளடங்கிய பாகமே அதன் அடிப்பாகம். அந்த வண்டியில் மூட்டைகளை அடுக்கும் போது, அவற்றின் பளுவின் பெரும்பாகமும், சக்கரங்களுக்கு உள்பட்ட பாகத்திற்கு நேர் மேலாக இருந்தால்

தான், வண்டி சாயாமல் இருக்கும். மூட்டைகளின் பளுவில் பெரும்பாகமானது, அந்த அடிப்பாகத்திற்குப் பின்னால் சிறிதளவு உறைத்தால், வண்டி உடனே பின்பக்கம் சாய்ந்து போகிறது.

ஒரு வண்ணான் பெரிய துணி மூட்டையை முதுகின் மேல் போட்டுக்கொண்டு நடந்து போகையில், அவன் தன்னுடைய உடம்பின் மேல் பாகத்தை முன் பக்கமாக வளைத்துக்கொண்டே நடக்கிறான். ஏனென்றால், அந்த மூட்டையின் கனம் நேராக அவனுடைய இரண்டு கால்களுக்கும் நடுவில் அழுந்தும் பொருட்டு, உடம்பின் மேல் பாகத்தை சிறிதளவு முன்னால் வளைக்கிறான். அப்படி வளைத்தால், அந்த மூட்டை அவனுடைய கால்களுக்கு நேராய் மேலே வந்து விடுகிறது. மூட்டையின் ஆகருஷண மையமும், அவனுடைய உடம்பின் ஆகருஷண மையமும், அவன் நிற்கும் அடிப்பாகத்திற்கு உள்ளாகவே அழுந்துகின்றன. ஆகையால் அவன் விழாமல் இருக்கிறான். அப்படி யின்றி, பெரிய மூட்டையை ஒருவன் தன் முதுகில் கட்டிக்கொண்டு நேராக நிமிர்ந்து நின்றால், மூட்டையின் ஆகருஷண மையம் அவனுடைய பாதங்கள் இருக்கும் நேருக்கு வெளிப்பட்டுப் போகிறதாகையால், அவன் உடனே மூட்டையோடு பின் பக்கம் சாய்ந்து விடுவான்.

இந்த ஆகருஷண மையம் சம்பந்தமாய் நாம் இன்னொரு முக்கியமான விஷயத்தைத் தெரிந்துகொள்வது அவசியம். அதாவது, ஒரு வஸ்துவில் ஆகருஷண மையம் எவ்வளவுக்கெவ்வளவு அடியில் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அது உறுதியாய் நிற்கும். ஒரு வண்டியில், பளுவான கருங்கல்கள், அல்லது, இரும்புச் சாமான்கள் முதலியவற்றை ஏற்றியிருந்தால், அவற்றின் ஆகருஷண மையம், வண்டியின் அச்சிற்கு அருகில் இருக்குமாதலால், வண்டி குடைச் சாயாது. வண்டிக்கு மேல் ஆறு, ஏழு அடி உயரம் மூட்டைகளை அடுக்கினால், அவற்றின் ஆகருஷண மையம் உயரத்தில் போய்விடுகிறது. அந்த நிலைமையில், அது சொற்பம் சாய்ந்தாலும், குடைக் கவிழ்ந்து போகும்.


## தமிழ் நாட்டு மகா ஜனங்களுக்கு

# முக்கிய அறிவிப்பு

'பலதுளி பெருவெள்ளம்' என்பதுபோல, வெள்ளைக்காரர்கள், நமக்குத் தெரியாமல் எத்தனையோ வழிகளில் நம் நாட்டின் பொருளை அபகரித்துக் கொண்டு போகிறார்கள். வற்றாத பல ஆறுகள் சமுத்திரத்தை நோக்கிப்போய் வருஷ முழுதும் விழுந்து கொண்டே இருப்பதுபோல, இராஜீயத் துறையில் சம்பளமென்றும், பென்ஷன் என்றும், தளவாடங்களென்றும் பெயர் பூண்டு கோடி கோடியான பொருள் இங்கிருந்து வெள்ளையர் நாட்டிற்குப் போனமணியமாயிருக்கிறது. அதுவன்றி, வர்த்தகத் துறையில் நமக்கு ஏற்பட்டுள்ள கணக்கற்ற புது நாகரிகத் தேவைகள், ரயில் வண்டிப் பிரயாணம் முதலியவற்றால் நம் நாட்டுப் பணம் வெள்ளையருடைய தேசங்களுக்குப் போவதை நாம் கணக்கிட்டால், நம் மூளை கலங்கிப் போவது நிச்சயம்.

இத்தனையும் துரைத்தனத்தாருடைய சட்டங்களின் உதவியாலேயே நடைபெறுகின்றன. இவ்வாறு சட்ட சம்மதமாய், நம் நாட்டு மக்களின் உயிரைப் பருகும் பல பேய்களில், கல்வி இலாகாவும் ஒன்று.

நம் நாட்டில் பாலர் வகுப்பு முதல், எம். ஏ., வரையில் உள்ள பொதுக்கல்வி, சட்ட கலாசாலைக் கல்வி, வைத்திய கலாசாலைக் கல்வி முதலிய சகலமான கல்வித் துறைகளிலும், இந்த ராஜதானி முற்றிலும் வருஷம் முழுதும் தேவையாகும் சகலமான புஸ்தகங்களையும் தயாரித்து விற்கும் உரிமையை சில வெள்

ளைக்காரக் கம்பெனியார்களே வைத்துக் கொண்டிருக்கிறார்களாதலால், கல்வியின் பெயரால் ஒவ்வொரு வருஷமும் அவர்கள் நம் நாட்டிலிருந்து திரட்டிக் கொண்டு போகும் பொருள் எத்தனையோ கோடிக்கு எட்டுகிறது.

முக்கியமாய் மேல்நாட்டுக் கலைக்ஞான சாஸ்திரங்களெல்லாம் இங்கிலீஷ் பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. அவை நம் நாட்டுப் பொது ஜனங்களுக்கு சிறிதும் பயன்படாமல் இருந்து வருகின்றன. அவைகளை தமிழில் ஆக்க வேண்டுமென்று பாரதியார் தம் கவியின் மூலம் கோஷித்திருக்கிறார். அதை நம்மவர் பெருமையாய் எடுத்துக் காட்டுகின்றனரேயன்றி காரியத்தில் அதைக் காட்டி எவரும் துணிந்து ஒரு புஸ்தகம்கூட எழுத முன்வருகிறதில்லை.

இதே கருத்தோடு சில கனதனவான்கள் தமிழ் அன்பர் மகாநாட்டைக் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றினார்களானாலும், அவர்கள் இன்னவிதமாக வேலை செய்யப் போகிறார்கள் என்னும் குறிப்பே இன்னமும் நமக்குத் தெரியவில்லை.

'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை' என்னும் பழமொழிக் கிணங்க, வெள்ளைக்காரர்கள் எந்த விஷயத்திலும், பலர் ஒன்றுசேர்ந்து, சரியான மூலதனம் வைத்து, கூட்டுக் கம்பெனிகளை ஸ்தாபித்து, கண்டிப்பான சட்டதிட்டங்களை ஏற்படுத்தி வர்த்தகம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அது அபாரமான பலனை நீடித்துத் தந்து, மேன்மேலும் அபிவிருத்தியடைந்து நிலைத்துப் போகிறது. நம்மவர் அவ்வாறு ஒன்று சேருகிறதுமில்லை; முதல் வைத்து சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வேலை செய்கிறதுமில்லை. எனவே, நம்மவருக்கு பெருத்த லாபத்தைத் தரக் கூடிய கம்பெனி எதுவும் ஏற்படுகிறதில்லை.

67 193259

முக்கியமாய் மேல் நாட்டாரின் கலைக்ஞான விக்ஞான சாஸ்திரங்களையும், நம் குழந்தைகளின் கல்விக்குத் தேவையான புஸ்தகங்களையும் நாம் தயாரிப்பதென்ற தீர்மானத்தை நாம் செய்துகொண்டால், அதனால், நம் ஜனங்களின் கல்வியும், தமிழ்ப் பாஷையும் அபிவிருத்தி யடைவதன்றி, நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகும் கோடிக்கணக்கான பொருளில் ஒருபாகமாகிலும் நம் ஜனங்களிடம் தடைப்பட்டு நிற்குமென்பது நிச்சயம். நாம் பொருளைப்பற்றி அவ்வளவாக அக்கரை கொள்ளாவிட்டாலும், மேல்நாட்டு சாஸ்திரக் ஞானம் நம் ஜனங்களுக்கு இன்றியமையாததாகையால், அதன் பொருட்டாகிலும் பலர் ஒன்றுசேர்ந்து பாடுபட வேண்டுமென்பதை எவரும் மறுக்கமுடியாது.

அந்தக் கருத்தை என்னாலானவரையில் நிறைவேற்றி வைக்கவும், அந்தத் துறையில் வழிகாட்டியாய் நடந்துகொள்ளவும் வேண்டுமென்ற கருத்துடனேயே நான் இந்த ஓரியன்டல் ஹோம் யூனிவர்ஸிட்டி என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிறேன் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

ஆயினும், தனிப்பட்ட ஒரு மனிதன் முன்னின்று இவ்வளவு பெரிய காரியத்தை நிறைவேற்றுவதென்பது பலியாத முயற்சியாகிவிடும். அதுவன்றி, இந்த ஸ்தாபனம் எப்போதும் நிரந்தரமாய் நீடித்து நிற்க வேண்டியதவசியமாதலால், இதைத் தமிழ்நாட்டு ஜனங்களுக்குச் சொந்தமான பொதுஸ்தாபனமாக்கி விட்டாலன்றி, அந்தக் கருத்து நிறைவேறுவது பிரயாசை யாகிவிடும்.

நம் நாட்டில் சுதேசமித்திரன் முதலிய ஸ்தாபனங்கள் பல ஜனங்களுக்குச் சொந்தமானதாயிருப்பது போல, இதையும் செய்துவிடக் கருதியே, இந்த அறிக்கையைத் தமிழ் மக்களுக்கு விடுத்திருக்கிறேன்.

இந்த ஸ்தாபனத்தை லிமிடெட் கம்பெனியாக்கி வாரத்திற்கு ஒருமுறை சஞ்சிகை மூலம் கலைக்ஞான

விஷயங்களை வெளியிட்டு, இதை அபிவிருத்திக்குக் கொண்டுவருவது அத்தியாவசியமான காரியமாய்ப் படுகிறது.

இதற்கு ஒவ்வொரு பங்கிற்கு ரூ. 10-வீதம் முதலில் 5000 பங்குகள் ஏற்படுத்தி, ரூ. 50,000 மூலதனமாகச் சேர்க்கவேண்டும். முதலில் ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 5-வீதம் செலுத்தப்பட வேண்டும். பின்னால் தேவையாகும்போது மிகுதியைச் செலுத்த வேண்டும். 100 பங்குகள் எடுத்துக்கொள்வோர் டைரக்டர் பதவிக்கு உரியவர்களாவர். அவ்வாறு குறைந்தது பத்து முதலாளிகளாவது முதலில் முன்னுக்கு வரவேண்டும். அவர்களோ இதர பங்காளிகளோ சென்னையிலேயே இருக்க மேண்டுமென்ற அவசியமில்லை; வெளியூர்களிலும் இருக்கலாம்.

இது சம்பந்தமாய் யார் யார் எத்தனை பங்குகள் எடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்பதை எனக்கு எழுதித் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

இதற்குத் தேவையான டைரக்டர்கள் சேர்ந்தவுடன் சட்டப்படி இதை ரிஜிஸ்டர் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள முயற்சிக்கலாம்.

தமிழ் 'நாட்டு கனதனவான்கள் ஜீவாதாரமான இந்தத் துறையில் தங்கள் கவனத்தைச் செலுத்தி, ஆகவேண்டுவதைச் செய்து, இந்த ஸ்தாபனம் நிலைத்து நிற்கச்செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வெளியூர்களில் உள்ள நம் ஏஜண்டுகள் அங்கங்கு இருக்கும் தக்க கனவான்களுடன் பேசி, எல்லோரும் இதில் பங்கெடுத்துக் கொள்ளவும், பெரிய மனிதர்கள் டைரக்டர்களாய்ச் சேரவும் முயற்சிப்பார்களென்று எதிர்பார்க்கிறேன்.

வடுவூர் - K. துரைசாமி ஐயங்கார் B.A.,

1932-59